வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
விர மலர்




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 01.05.2022 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 146 | பக்கங்கள் : 20



**07** தமிழக அரசின் 123 கோடி ரூபா உதவிக் கோரிக்கை




**09** உயிர் காக்கும் உன்னத சேவை தொழிலே



**11** இலங்கையின் இனவுறவு சிதைப்பின் பின்னணி



**16** எரிபொருள் இன்றி தடுமாறும் யாழ்ப்பாணத் தின் மீன்பிடி துறை!

# பிரதமர் மஹிந்த பதவி துறக்க மகாசங்கத்தினர் கூடி தீர்மானம்

கொழும்பு, மே. 01

**சர்வக்கட்சி இடைக்கால அரசமைப்பதற்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளடங்கலான அமைச்சரவை உடனடியாக பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி மகா சங்கத்தினர் நேற்று ஓரணியில் திரண்டு தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளனர்.**

அத்துடன், மகாநாயக்க தேரர்களின் கோரிக்கையை ஏற்று, சர்வக் கட்சி அரசமைப்பதற்கு அரசியல் பிரமுகர்கள் முன்வராவிட்டால், அனைத்து அரசியல் வாதிகளையும் நிராகரிக்கும் வகையில், மகாநாயக்க தேரர்களின் அனுமதியுடன் கூட்டு சங்க ஆணை பிறப்பிக்கப் படும் எனவும் மகா சங்கத்தினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

மகா சங்கத்தினரின் விசேட சங்க சம்மேளனம் கொழும்பு, சுதந்திர சதுக்கத்தில் நேற்று நடைபெற்றது. பேராசிரியர் ஓமல்பே சோபித தேரர், பேராசிரியர் அகலகட சிறிசுமண தேரர் உட்பட பௌத்த பீடங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான

19




வாசகர்கள், அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும்
**மே தின வாழ்த்துக்கள்**

## தமிழக முதல்வருக்கு நன்றி கூறுகிறார் வடக்கு ஆளுநர்



சென்னை, மே. 01

கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவிக்கும் எமது நாட்டுக்கு உதவி செய்ய முன் வந்த தமிழக முதல்வருக்கு இலங்கை மக்கள் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்வதாக வடக்கு மகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவிக்கும் இலங்கைக்கு 123 கோடி ரூபா மதிப்பில் உணவு, பால்மா , மருந்து, உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் தமி ழக அரசு சார்பில் வழங்க

19

## கண்ணியத்துடன் வெளியேறுங்கள்

**மஹிந்தவிடம் சு.க. வேண்டுகோள்**

கொழும்பு, மே.01

நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வந்து உங்களை நீக்கும் வரை காத்து இருக்காமல் கண்ணியமாக வெளியேறுமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர மேலும் தெரிவித்துள்ளதாவது:

நம்பிக்கையில்லா பிரேரணையை நீக்கும் வரை காத்து இருக்காமல் கண்ணியத்துடன் பதவி விலகுமாறு பல தடவைகள் மஹிந்தவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

19

## மே தின நிகழ்வைக்கூட நடத்த முடியாமல் அரசு!

**சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு**



கொழும்பு, மே. 01

மே தின நிகழ்வுகளைக்கூட , நடத்த முடியாத நிலை, ஆளுங்கட்சியான ஶ்ரீலங்கா பொது ஜன பெரமுனவுக்கு ஏற்பட்டுள்ளது - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜ

19

## வடக்கு கடற்றொழிலாளர்களுக்கு தமிழக முதல்வர் உதவவேண்டும்

யாழ்ப்பாணம், மே. 01

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக இந்திய இழுவை மடி தொழிலால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு கடற்றொழிலாளர்களுக்கு தமிழக முதலமைச்சர் உதவ முன்வரவேண்டும் என யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளன தலைவர் அன்னராசா கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றுள்ள

19




## லண்டன் நகரிலும் 'கோட்டா கோ கம'

லண்டன், மே. 01

இங்கிலாந்தில் உள்ள இலங்கையர்கள் லண்டன் பாராளுமன்றத்துக்கு முன்பாக 'கோட்டாகோகம' கிளையை அமைத்துள்ளனர்.

19

## இடைக்கால அரசு சாத்தியம் இல்லை!

**பிரதமர் மஹிந்த கூறுகிறார்**



கொழும்பு, மே. 01

"நாட்டின் தற்போதைய நெருக்கடிக்கு இடைக்கால அரசு தீர்வு அல்ல. அப்படிப்பட்ட அரசு தற்போது அமையவும் சந்தர்ப்பம் இல்லை."

- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தம்மிடம் உறுதியளித்தார் என்று அவரின் சகாவும் முன்னாள் அமைச்சருமான ரோஹித அபேகுணவர்தன எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

மகாசங்கத்தினர் எந்த நிலைப்பாட்டை எடுத்தாலும் பிரதமர் பதவியிலிருந்து தான் ஒருபோதும் விலகமாட்டார் என்றும், மக்கள் ஆணையின் பிரகாரம் அந்தப் பதவியிலிருந்து ஶ்ரீலங்கா பொது ஜன முன்னணியின் ஆட்சியை முன் நகர்த்துவார் என்றும் பிரதமர்

19

## தமிழக பா.ஜ.க தலைவர் வடக்குக்கு வருகின்றார்

கொழும்பு, மே. 01

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அழைப்பின் பேரில் தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை தலைமையிலான குழுவினர் இலங்கை வந்துள்ளனர்.

இந்தக் குழுவினர் வடக்கு மாகானத்துக்கும் விஜயம் மேற்கொள்ளவுள்ளனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அழைப்பை ஏற்று பாரத பிரதமர் நரேந்திர மோடியின் பிரதிநிதியாக அண்ணாமலை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிகழ்ச்சியில் கலந்துகொள்ள இலங்கை வந்துள்ளார். அவரை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் கொழும்பு மாவட்ட உப

19

## இப்படியும் நடக்கிறது...!

பொதுஜன பெரமுன ஆட்சிக்கு வந்த புதிதில், பத்தொன்பதை இரத்துச் செய்துவிட்டு இருபதாம் திருத்த சட்டத்தைக் கொண்டுவர முயற்சிகள் நடந்தபோது பெரமுனவுக்குள் இருந்தே சில முனகல்கள் கிளம்பின.

இதில் முக்கியமானது, இரட்டைப் பிரஜாவுரிமை உள்ளவர்களை பாராளுமன்றத்திற்குள் பிரவேசிக்க அனுமதிக்கும் வகையிலான திருத்தத்துக்கு எதிராகவே இருந்தது. அதாவது, பஸில் ராஜபக்ஷவை இலக்குவைத்தே இந்த முனகல்கள் இருந்தன.

ஆரம்பத்திலிருந்தே, பஸில் ராஜபக்ஷ கட்சிக்குள்ளேயே சிலருக்கு வேண்டப்படாதவராகவே இருந்தார். பின்னர் அவர் இவை எல்லாவற்றையும் தாண்டி பாராளுமன்றத்துக்குள் வந்ததுடன் நிதி அமைச்சராகவும் பொறுப்பேற்ற பின்னர், அரசுக்குள் மோதல்கள் வெடிக்கத் தொடங்கின.

அதன் உச்சக்கட்டமாக பஸில் ராஜபக்ஷவை வெளியேற்ற வேண்டும் என்ற குரல்கள் பலமாக ஒலித்தபோது, அவரை தான் பதவி விலக்கத் தயாராக இல்லை என்றும், அவர் பதவி விலகினால், தான் ஏற்றுக்கொள்கிறார் எனவும் ஜனாதிபதி தெரிவித்திருந்தாரென செய்திகள் அப்போது வெளிவந்தன.

அதன் அர்த்தம், சகோதரரை நான் விலக்க மாட்டேன். ஆனால், அவர் வேண்டுமானால் பதவி விலகலாம் என்பதே. கடைசியில், பிரதமரைப் பதவி விலகுமாறு விடுக்கப்பட்டுவந்த கோரிக்கை பலமடைந்தபோது, அதனைத் தடுப்பதற்காக ஒட்டுமொத்த அமைச்சரவையும் பதவி விலகியபோது, பஸிலும் பதவி விலகவேண்டி வந்தது.

இப்போதும், அதே பாசப் பிணைப்பில் இரு தலைவர்களும் முடிவெடுக்க முடியாமல் தொடர்வதால் நாடு தொடர்ந்து அரசியல் நெருக்கடியில் இருக்கின்றது.

கடைசியாக நடந்த சகோதரர்களின் சந்திப்பில், பிரதமரை (அண்ணனை) பதவி விலகுமாறு ஜனாதிபதி (தம்பி) கேட்டாரெனவும், அதற்கு, தான் எந்தத் தவறும் செய்யாதவன் என்பதால் தானாக பதவி விலகப்போவதில்லை என்று பிரதமர் திட்டவட்டமாகத் தெரிவித்தாரென்றும், தன்னை வேண்டுமானால் தம்பிக்கு இருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி பதவியிலிருந்து நீக்கலாம் எனவும் அவர் அங்கே தெரிவித்ததாகவும் பிரதமருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

தன்னை இந்தப் பதவிக்கு கொண்டுவந்த அண்ணனை அந்தப் பதவியைப் பயன்படுத்தி தானே அவரின் பதவியைப் பறிக்கத் தம்பி விரும்பவில்லை என்றும் தெரிகின்றது. ஆனால், நிலைமை நாளுக்கு நாள் மோசமாகி வருகின்ற அதேவேளை, பிரதமர் மஹிந்த அந்தப் பதவியிலிருந்து வெளியேறினால் மாத்திரமே எந்த ஓர் இடைக்காலத் தீர்வையும் பெற்றுக்கொடுக்கமுடியும் என்ற நிலைமையே இன்று நிலவுகின்றது.

காலிமுகத்திடலில் ‘கோ ஹோம் கோட்டா’ என்ற போராட்டம் தொடர்ந்து கொண்டிருக்க, அதாவது மக்கள் கோட்டாவை வீட்டுக்குப் போ என்று தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டிருக்க, அரசியல்வாதிகள் எல்லோரும் பிரதமரை இலக்கு வைத்தே தாக்குதல்களைத் தொடுத்து வருகின்றனர்.

அரசியலமைப்பு ரீதியாக பிரதமரை வீட்டுக்கு அனுப்புவது சுலபமானது என்பதால், அவர்களின் கவனம் பிரதமர் மீது இருக்கின்றது. ஆனால், அவரோ பாராளுமன்றின் ஊடாக எந்த இடைக்கால தீர்வை பெறுவதானாலும், அதற்கு ஆகக் குறைந்தது சாதாரண பெரும்பான்மையாவது வேண்டும் என்பதால், அந்த சாதாரண பெரும்பான்மையைப் பெற்றுக்கொண்டு வாருங்கள், அதாவது பாராளுமன்றத்தில் தனக்கு எதிராக நூற்றுப் பதின்மூன்று பேர் இருக்கிறார்கள் என்பதை நிரூபியுங்கள் நான் பதவியில் இருந்து விலகுகின்றேன் - என்கிறார். இதனால் இப்போது அதற்கான முயற்சியிலேயே பல தரப்பினரும் முயன்றுகொண்டிருக்கின்றனர் என்கிறது ஒரு தரப்பு.

இதில் வேடிக்கை என்னவென்றால், தனக்கிருக்கும் அதிகாரத்தை பயன்படுத்தி அந்தப் பதவியிலிருந்து அண்ணனை பதவி விலக்கமாட்டேன் என்று சொல்கின்ற தம்பியும், இந்த நூற்றுப் பதின்மூன்றுக்கு ஓடித்திரிகிறாரெனக் கொழும்பில் பரவலாகப் பேசப்பபடுகின்றது.

இப்படியே போனால், தம்பியின் பதவிக்கும் ஆபத்து வந்துவிடலாம் என்பதால், அதனையாவது பாதுகாக்க அவரே களம் இறங்கியிருக்கின்றாராம்.

இந்த அண்ணன் தம்பி மோதல்களுக்கு நடுவே, சஜித் அணியில் என்னதான் நடக்கின்றது என்று விசாரித்தால், எப்படியோ - அண்ணன் தம்பியிடையே மோதலை உருவாக்கியாகி விட்டது. அவர்களே மஹிந்தவை வீட்டுக்கு அனுப்புகின்ற வேலையை செய்து முடிக்கட்டும், அதற்குப் பிறகு அமைகின்ற இடைக்கால அரசு, பத்தொன்பதையும் மீளக்கொண்டு வரட்டும். அப்போது ஜனாதிபதியும் அதிகாரமிழந்தவராகி விடுவார். அதன்பின்னர் நாம் நமது ஆட்டத்தை தொடங்குவோம் என்று காத்திருக்கின்றனராம்.

இப்போது தெரிகின்றதா, நாட்டில் என்ன நடந்துகொண்டிருக்கின்றது என்று? எல்லாம் கதிரைக்கான போராட்டங்கள் தான்! இதில், நாமும் தலை நுழைக்கவேண்டும் என்ற கோஷம் வேறு நம்மிடையே இருந்து வருகின்றது.!

**- ஊர்க்குருவி.**

# ஜனாதிபதியை விரட்ட பல ஆயுதங்கள் உண்டு

## கூறுகிறது ஐக்கிய மக்கள் சக்தி



கொழும்புஇ மே. 01

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கட்டாயம் பதவி விலகவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியை பதவியில் இருந்து நீக்குவதற்காக அரசமைப்புச் சட்டத்தில் பல ஆயுதங்கள் இருப்பதாகவும் அவை அனைத்தையும் பயன்படுத்த ஐக்கிய மக்கள் சக்தி தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பொன்றில் அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை பலத்தை திரட்டி வருகின்றோம். முறைமையை மாற்ற மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியம். இதனால், நாங்கள் பெரும்பான்மை பலத்தை திரட்டி வருகின்றோம்.

யார் ஆதரவளிக்கின்றனர், யார் ஆதரவளிக்கவில்லை என்பதை நாங்கள் பகிரங்கப்படுத்துவோம். அப்போது மக்கள் அறிந்துக்கொள்வார்கள். நாங்கள் மக்கள் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வோம். நாங்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தாலும் இந்த மக்களை பிரதிநிதித்துவப் படுத்துகிறோம்.

ஜனாதிபதிக்கு எதிராக குற்றச்சாட்டு பிரேரணையை கொண்டு வரும் ஏற்பாடுகளும் அரசமைப்புச் சட்டத்துக்குள் இருக்கின்றது. நாங்கள் அதனையும் ஆராய்ந்துள்ளோம்.

அதனை நாங்கள் படிப்படியாக செய்யவேண்டியுள்ளது. அரசமைப்புச் சட்டத்தின் 44 ஆவது சரத்துக்கு அமைய ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும் கொண்டு வர முடியும். அதனையும் நாங்கள் செய்வோம்.

ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்பி வைக்க அரசமைப்புச் சட்டத்தில் இருக்கும் அனைத்து ஆயுதங்களையும் நாங்கள் பயன்படுத்துவோம். இந்த போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் போது அதில் இருந்து ராஜபக்ஷவினருக்கு தப்பிக்க முடியாது - என்றார். (அ)

# படகில் தமிழகம் செல்ல முயன்ற திருமலை வாசிகள் 13 பேர் கைது!



யாழ்ப்பாணம், மே. 01

திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணம் வந்து, காங்கேசன்துறை கடற்பரப்பின் ஊடாக இந்திய செல்ல முற்பட்ட 13 பேர் காங்கேசன்துறை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருகோணமலையை சேர்ந்த 5 ஆண்கள் , 5 பெண்கள் மற்றும் 3 சிறுவர்கள் உள்ளடங்கலாக 13 பேர் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை கடற்பரப்பின் ஊடாக நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு இந்தியா நோக்கிப் படகொன்றில் பயணித்தவேளை கடல் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த காங்கேசன்துறை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 13 பேரையும் கடற்படையினர் , கடற்படை முகாமில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வரும் நிலையில், அவர்களை சட்ட நடவடிக்கைக்காக பொலிஸாரிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ-03)

# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் 3 பேர் பேராசிரியர்களாக உயர்வு







யாழ்ப்பாணம், மே. 01

யாழ். பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மூவர் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

மருத்துவ பீடத்தைச் சேர்ந்த ஒருவரும், வணிக முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த இருவருமாக மூன்று சிரேஷ்ட விரிவுரையாளர்களைப் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக்கழகப் பேரவை நேற்று ஒப்புதல் வழங்கியுள்ளது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று சனிக்கிழமை காலை, துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமைய திறமை அடிப்படையில் பேராசிரியர் பதவிக்கு விண்ணப்பித்தவர்களின் மதிப்பீடு, நேர்முகத் தேர்வு முடிவுகள் நேற்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் படி, மருத்துவ பீடாதிபதியும், சமுதாய மருத்துவ மற்றும் குடும்ப மருத்துவத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளருமான மருத்துவர் இ.சுரேந்திரகுமாரன் சமுதாய மருத்துவத்துறையில் பேராசிரியராகவும், வணிக முகாமைத்துவ பீடத்தின் கணக்கியல்துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பி. பிரதீப்காந் கணக்கியலில் பேராசிரியராகவும் , மனித வள முகாமைத்துவத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஜே. றொபின்சன் மனித வள முகாமைத்துவத்தில் பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். (அ-03)



# இராணுவத்திடம் ஒப்படைத்த எங்களது உறவுகள் எங்கே?

## மன்னாரிலும் போராட்டம்

மன்னார், மே. 01

மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஒன்றிணைந்து நேற்று சனிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த போராட்டத்தில் மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத் தலைவி மனுவல் உதயச்சந்திரா, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள், உள்ளூராட்சிமன்றப் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

அரசே காணாமல் ஆக்கப்பட்டோருக்கு பதில் சொல், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் எங்கே?, சர்வதேச விசாரணை வேண்டும், ராணுவத்தின் கையில் ஒப்படைக்கப்பட்ட எமது உறவுகள் எங்கே?, 20 ஆவது திருத்தத்தை நீக்கு உள்ளிட்ட பல்வேறு வசனங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நெருக்கடிக்கு உடன் தீர்வு காண கோட்டா பதவி துறக்கவேண்டும்

## ராஜித சேனாரத்ன வலியுறுத்து



கொழும்பு, மே. 01

**"நாட்டின் தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வு காண இடைக்கால அரசு தேவையில்லை. புதிய அரசே வேண்டும். அதற்கு முன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியைத் துறந்துவிட்டு வீட்டுக்குச் செல்ல வேண்டும்."**

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன வலியுறுத்தினார்.

புதிய பிரதமருடன் இடைக்கால அரசுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்துள்ளார் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இடைக்கால அரசுக்கு ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் ஆதரவு வழங்காது. இதை எமது கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸ பகிரங்கமாகத் தெரிவித்துவிட்டார்.

அரசிலிருந்து வெளியேறிச் சுயாதீனமாகச் செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர்களைத் திருப்திப்படுத்துவதற்காகவும் தனது பதவியைத் தக்கவைப்பதற்காகவுமே இடைக்கால அரசு அமைய ஜனாதிபதி இணக்கம் தெரிவித்திருக்கலாம்.

ஜனாதிபதி விரும்பும் புதிய பிரதமர் யார்? அண்ணனை (மஹிந்த ராஜபக்ஷ) பிரதமர் பதவியிலிருந்து தான் விலகச் செல்லவில்லை என்று தெரிவித்த கோட்டாபய, எப்படி புதிய பிரதமரை நியமிக்கப் போகின்றார்?

எனவே, நாட்டின் தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வு காண இடைக்கால அரசு தேவையில்லை. புதிய அரசே வேண்டும். அதற்கு முன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியைத் துறந்துவிட்டு வீட்டுக்குச் செல்ல வேண்டும். அப்போதுதான் புதிய அரசு சுதந்திரமாகச் செயற்பட முடியும்.

தற்போதைய அரசை நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் தோற்கடித்துவிட்டு ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் புதிய அரசை நாம் நிறுவுவோம் - என்றார். (அ)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கிளிநொச்சியில் கவனயீர்ப்புப் போராட்டம்!

கிளிநொச்சி, மே. 01

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கிளிநொச்சியில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

இந்த போராட்டம் நேற்று முற்பகல் 11 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அலுவலகம் முன்பாக இடம்பெற்றது.

மாதம் தோறும் 30 ஆம் திகதி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.



இந்த போராட்டத்தில் அவர்கள் பதாதைகளை ஏந்தியிருந்ததுடன், காணாமற் போன தமது உறவுகளின் படங்களையும் தாங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஜனாதிபதி - பிரதமர் இடையே எவ்வித முரண்பாடும் இல்லை

## பஸில் ராஜபக்ஷ தெரிவிப்பு



கொழும்பு, மே. 01

"ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் எந்தவிதமான முரண்பாடுகளும் இல்லை. ஒருவரையொருவர் பதவி விலகவும் கோரவில்லை."

- இவ்வாறு முன்னாள் நிதி அமைச்சரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நிறுவுநருமான பஸில் ராஜபக்ஷ்ய எம். பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் இன்று பெரும்பாலான ஊடகங்கள் எமது அரசுக்கு எதிராகவே செய்திகளை வெளியிடுகின்றன. இதன் பின்னணியில் யார் செயற்படுகின்றார்கள் என்று தெரியவில்லை.

ஊடகங்களில் வெளிவரும் செய்திகளின்படி ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் எந்தவிதமான முரண்பாடுகளும் இல்லை. ஜனாதிபதியைப் பதவி விலகுமாறு பிரதமரோ அல்லது பிரதமரைப் பதவி விலகுமாறு ஜனாதிபதியோ கோரவில்லை. எனவே, ஊடகங்கள் உண்மைத்தன்மையுடன் செய்திகளை வெளியிடவேண்டும் நடுநிலையுடன் செயற்படவேண்டும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆட்சியை எவரும் கவிழ்க்க முடியாது. அதேவேளை, ஜனாதிபதியையும் பதவியிலிருந்து எவரும் விரட்டவும் முடியாது - என்றார். (அ)

# நாட்டை நாசமாக்கிய ராஜபக்ஷ அரசை நாம் வீட்டுக்கு விரட்டியடிக்க வேண்டும்

## கூறுகிறார் சஜித் பிரேமதாஸ



கொழும்பு, மே. 01

"வரலாற்றில் என்றுமில்லாத வகையில் நாட்டை நாசமாக்கிய ராஜபக்ச அரசை நாம் வீட்டுக்கு விரட்டியடிக்க வேண்டும்."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாராளுமன்றத்துக்குள் நடத்தப்படும் கட்சி தாவல்கள் முழுமையான சூதாட்டம். அந்தக் குப்பை மேட்டில் ஐக்கிய மக்கள் சக்தியோ, ஐக்கிய மக்கள் கூட்டணியோ விழப் போவதில்லை.

இன்று அமைச்சுப் பதவிகளும், பிரதமர் பதவியும் ஏல விற்பனை சூதாட்டத்துக்கு விடப்பட்டுள்ளது. இந்த நாற்காலி பரிமாற்றத்தால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று, 20 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் அதி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை உருவாக்கிய அரசு இன்று நாட்டை அதல பாதாளத்துக்குள் தள்ளியுள்ளது.

இந்த நாட்டைக் கட்டியெழுப்பும் பலம் ஐக்கிய மக்கள் சக்திக்கே இருக்கின்றது- என்றார். (அ)

# பெரும்பான்மையை அடுத்த வாரம் நிரூபிக்கவுள்ள ஐக்கிய மக்கள் சக்தி



கொழும்பு, மே. 01

அடுத்த வாரம் தங்களது பெரும்பான்மையை நிரூபிப்பதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற லக்ஸ்மன் கிரியெல்ல இதனைத் தெரிவித்தார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை விடயத்தில் அடுத்த வாரம் வரை பொறுத்திருக்கவேண்டும்.

அதேநேரம், பிரதிச் சபாநாயகர் தேர்வுக்காக, எமது தரப்பிலும் ஒருவரை முன்னிறுத்துவோம் என பாராளுமன்ற லக்ஷ்மன் கிரியெல்ல கூறினார். (அ)

# மருந்துகளின் விலை 40 வீதத்தால் உயர்வு

கொழும்பு, மே. 01

மருந்துகளின் விலை 40 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியுள்ளது.

60 வகையான மருந்துகளின் விலையை 40 சதவீத்தால் அதிகரித்து, சுகாதார அமைச்சர் சன்ன ஜயசுமனவினால் அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படிஇ 500 மில்லிகிராம் பரசிட்டமோல் மாத்திரையின் விலை 4 ரூபா 46 சதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இன்சுலின் சொலீயுபல் ஹீமன் ஊசி மருந்தின் விலை 2,702 ரூபா 41 சதமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (அ)

# அனைத்து கட்சித் தலைவர்களும் ஒருமித்த கருத்துக்கு வரவேண்டும்

## மே தினச் செய்தியில் ஜனாதிபதி அழைப்பு

கொழும்பு, மே. 01

"தொழிலாளர் தினத்தில், அனைவரும் ஒன்றிணைந்து எதிர்கொண்டுள்ள சவாலை வெற்றி கொள்ள மக்களுக்காக ஒருமித்த கருத்துக்கு வருமாறு அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களையும் நான் மீண்டும் ஒருமுறை அழைக்கிறேன்."

- இவ்வாறு தனது மே தினச் செய்தியில் அழைப்பு விடுத்துள்ளார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: -

உலகவாழ் உழைக்கும் சமூகம் மிகப்பெரும் சவாலை எதிர்கொள்ளும் நேரத்தில் இவ்வருட சர்வதேச தொழிலாளர் தினம் நினைவு கூரப்படுகின்றது.

நமது நாட்டில் கடந்த மூன்று வருடங்கள் பாரிய சவாலுக்கு உள்ளாகியதும் தொழிலாளர் வர்க்கமே ஆகும். அத்தனை சவால்களையும் எதிர்கொண்டு விடாமுயற்சியுடன் தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்த உறுதி பூண்டவர்களும் அவர்கள்தான். நாளுக்கு நாள் அவர்கள் மீதான அழுத்தங்கள் தற்போது அதிகமாக உள்ளன. அதிலிருந்து மக்களை மீட்டெடுப்பதற்கும்



நிலவுகின்ற சிக்கலான நிலைமையைக் கட்டுப்படுத்து வதற்கும் அரசாங்கம் என்ற வகையில் பல்வேறு அணுகு முறைகளை மேற்கொண்டு வருகின்றது.

அந்நியச் செலாவணி இழப்பானது பல பிரச்னைகளை உருவாக்கியுள்ளது. அவை அனைத்தையும் முகாமைத்துவம் செய்வதுதான் தற்போதைய பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான வழியாகும்.

ஏற்பட்டுள்ள சிக்கலான நிலைமை யாரால் ஏற்படுத்தப்பட்டது என்பதைப் பின் தொடர்வதற்குப் பதிலாக, பொதுமக்களுக்கு உடனடி நிவாரணம் வழங்க என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதில் கவனம் செலுத்துவதுதான் இப்போது நாம் செய்யவேண்டியது. அதற்கான மிகவும் பொருத்தமான மற்றும் செயற்திறன்மிக்க வேலைத்திட்டத் திற்குச் சென்று மக்களின் தற்போதைய பிரச்னைகளுக்கு தீர்வு வழங்கவேண்டும்.

இந்த நாட்டு மக்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்குவதற்கான பொறுப்புடன் ஒன்றிணைந்து செயற்படுமாறு அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் அரச தலைவர் என்ற வகையில் மக்கள் சார்பாக நான் அழைத்தேன். ஒவ்வொரு நொடியும் மக்களின் துன்பத்தைத் தீர்க்கக் கூடிய வழிமுறைகளுக்குச் சென்று, தற்போதைய நெருக்கடிகளுக்கு தீர்வு காண்பதே எமது குறிக்கோள்.

இந்த தொழிலாளர் தினத்தில், அனைவரும் ஒன்றிணைந்து எதிர்கொண்டுள்ள சவாலை வெற்றி கொள்ள மக்க ளுக்காக ஒருமித்த கருத்துக்கு வருமாறு அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களையும் நான் மீண்டும் ஒருமுறை அழைக்கிறேன்.

உழைக்கும் மக்களுக்காக அரசியலை ஒதுக்கி வைத்துவிட்டு, போராட்டத்தை மக்கள் சார்பான புரட்சிகர மாற்றத்துடன் நேர்மறையான திசையில் கொண்டு செல்ல ஒன்றிணையுமாறும் உழைக்கும் மக்களிடம் கௌரவமாக கேட்டுக்கொள்கிறேன்-என்றுள்ளது. (அ)

# மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் வியாபாரம்

## கல்முனை பொலிஸார் விசேட ரோந்து

கல்முனை, மே. 01

கல்முனை பிரதேசத்தில் மாணவர்களை இலக்கு வைத்து நடத்தப்படும் போதைப் பொருள் விற்பனையை முற்றாக இல்லாதொழிக்கும் வகையில் விசேட ரோந்து நடவடிக்கைகளில் சாய்ந்தமருது, கல்முனை பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கேரளக் கஞ்சா, ஹெரோயின் மற்றும் மாவா போதைப் பொருட்களின் விற்பனை அதிகரித்துள்ளதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளதை தொடர்ந்தே இந்த தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிராமங்களிலுள்ள பொது அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள், வழிபாட்டுத் தலங்களின் ஊடாக பொதுமக்கள் மத்தியிலும் போதைப் பொருள் சம்பந்தமான விழிப்பூட்டும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பொலிஸார் கடந்த மாதம் தொடக்கம் போதைப்பொருள் பாவனையை கல்முனை பிரதேசத்திலிருந்து முற்றாக ஒழிக்கும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

பொலிஸார் சிவில் உடையிலும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன் பாடசாலைகளுக்கு அருகிலுள்ள கடைகள் மற்றும் நடமாடும் உணவு விற்பனை வியாபாரிகளும் பொலிஸாரினால் கண்காணிக்கப்பட்டு வருவதாக சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எல் சம்சுதீன் தெரிவித்தார். (அ)

# மின்சார கட்டண உயர்வு; இறுதி தீர்மானம் இல்லை

கொழும்பு, மே. 01

மின்சாரக் கட்டணத்தை அதிகரிப்பது தொடர்பில் இதுவரை இறுதித் தீர்மானம் ஏதும் எடுக்கப்படவில்லை என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கட்டண உயர்வு தொடர்பில் அரசின் கொள்கை குறித்து ஆராயப்பட்டு வருவதாக அதன் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார். கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றில் கலந்து கொண்டு ஜனக ரத்நாயக்க இதனைக் கூறினார். (அ)

# இந்தியப் பிரஜை கைது!

கொழும்பு, மே. 01

கடவுச் சீட்டு மற்றும் விசா அனுமதிப்பத்திரம் காலாவதியான நிலையில் ஹற்றன் பகுதியில் தங்கிருந்த இந்தியப் பிரஜை ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலொன்றின் அடிப்படையில், ஹற்றன் பொலிஸாரினால் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

இதன்போது கைது செய்யப்பட்ட 25 வயதான சந்தேக நபரை, ஹற்றன் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# கறுப்பு பட்டி அணிந்து சபை அமர்வில் நிந்தவூர் பிரதேச சபை உறுப்பினர்கள்

அம்பாறை, மே. 01

அரசாங்கத்தின் செயற்பாடுகள் மின்சார தடை மற்றும் அத்தியாவசிய பொருட்களின் விலை ஏற்றம் போன்றவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் மக்களின் போராட்டத்துக்கு ஆதரவாகவும் நிந்தவூர் பிரதேச சபை உறுப்பினர்கள் கறுப்புப் பட்டி அணிந்து சபை அமர்வில் கலந்து கொண்டனர்.

நிந்தவூர் பிரதேச 4 ஆவது சபையின் 49 ஆவது அமர்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை தவிசாளர் எம்.ஏ.எம் தாஹீர் தலைமையில் பிரதேச சபையின் சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது சபை அமர்வின் ஆரம்பத்தில் மத அனுஷ்டானம், 2022 மார்ச் மாதத்துக்கான கூட்டறிக்கை உறுதிப்படுத்தல், 2022 மார்ச் மாதத்துக்கான கணக்கறிக்கையை உறுதிப்படுத்தல், தவிசாளர் உரை என்பன இடம்பெற்றன.

அதன் பின்னர் அரசாங்கத்தின் செயற்பாடுகள் மின்சார தடை மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்றம் போன்றவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் மக்களின் போராட்டத்துக்கு ஆதரவாகவும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் 6 உறுப்பினர்களும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் 6 உறுப்பினர்களும் இணைந்து கறுப்புப் பட்டி அணிந்து தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

இதன்போது ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினரும் நிந்தவூர் பிரதேச சபை உப தவிசாளருமான வை.எல்.சுலைமாலெப்பை மாத்திரம் கறுப்புப்பட்டி அணியாது காணப்பட்டார். (அ)



# பொருளாதார நெருக்கடியை நிர்வகிக்க சர்வதேச ஆதரவை பெற்று வருகிறோம்

## மே தினச் செய்தியில் பிரதமர் மஹிந்த



கொழும்புஇ மே. 01

"பொருளாதார நெருக்கடியை நிர்வகிப்பதற்கு இதுவரை முன்னெடுக்க வேண்டிய சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுத்திருப்பதுடன், தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் அதற்கான ஆதரவை பெற்று வருகிறது."

-இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது மே தின செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் கூறியுள்ளதாவது:

அனைத்து குடிமக்களின் முன்னேற்றத்திற்காகவும் இரவு பகல் பாராது பாடுபடும் அன்பான உழைக்கும் மக்களுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டு வருடங்களுக்கும் மேலாக உலகளாவிய தொற்று நோய் நிலைமைக்கு மத்தியில் பல்வேறு பொருளாதார பிரச்னைகளை எதிர்கொண்ட நீங்கள், நாட்டில் காணப்படும் இந்த பொருளாதார நெருக்கடியினாலும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளீர்கள் என்பது இரகசியமல்ல. எதிர்பாராத விதமாக முகங் கொடுக்க நேரிட்டுள்ள இப் பொருளாதார நெருக்கடி நிலைக்கு மத்தியிலும், மிகுந்த அர்ப்பணிப்புடனும், நிதானத்துடனும் செயல்பட்டு நீங்கள் நாட்டுக்கு சிறந்த முன்மாதிரியாக திகழ்கின்றீர்கள்.

தொழிலாளர் போராட்டத்திற்காக உங்களுடன் கைகோர்த்திருந்த நான், பொறுப்பு கூற வேண்டிய சகல சந்தர்ப்பத்திலும் உங்களது உரிமைகளுக்காக நிறைவேற்றப்படவேண்டிய கடமைகளையும் பொறுப்புகளையும் ஒருபோதும் புறக்கணித்ததில்லை.

எனினும் நாட்டில் ஏற்பட்டுள்ள இப்பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு நாம் அனைவரும் ஒன்றாக கை கோர்த்து, முதலில் இச்சவாலை வெற்றி கொள்ளவேண்டும்.

பொருளாதார நெருக்கடியை நிர்வகிப்பதற்கு இது வரை முன்னெடுக்க வேண்டிய சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுத்திருப்பதுடன், தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் அதற்கான ஆதரவை பெற்று வருகிறது.

இந்த அனைத்து முயற்சிகளினதும் இறுதி நோக்கம் ஒரு சிறந்த நாட்டை நிர்மாணிப்பதாகும். அதற்காக உழைக்கும் மக்களின் மகத்தான அர்ப்பணிப்பை சர்வதேச தொழிலாளர் தினமான இன்றைய தினத்தில் மிகுந்த மரியாதையுடன் நினைவு கூருகிறேன் - என்று கூறியுள்ளார். (அ)

ஈழநாடு
Eelanadu
01.05.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், சித்திரை 18

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 730 1370**

# அமெரிக்காவிடம் எதிர்பார்த்தல்?

இலங்கைக்கான புதிய அமெரிக்க தூதுவர் ஜுலி ஷங், அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தார். இராஜதந்திரிகள், வடக்குக்கு விஜயம் செய்வது அவ்வப்போது நிகழும் ஒன்றுதான். ஆனால், அமெரிக்க தூதுவரின் விஜயம் கூடுதல் முக்கியத்துவத்தோடு நோக்கப்படுவதுண்டு. இதற்கான காரணம் - அமெரிக்கா ஓர் உலகளாவிய சக்தி என்பதல்ல மாறாக, மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக விழுமியங்களைப் பாதுகாப்பதை அமெரிக்கா ஒரு வெளிவிவகார கொள்கை நிலைப்பாடாகக் கொண்டிருக்கின்றது.

மேற்குலக தாராளவாத ஜனநாயக நாடுகள் அனைத்துமே மனித உரிமைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நாடுகள்தான். ஆனால், அமெரிக்காவைப் போன்று ஏனைய நாடுகளால் உலக விவகாரங்களில் தலையீடு செய்ய முடியாது. ஒவ்வோர் ஆண்டும், உலகளாவிய மனித உரிமைகள் நிலவரங்கள் தொடர்பில், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அறிக்கையொன்றை வெளியிட்டு வருகின்றது. அமெரிக்க வெளிவிவகாரக் கொள்கையின் அடிப்படையில்தான், மேற்படி அறிக்கை வெளியிடப்படுகின்றது. இந்த அடிப்படையில், உலகெங்கும் மனித உரிமைகள் கலாசாரத்தை பேணிப் பாதுகாப்பதை அமெரிக்கா ஓர் உலகளாவிய கடமையாகக் கொண்டிருக்கின்றது. மனித உரிமைகளை உதாசீனம் செய்யும் நாடுகள்மீது, அழுத்தங்களை பிரயோகிப்பதையும் ஒரு கடமையாகக் கொண்டிருக்கின்றது.

இந்த பின்புலத்தில்தான் அமெரிக்காவிடம் அதிகம் எதிர்பார்க்கும் போக்கொன்று, தமிழ்ச் சூழலில் வேர்கொண்டது. இலங்கையின் இறுதி யுத்தத்தின் போது, இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பு கூறலை, அமெரிக்கா தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது. 2012இல், அமெரிக்க அனுரசணையோடு, இலங்கையின் மீதான முதலாவது அழுத்த பிரேரணை, ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டது.

இந்த அழுத்த பிரேரணையே, இலங்கைமீதான சர்வதேச அழுத்தங்களுக்கான பிள்ளையார் சுழியானது. இந்த பிரேரணையிலிருந்து தொடங்கிய உரையாடல்கள்தான், இன்றுவரையில் தொடர்கின்றன. அமெரிக்கா மீளவும், ஐ. நா. மனித உரிமைகள் பேரவையில் உறுப்பு நாடாக இணைந்திருக்கும் பின்னணியில், இலங்கைமீதான அடுத்த கட்ட அழுத்தங்களில் அமெரிக்கா கூடுதல் கரிசனை எடுத்துக் கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், இதுவரையான அழுத்தங்கள் தொடர்பில் தமிழ் மக்கள் மத்தியில் வெறுப்புக்கலந்த ஏமாற்றம் உண்டு. இலங்கைமீதான மென்மையான அணுகுமுறைகளிலிருந்து விலகி, அமெரிக்கா சற்று கடுமையான நிலைப்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென்னும் எதிர்ப்பார்ப்புக்கள், தமிழ் அரசியல் தரப்புக்களின் மத்தியிலும், சிவில் சமூக பரப்பிலும் காணப்படுகின்றன. இலங்கைக்கான அமெரிக்க தூதுவர், வடக்கிலுள்ள பிரதிநிதிகளை சந்திப்பதற்கு முன்னர், அவரை புலம்பெயர் சமூக பிரதிநிதிகள் சந்தித்திருந்தனர். குறிப்பாக, அமெரிக்காவை தளமாகக் கொண்டியங்கிவரும், புலம்பெயர் அமைப்புகள் ஒன்றிணைந்து, தங்களின் கோரிக்கைகளை அவரிடம் முன்வைத்திருக்கின்றனர்.

2009இற்கு பின்னரான தமிழ் தேசிய அரசியல் சூழல் என்பது, தமிழ் மக்கள் ஒரு பலமற்ற தரப்பாக அரசியலை கையாள முற்படும் காலமாகும். விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில், தமிழ்த் தேசிய அரசியல் என்பது, பலத்தை அடிப்படையாகக் கொண்ட பேரம் பேசலாகவே இருந்தது. விடுதலைப் புலிகள் இயக்கத்தை அமெரிக்கா உள்ளிட்ட 30இற்கும் மேற்பட்ட மேற்குலக நாடுகள் பயங்கரவாத இயக்கமாக தடைசெய்திருந்தபோதிலும்கூட, நோர்வே யின் மத்தியஸ்தத்தின் கீழ் இடம்பெற்ற சமாதான பேச்சை ஆரம்பத்தில் மேற்குலக நாடுகள் ஏற்றுக்கொண்டிருந்தன, எனினும், மீண்டும் யுத்தம் இடம்பெற்ற சூழலிலேயே மேற்குலகம் விடுதலைப் புலிகளை முற்றிலுமாக கைவிட்டது.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால், 2009இற்கு பின்னரான தமிழர் அரசியல், அதிகம் சர்வதேச அழுத்தங்கள் மீதான நம்பிக்கையிலேயே நிலைகொண்டிருக்கின்றது. இந்த சர்வதேச அழுத்தங்களின் அடிப்படையாக இருப்பது, மனித உரிமைகள்மீதான மேற்குலக கரிசனையாகும். இந்த இடத்தில்தான், அமெரிக்காவிடம், தமிழர்கள் அதிகம் எதிர்பார்க்கின்றனர்.

2012இல் அமெரிக்கா கொண்டுவந்த பிரேரணை இன்றுவரையில் பேசுபொருளாக இருப்பதற்குக் காரணம், அதில் கூறப்பட்டுள்ள விடயங்களை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றாமல் இருப்பதுதான். இனியும் அரசாங்கம் நிறைவேற்ற தவறினால், அமெரிக்காவின் அணுகுமுறைகள் எவ்வாறு அமையும்? இந்தியா வலியுறுத்திவரும் 13ஆவது திருத்தச்சட்டம் போன்றுதான், அமெரிக்காவின் மனித உரிமைகள்மீதான கரிசனையும் இருக்குமா? ஏனெனில், 34 வருடங்கள் சென்றுவிட்ட பின்னரும் கூட, 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதை, இலங்கை அரசாங்கம் வெற்றிகரமாகவே மீறிவருகின்றது.

**வாரசாரம்** - அரசியல் நிருபர்

# ‘இலங்கை வசந்தம்?’



உள்நாட்டு யுத்தத்தில் உலக கவனத்தைப் பெற்ற இலங்கை, இப்போது உள்நாட்டு பொருளாதார நெருக்கடியில் உலகின் கவனத்தைப் பெறுகிறது. மூன்று தசாப்த கால யுத்தத்திலிருந்து நாட்டை மீட்ட இரட்சகர்களாக, பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இதே காலப்பகுதியில் கொண்டாடிய மக்கள், அந்த இரட்சகர்களிடமிருந்து நாட்டை மீட்க இப்போது கிளர்ந்தெழுந்து நிற்கிறார்கள். காலிமுக திடலை மையமாக கொண்டு, பொதுவாக நாடு முழுவதிலும் நாளுக்குநாள் இக் கிளர்ச்சி பெருகுகிறது. இவ் வேளையில், சரியானதாகவும், புரிந்ததாகவும் - புரியாததாகவும், எதிர்பார்த்ததாகவும் - எதிர்பாரததாகவும் தினமும் கவனத்தை ஈர்த்து பல நிகழ்வுகளும் அவதானங்களும் கூடவே தொடர்கின்றன. இவற்றில், அரசாங்கம் தற்போது ஒரு நிலைப்பாட்டில் தன்னை வெளிப்படுத்துவதும் அவதானத்துக்குரியது.

ஜனாதிபதி மாத்திரமல்ல, பிரதமரும் தற்போது ஸ்திரமுடனுள்ளதான ஒரு நிலையில், காலத்தை சமாளித்து, நிலைமையை வென்றுவிடலாம் என்ற நினைப்பு அரசிடம் தெரிகிறது.

ஆக, இந்த எதிர்ப்பு போராட்டம் பெருகும் ஆதரவுடன் தொடர்ந்தாலும், இது தெளிவுபடுத்தாத சில விடயங்கள் இதற்கான ஆதரவில் ஒரு தடங்கலை ஏற்படுத்துவதும் அவதானத்துக்குரியது. பொருளாதார நெருக்கடியின் விளைவாக தோற்றிய இப் போராட்டத்தை ஒரு தசாப்தத்துக்கு முன்னர் துனிசியாவில் தொடங்கிய ‘அரபு வசந்தம்’ அல்லது அதே காலப்பகுதியில் இந்தியாவில் அனாஹசாரே தொடங்கிய ‘ஆம் ஆத்மி’ போன்றவற்றையொத்ததொரு மக்கள் எழுச்சியாக கருத முயல்வதும், அத்தகையதான இப் போராட்டத்தில் தமிழர்களும் இணைய வேண்டும் என்ற ஓர் ஆதங்கம் - எதிர்பார்ப் பும். அதில் எழும் ஓர் ஏமாற்றமும் சர்வதேச பார்வையில் பொதுவாக தெளிவாக தெரிகி றது. அந்த ஆதங்கம் - எதிர்பார்ப்பு நியாய மானதே.

அரசாங்கமும் அரசியல் கட்சிகளும் இப் பிரச்னையை அணுகும் அல்லது வெளிப்படுத்தும் விதத்தை விடுத்து, இப் பிரச்னையையும் அதன் தீர்வையும் யதார்த்தத்தில் உணர்ந்த மக்களின் எழுச்சியாக இப் போராட்டம் இருப்பதே இதில் வேண்டியதும் எதிர்பார்க்கப்படுவதுமாகும்.


முப்பது ஆண்டுகள்கால உள்நாட்டு யுத்தமும், அதற்குக் காரணமான தீர்வு காணப்படாத இனப் பிரச்னையும் நாட்டின் இன்றைய நெருக்கடி நிலைக்கான அடிப்படைக் காரணங்களாக நம்பப்படுகையில், நடைபெறும் இப் போராட்டத்தில் இது பேசப்படுகிறதா என்பது தமிழர்களின் தேடலாக இருக்கிறது. அப்போது, இது பொதுவாக, பரவலாக தென்படவில்லை. குறிப்பாக, ‘அமைப்பு மாற்றம்’ என்று இங்கு எழுவதாக சொல்லப்படும் குரல், வெளிநாடுகளில்தான் பெரிதாக கேட்கிறது. அதனால், தமிழர்களும் இதில் கூடுதலாக தம்மை ஈடுபடுத்தவேண்டும் எனும் அவா, இலங்கையில் இன ஒற்றுமையை அவாவும் நலன்விரும்பிகளிடம் பெரிதாக எழுகிறது. அவர்களை ஆத்திரம்கொள்ளவும் வைக்கிறது. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, சிங்கள மக்கள் புரிந்துகொள்ளவாவது முயலவேண்டும் என்பதும் இவர்களின் ஆதங்கமாகிறது.

தமிழ் மக்களும் இனி இதில் பரவலாக கலந்துகொள்ளவேண்டும் என்பதும். என்ன விதத்தில் எத்தகைய சுலோகத்துடன் இதில் இணைவது என்பதும் அரசியல் மட்டத்துக்கு அப்பால் தமிழ் சமூகத்தில் இப்போது ஆழ்ந்து சிந்திக்கப்படுகிறது. தமிழர் பங்குபற்றுதலின் அவசியம் வற்புறுத்தலுக்கும் கண்டனத்துகும் உள்ளாகையில், தமிழரையும் இதில் இணைத்துக்கொள்ளும் புரிந்துணர்வுடனான ஓர் அழைப்பு அவர்களை எட்டவில்லை என்பதும் ஆழ்ந்து கவனிக்கப்படவேண்டியதே.

‘அமைப்பு மாற்றம்’ என்பதற்கான இப் போராட்டத்தில் தமிழர்களின் பங்குபற்றுதலை ஆங்கிலத்தில் வெளியாகும் பல கட்டுரைகள் அக்கறையுடன் வற்புறுத்துகின்றன. ஆனாலும் அந்த ஆங்கில கட்டுரைகளிலும்கூட ‘அரகாலய’ என்ற பதம் ஏன் பயன்படுத்தப்படுகிறது? தமிழர்களின் தயக்கத்துக்கு இதுவே பதில் சொல்வதாகவும்கூட அமைகிறது

ஆக எப்படியெனினும், அனைத்து இன மக்களுக்கும் பொதுவான இந் நெருக்குதல் தொடர்பான இந்த போரட்டத்தில் தமிழ் மக்களும் தம்மை இணைத்து, தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்கான தீர்வில் சிங்கள மக்களும் தம்மை இணைத்த ‘இலங்கை வசந்தமா’கவும் இப் போராட்டம் வரலாற்றில் எழுதப்படலாம்.

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



பகிர்வு -27

# தெளிவுப் பகிர்வு

கணபதி சர்வானந்தா

புத்தி உள்ள மனிதரெல்லாம் வெற்றி காண்பதில்லை
வெற்றி பெற்ற மனிதரெல்லாம் புத்திசாலி இல்லை,

என்ற சினிமாப் பாடலின் மூலம் சாதாரண மக்களும் விளங்கக் கூடிய வகையில் பாடலாசிரியர் கவிஞர் கண்ணதாசன் ஒரு நல்ல கருத்தைச் சொல்லி விட்டுச் சென்றுவிட்டார். பல வருடங்களுக்கு முன்பே அவர் அதனை நடிகர் சந்திரபாபுவின் நடிப்பினூடாக வெளிப்படுத்தியிருந்தார். ஆனால் அதனை இன்னும் உணராதவர்களாக நாம் இருப்பதோடு பிறரையும் தேவையற்ற விதத்தில் குழப்பிக் கொள்கிறோம் என்றே எண்ணத் தோன்றுகிறது.சம கால நடவடிக்கைகளை இதனை வலியுறுத்துவதாகவும் காணப்படுகிறது. தற்காலச் சூழலில் காணப்படும் நெருக்கடிகள் அதனை எமக்கு உணர்த்துவதாக... புத்தி உள்ளவர்கள் எல்லோரிடத்திலும் சிறந்த தெளிவு இருக்கும் என்று சொல்வதற்கில்லை.

சில நேரங்களில் நெருக்கடிகள் தாமாக ஏற்படுகின்றன. இருந்தும் பல சமயங்களில் நெருக்கடிகளை நாமாகவே ஏற்படுத்துக் கொள்கிறோம். அதனூடாக அடுத்தவரையும் குழப்பிக் கொண்டிருப்பதாகவே தெரிகிறது. தற்கால நிலைமைகளைப் பார்க்கும் போது அவ்வாறே எண்ணத் தோன்றுகிறது. எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் சிறப்பு அங்காடிகளுக்கு முன்றலிலும் காணுகின்ற வரிசைகளில் நிற்கின்ற அத்தனைபெரும் பொருட்களை அவர்கள் தேவைக்காகத்தான் வாங்குகிறார்கள். ஆனால் பெரும்பாலானவர்கள் “அந்தப் பொருட்கள் அற்றுப் போய்விடலாம்” என்ற பயத்திலே அதிகம் வாங்கிச் சேமிப்பதற்காகவும் காத்து நிற்கிறார்கள். அதனாலேயேதான் நெருக்கடிகள் ஏற்படுகின்றன. பொருட்களுக்குத் தட்டுப்பாடும் ஏற்படுகின்றது. அதைத் தமக்குச்சாதகமாக வைத்துக்கொண்டு வியாபாரிகளும்பொருட்களைப் பதுக்குவதிலே ஆர்வமுள்ளவர்களாக இருக்கின்றனர். காலத் தெளிவின்மையே இதற்கு முக்கிய காரணம் என ஒருவர் மன வருத்தத்தோடு குறிப்பிட்டார்.

தெளிவற்ற விதத்தில் ஒரு செய்தியை நாம் உள்வாங்கிக் கொள்வதில் பல கேடு உண்டு. எப்பொருள் யார்வாய்க் கேட்பினும் அப் பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு.இதன் மூலம் ஒருவன் அறிகின்றவற்றில் அது பற்றிய தெளிவின் அவசியம் நன்றாக வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அதனை ஆராய்ந்து அறிவைப் பெறுவது, அதனைச் சவாலுக்குப்படுத்தி எதிர் கொள்வது என இரண்டும் அவசியமாகிறது. ஒருவர் அவர் புலமை யாளராகக் கூட இருக்கலாம். அதற்காக அவர் சொல்லுகிறாரே என்பதை கண்மூடிக் கொண்டு ஏற்பது மடமை. இடம், பொருள், ஏவல் என்ற இந்த மூன்றுக்கு ஏற்றாற் போல விடயங்களில் தெளிவு பெறுவது முக்கியமாகிறது.

தெளிவைப் பெற்றுக் கொள்வதில் இரண்டு வழிகள் உண்டு. முதலாவது வழி ஆரம்பத்தில் நம்பிக்கை கொண்டு பின்பு அதனைச் சந்தேகத்துக்குட்படுத்திச் சோதித்து அறிவது, பெரும்பாலும் இதுவே பின்பற்றப்படுகிறது. இரண்டாவது வழி, நன்றாகச் சந்தேகித்த பின்னர் நன்றாகச் சோதித்து அதிலுள்ள சந்தேகத்தை ஒவ்வொன்றாக நீக்கிய பின்னர் தெளிவு பெறுவது.இது மிகவும் சிறந்ததொரு வழி முறை.

நாம் ஒரு விடயத்தை முற்றிலும் அறிந்து கொள்ளும் நிலையிலே தெளிவு என்ற விடயம் நிகழக் கூடும். அப்படி முழுவதையும் அறிந்து கொள்ள இயலாத நிலையில் நாம் கொண்டிருக்கும் பொறுமையின் அடிப்படையிலும் அது நிகழக் கூடும் என்று ஒரு இணையத் தகவல் குறிப்பிடுகிறது.

குறிப்பாக நாம் ஒரு செயலைச் செய்துவிட்டு அதன் விளைவுக்காகக் காத்திருக்கும் சமயத்தில் எமக்குள் பல குழப்பங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. அவற்றைப் போக்க அவை பற்றிய சிந்தனைகளின்பால் பெறப்படும் தெளிவென்பது முக்கியமாகிறது.

எமக்குப் பிடித்தது என்பதற்காக ஒன்றைத் தொடருகிறோம் என்று வைத்துக் கொண்டால், சில சமயங்களில் அது நல்லதாக இருக்கலாம். பல சமயங்களில் அது எமக்குப் பொருத்தமற்றதாகக் கூட இருக்கலாம். காலப்போக்கில் அது எம்மை உயர்த்தலாம். இன்றேல் தாழ்த்தலாம். அதில் சாதகமானதாகப் பலனைப்பெற, நீண்டகால அடிப்படையில் அது நின்று நிலைக்க, சிந்தனை அவசியம் என்பதோடு அதனூடாகப் பெறும் தெளிவே முக்கியமாகிறது.

ஒரு விடயத்தை அறிகிறீர்கள் என வைத்துக் கொண்டால்.. ஒருவர் அவருக்கு நெருக்கமானவர் அந்தத் தகவலைத் தருகிறார் என்பதற்காக அது உண்மையாக இருக்கும் என்று எண்ணி ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லை. அவர் கூட வேறு எவரோ சொல்லக் கேட்டிருக்கலாம். நம்பிக்கையற்ற ஒருவர் அவருக்குச் சொன்னதாகக் கூட இருக்கலாம். எனவே அந்த அறிவித்தல் தொடர்பாகத் தெளிவு அவசியமாகிறது. அது போல பகிர்விலும் தெளிவு முக்கியமாகிறது. முழுமையான ஒரு தெளிவின் பின்னரே பகிர்வு என்ற விடயமும் சாத்தியமாகிறது. அதுவும் அறம் சார்ந்ததொன்று எண்ணித் தெளிவது அவசியமாகிறது.

தற்போது காணப்படும் தொழில் நுட்ப வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு வலைத் தளங்களில் பல்வகைப்பட்ட செய்திச் சேவைகள் காணப்படுகின்றன. அவற்றுள் உண்மையின் அடிப்படையில் இயங்குவன எவை என்ற தெளிவு இல்லாது அவர்கள் சொல்லுவதை அப்படியே முழுமையாக நம்புவோமாகில் நம் பல வழிகளில் தவறாக வழி நடத்தப்பட வாய்ப்புண்டு. எனவே அவற்றின் நம்பகத் தன்மை பற்றிச் சிந்திக்க வேண்டும். அதனூடாகப் பெறும் அறிவைக் கொண்டு தெளிவு பெறுவதென்பது மிகவும் முக்கியம்.

தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும். - திருக்குறள்

துணைக்கு அழைத்துச் செல்பவனைப் பற்றி நாம் தெளிவாக இருக்க வேண்டும். தெளிவாக ஆராயாமல் அவனைத் துணையாக நம்பினால் நம்பியவனுக்கு மட்டுமின்றி அவன் வழிமுறையில் வருபவர்களுக்கும் அது தீராத துன்பத்தைக் கொடுக்கும் என இக் குறளின் மூலம் திருவள்ளுவர் எடுத்துரைத்திருக்கிறார்.

எனவே மொத்தத்தில் பார்த்தால், தெளிவு பெற்ற சிந்தனையைத்தான் மதி நுட்பம் என்கிறோமா தெரியவில்லை?

# இந்தவார ராசிபலன் 01.05.2022 - 08.05.2022



மே 01 ஞாயிற்றுக்கிழமை
சுபகிருது வருடம் - சித்திரை - 18

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 12.00 - 1.30 திதி : பிரதமை




மனதுக்கு நெருக்கமானவருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். பிரபலமானவரின் சந்திப்பால் பிரச்னை ஒன்றிலிருந்து மீளுவீர்கள். கடவுள் நம்பிக்கையை அதிகரிக்கும் மனதிற்கு உகந்த சம்பவம் நிகழும். முன்பிருந்து உபாதைகள் சரியாகும். புதிய பணி பற்றிய முயற்சியைச் சற்றுத் தள்ளிப்போடலாம். உடல் நலம் குன்றியிருந்த உறவினர் நலமடைவார். திருமணம் பற்றி இடையில் நின்றிருந்த முயற்சி தொடரும்.




சிறு பயணம் செல்வதால் மனதில் மகிழ்ச்சி உண்டாகும். பணியாளர்கள் உதவியால் பரபரப்புக் குறையும். நினைத்துப் பாராத லாபங்கள் வரும். புதிய நண்பர்கள் கிடைப்பர். மகன்/மகள் பற்றி மனதில் இருந்த பயங்கள் குறைந்து நிம்மதி அதிகரிக்கும். மிகுந்த மதிப்பிற்குரிய ஒருவரிடமிருந்து வாழ்த்துக் கிடைக்கப்பெறுவீர்கள். புதிய விஷயம் கற்பது பற்றிய தயக்கம் நீங்கும். வாகனங்கள் வாங்கும் விருப்பம் நிறைவேறும்.




எதிர்பாராத தனவரவு கிடைக்கப்பெறுவீர்கள். எதிலும் சற்று கவனமாக இருக்க வேண்டிய அவசியம். உங்களுக்கு மற்றவர் விமர்சனம் பற்றிக் கவலை வேண்டாம். கடன்கீ லோன் தொகையைத் திருப்பித் தந்து முடிப்பீர்கள். புனிதத் தலங்களுக்குச் சென்று வருவீர்கள். வெளியூரில் உள்ள உறவினர் நன்மை செய்வார்கள்.செய்யாத தப்புக்குக் குற்றம் சொன்னால் கவலைப்படாதீர்கள். வேலைகளை முனைப்புடன் செய்து பாராட்டுப் பெறுவீர்கள். தாயாருக்கு உங்களால் மகிழ்ச்சி ஏற்படும்.




நிதி வசதிக்காக நீங்கள் போராடிய நிலை மாறும். இளம் வயதினர் எதிர்காலம் பற்றி நல்ல தீர்மானம் செய்வீர்கள். சிறிய அளவில் அலைச்சல்கள் இருக்கும்.எந்த ஒரு முடிவையும் உரிய நபர்களைக் கலந்தாலோசிக்காமல் எடுக்காதீர்கள். திருமணம் கூடி வரும். விவேகமாக இருப்பவர்களுக்குத் தொல்லை வராது. யாருமே உங்களை மதிக்கவில்லை என்று கவலை வேண்டாம்.




விசேஷங்களில் பங்கேற்கும்போது பேச்சில் மிகுந்த கவனம் தேவை. தாய் தந்தையிடமிருந்து சரியான வழிகாட்டுதல் கிடைக்கும். யாரிடமும் தானம் பெற வேண்டாம்.கண்டுகொள்ளாமல் போனவர்களெல்லாம் இனி வலிய வந்து பேசுவார்கள். மனதில் இருந்த அநாவசிய பயம் விலகும். முன்பு இருந்து வந்த சிறு உபாதைகள் தீரும்.கிடைத்த வாய்ப்பைத் தவறவிடாமல் பயன்படுத்துவீர்கள்.




பழி தரும் செயல்களைத் தவிர்க்க வேண்டும். தப்பான விஷயங்களுக்குத் தூண்டும் நபர்களை விலக்குங்கள். மனதை அமைதியாக வைக்கும் வழியைக் கண்டறிவீர்கள். பேச்சைக் குறைப்பது நல்லது.உடல்சோர்வு தீரும். உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். கடந்த வாரத்தில் இருந்த ஒரு சிறு கவலை நீங்கும். புதிய பதவி கிடைக்கும். விலகிய நண்பர்களுடன் நெருக்கம் அதிகரிக்கும்.




அடுத்தவர்களுக்கு உதவி செய்து வாழ்வீர்கள். பொருளாதார சிக்கல் நீங்கும். தெளிவான முடிவெடுக்கும் அறிவாற்றல் அதிகரிக்கும். உறவினர் நண்பர்களிடையே ஏற்பட்ட பிணக்குகளைச் சரி செய்வீர்கள்.தொழில் ரீதியாக பயணங்கள் செல்ல நேரிடலாம். நீங்கள் சொல்வதை மற்றவர்கள் ஒப்புக்கொள்வார்கள். பணியிடத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். மனதில் குதூகலம் அதிகரிக்கும்.




உங்களின் நலம் நாடுபவர் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பீர்கள். இளைஞர்களுக்கு முன்னேற்றம் கிட்டும். அலுவலக எதிர்பார்ப்புகள் நல்ல முறையில் நிறைவேறும். நண்பருக்கு உதவுவீர்கள். அனுஷம்: வெளிமனிதர்களுக்கு உதவி மகிழ்வீர்கள். நல்ல தகவல் ஒன்று வரும். அடுத்தவர்களுக்காக எடுத்த முயற்சி வெற்றி பெறும். அரசு சலுகை ஒன்று கிடைக்கும்.




பொழுதுபோக்கு அம்சங்களில் ஏற்படும் ஈடுபாட்டால் முக்கிய வேலைகளை பாதிக்காமல் கவனமாக இருங்கள். நண்பர்களை எச்சரித்து பிரச்னையிலிருந்து காப்பீர்கள். கலகலப்பான சூழல் ஒன்றில் கவலை மறப்பீர்கள்.திடீர் சந்தோஷம் வரும். வேண்டாத இடத்தில் உரிமை எடுத்துப் பிரச்னைக்குள்ளாகி மீளுவீர்கள். மிகுந்த பொறுமையுடன் முன்பு செய்த முயற்சிக்கு நல்ல பலன் கிடைக்கும்.




எதிரிகள் உங்களைக் கண்டு பயப்படுவார்கள். எடுத்த விஷயங்களை எளிதில் முடிப்பீர்கள். கடந்தகால சிக்கல்கள் அகலும். உணவு விஷயத்தில் கட்டுப்பாடு செலுத்துவது நல்லது.யோசித்துச் செயல்பட வேண்டிய வாரம். ஆரோக்கியத்தில் இருந்த அச்சுறுத்தல் அகலும். செலவுகளைக் கட்டுப்படுத்துவீர்கள். படிப்புக்கு ஏற்ற பணியில் சேருவீர்கள்.ஒன்றிற்கு மேற்பட்ட வகைகளில் வருமானம் வரும்.




கலைத்துறையினருக்கு மேன்மை கூடும். ஆர்வம் காரணமாகப் புதிய விஷயம் கற்பீர்கள். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டும்படி வருமானம் வரும். நண்பர் மகிழ்ச்சியளிக்கும் செய்தி சொல்வார். பிரார்த்தனைகளை நிறை வேற்றுவீர்கள். வயதில் குறைவானவருடன் நட்பு பலப்படும். மருத்துவ முறையை மாற்றி முயற்சிப்பீர்கள். பலநாள் பேச்சுவார்த்தை முடிவாகும்.புது முயற்சி வெற்றி தரும். நண்பர் வட்டம்





தேவைகள் பூர்த்தியாகும். அரசியல் பிரமுகர்களால் ஆதாயம் உண்டு. அலைபேசி வழித்தகவல் மகிழ்ச்சி தரும். திறமை பளிச்சிடுவதால் பாராட்டுக்கிடைக்கும். புதிய தொழில் தொடங்குவது பற்றிச் சிந்திப்பீர்கள். கொடுத்த தொகை திரும்பி வந்து வியப்பளிக்கும். மக்களால் மகிழ்ச்சி அதிகரிக்கும். கனவுகள் நனவாவதற்கான அறிகுறிகள் தோன்றும்.உறவினர் நண்பர்களின் பாராட்டுக் கிடைக்கும். உங்களின் சமயோசித செயலால், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். அடுத்தவர்களுக்காகக் கையெழுத்திட வேண்டாம். உறவினர்களை மனம் மாறச் செய்வீர்கள்.

## ‘பகைவருக்கும் அருள்வாய் நன்னெஞ்சே!’

# தமிழக அரசின் 123 கோடி ரூபா உதவிக் கோரிக்கை

சென்னை மடல்

-பகவான் சிங்-



“உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.” (குறள் 788)

திருவள்ளுவரின் இந்தக் குறளை எடுத்துக்கூறி, தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் வெள்ளியன்று சட்டப் பேரவையில் இலங்கையில் தற்போது நிலவிவரும் இன்னல்களால் பெரும் அவதிக்குள்ளாகிய அந்நாட்டு மக்களுக்கு உடனடியாக நிவாரண பொருட்களை அனுப்பி வைக்க ஒன்றிய அரசு அனுமதியை நாடி ஒரு தீர்மானத்தை எல்லா கட்சிகளும் ஏக மனதாக நிறைவேற்றுவதற்கு வழிவகை செய்தார்.

“அண்டை நாட்டுப் பிரச்னையாக இதை நாம் பார்க்க முடியாது. அங்கு யார் ஆட்சியில் இருக்கிறார் கள், அவர்கள் எத்தகையவர்கள் எனப் பார்க்க இயலாது. அந்த நாட்டு மக்களுக்கு நம்மால் ஆன உதவியை நாம் செய்தாகவேண்டும் என்பதைத் தெரிவிக்க நான் விரும்புகிறேன்” என்று அவர் கூறினார்

அதற்குப் பிறகு அவர் பாரதப் பிரதமர் நரேந்திர மோடிக்கு இதை வற்புறுத்தி ஒரு கடிதமும் எழுதினார்.

எதிர்கட்சிகளான அஇஅதிமுக மற்றும் காங்கிரஸோடு பாஜகவும் ஸ்டாலினின் தீர்மானத்துக்கு ஆதரவு தெரிவித்தது. சென்ற மாதம் டெல்லி பயணத்தின்போது பிரதமர் நரேந்திர மோடியிடம் தான் வைத்த கோரிக்கைகளுக்கு இன்னமும் பதில் வரவில்லை என்பது குறித்தும், துன்பப்படுகிற ஈழ மக்களுக்கு உதவி அனுப்புவதற்கு அனுமதி கோரி வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்ஷங்கரிடம் தொலைபேசியில் வைத்த கோரிக்கை குறித்தும் ‘இன்று வரை எந்தத் தகவலும் இல்லை’ என்று முதல்வர் வருத்தத்துடன் கூறினார். தன்னுடைய உரையில் இலங்கை மக்கள் சந்தித்து வரும் தட்டுப்பாடுகள் மற்றும் விலைவாசி உயர்வு போன்ற தீவிர பிரச்னைகளையும் முதல்வர் பட்டியலிட்டார்.

அரிசி, பருப்பு, எண்ணெய், குழந்தைகளுக்கான பால்மா, உயிர்காக்கும் மருந்துகள் போன்ற பொருட்களைத் தன்னுடைய அரசு உடனடியாக இலங்கைக்கு அனுப்ப விரும்புகிறது என்று முதல்வர் ஸ்டாலின் தந்த தீர்மானத்தைப் பற்றி என்னுடைய அன்பார்ந்த ‘ஈழநாடு’ வாசகர்கள் படித்து அறிந்திருக்கக்கூடும்.

முன்னதாக, ஈழத்தில் உள்ள தமிழர்களுக்கு உடனடியாக உதவி அனுப்புவதற்கு ஒன்றிய அரசின் அனுமதியை கோரியதாகத் தெரிவித்த ஸ்டாலின், பிராந்தியம் அல்லது இனம் சார்ந்த வேறுபாடு இன்றி இலங்கையின் மக்கள் எல்லோருக்கும் உதவி வழங்கப்பட வேண்டும் என்று தன்னுடைய நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டதாகவும் கூறினார். ஈழத்தைச் சேர்ந்த தலைவர்கள் மற்றும் அமைப்புகள் தன்னிடம் ஈழத்தமிழர்கள் மட்டுமல்லாமல் எல்லோருக்கும் உதவி செய்யுமாறு கோரிக்கை விடுத்ததால் இந்த மாற்றம் ஏற்பட்டதாகவும் ஸ்டாலின் கூறினார்.

“தனியாகத் தமிழர்களுக்கு மட்டும் உதவி என்று அனுப்பவேண்டாம் இலங்கை மக்களுக்கு என்று பொதுவாக அனுப்புங்கள். மக்களைப் பிரித்துப் பார்க்க வேண்டாம், அனைத்து இன மக்களும் சேர்ந்துதான் இந்த நெருக்கடியை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்’’ என்று ஈழத் தலைவர்களும் அமைப்புகளும் அவரிடம் கேட்டன என்று ஸ்டாலின் சொன்னார். “அதைக் கேட்டபோது நான் நெகிழ்ந்து போனேன். என்னால் உணர்ச்சிப்பெருக்கைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இதுதான் தமிழர் பண்பாடு” என்று ஸ்டாலின் சொல்ல, சட்டசபை உறுப்பினர்கள் அனைவரும் உற்சாகமாக மேசையில் தட்டி இதை ஆதரித்தத்தால் சபையில் பெரிய ஒலி எழுந்தது.

‘வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்’ என்ற வள்ளலாரின் சொற்களை பாமக தலைவர் ஜி. கே. மணி சட்டசபையில் கூறியதை எடுத்துக்காட்டிய ஸ்டாலின், “வள்ளலாரின் உணர்வுகளைத் தாங்கி, தமிழ்நாட்டு மக்கள், அதேபோல, அரசியல் கட்சிகள், தொண்டு நிறுவனங்கள், வர்த்தக அமைப்பினர் உள்ளிட்டோர் இலங்கை நாட்டு மக்களுக்கு உதவிகள் செய்ய முன்வந்தால், அவற்றையும் ஒருங்கிணைத்து, ஒன்றிய அரசின் மூலமாக இலங்கை நாட்டு மக்களுக்கு வழங்குவதற்கு தமிழ்நாடு அரசு தயாராக இருக்கிறது. அதற்கு முன்னோட்டமாகத்தான் நம்முடைய எதிர்க் கட்சியினுடைய துணைத் தலைவர் (அஇஅதிமுகவின் ஒருங்கிணைப்பாளரும் முன்னாள் முதல்வருமான ஓ. பன்னீர்செல்வம்) அவருடைய சொந்த நிதியிலிருந்து 50 இலட்சம் ரூபாயைத் தான் வழங்குவதாக இன்று அறிவித்திருக்கிறார். அவர் ஏன் இதை அறிவித்திருக்கி றார் என்றால், மற்றவர்களும் அதைப் பின்பற்ற வேண்டுமென்ற அந்த அடிப்படையில்தான் அதை அறிவித்திருக்கிறார்” என்று முதல்வர் கூறினார்.

இதைத் தொடர்ந்து தமிழ்நாட்டு மக்களிடமிருந்தும், அமைப்புகளிடமிருந்தும் இலங்கையை நோக்கி உதவிப் பொருட்களும் பணமும் ஒரு மாபெரும் வெள்ளம்போல் கொட்டுமென்று எதிர்பார்க்கலாமா? பொறுத்திருந்து பார்ப்போம்.

ஆனால் ஒரு கவலையூட்டுகிற நிலைமை என்னவென்றால், இலங்கையில் திகழும் பொருளாதாரப் பிரச்னை பற்றித் தமிழகத்தில் பெரிய அளவில் கவலையோ, ஒரு மக்கள் கொந்தளிப்போ இதுவரை தென்படவில்லை. மூத்த பத்திரிகையாசிரியரான என்னுடைய நெருங்கிய நண்பரிடம் பொதுமக்களின் இந்த அக்கறை யின்மை பற்றிக் கேட்டேன். அவர் கூறிய உடனடி பதிலோடு நான் முழுக்க உடன்படுகிறேன். “பொதுவாக, அண்டை வீட்டாரின் துன்பம் என்பது தங்களுடைய பிரச்னை இல்லை, தங்களையும் அந்தப் பிரச்னை பாதித்தாலொழிய இதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்றுதான் பெரும்பான்மையான மக்கள் நினைக் கிறார்கள். தமிழர்களின் வடக்கு



மற்றும் கிழக்குப் பகுதிகளில், பொருளாதார சீர்கேடுக்கு முக்கிய காரண மாக இருக்கும் ராஜபக்ஷக்களுக்கு எதிராக இதுவரை பெரிய பொது போராட்டங்கள் வரவில்லை. ஈழத் தமிழர்களே இதை ஒரு தேசியப் பிரச்னையாகக் கண்டு கொள்ளாமல், தனித்து இருப்பதிலேயே சௌகரியமாக உணரும்போது, மற்றவர்கள் எப்படி இதற்காக உரக்கக் குரல் எழுப்புவார்கள்?” என்று அந்த பத்திரிகையாள நண்பர் கேட்டார்.

பாக் ஜலசந்தியில் உள்ள இலங்கை கடற்பகுதிகளுக்குள் தமிழக மீனவர்கள் நுழையும்போது அவர்களைத் தாக்குவதில் பெரும்பான்மையானவர்கள் ஈழ மீனவர்கள் என்பதாக ஊடகங்களில் பல செய்திகள் வருகின்றன என்று அவர் சுட்டிக்காட்டினார். “தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், ஈழ மீனவர்களின் படகுக் கூட்டங்களோடு கடலில் போராட்டம் நடத்தி, தமிழக மீனவர்கள் இலங்கை கடற்பகுதிகளுக்குள் நுழையும்போது கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இலங்கை அரசை வற்புறுத்திய புகைப்படங்களும் எங்கள் செய்தி அறைகளில் இருக்கின்றன” என்று அவர் கூறினார்.

சுமந்திரனின் உற்சாகமூட்டும் இந்த படகு சவாரிப் புகைப்படங்களை எனதருமை ஈழநாடு வாசகர்கள் நினைவில் வைத்திருக்கலாம். ஒரு சுவாரஸ்யம் என்னவென்றால், ஈழத்தமிழர்கள் மட்டுமல்லாமல் இலங்கையின் எல்லா மக்களுக்கும் உதவி தரவேண்டும் என்று ஸ்டாலின் முடிவெடுத்ததற்கான காரணம் தன்னுடைய வேண்டுகோள்தான் என்று இதே சுமந்திரன் கூறிக் கொள்கிறார். “எமது கோரிக்கைக்கு செவிசாய்த்து, அனைத்து இலங்கையர்க்கும் உதவி பொருட்கள் வழங்க முன்வந்த மாண்புமிகு முதலமைச்சர் @mkstalin ஐயாவுக்கு மனப்பூர்வமான நன்றிகள்” என்று தன் ட்விட்டர் ஹாண்டிலில் எழுதிய தமிழ் அரசு கட்சியின் ‘வருங்காலத் தலைவர்’ அதோடு, ஸ்டாலினின் மற்றொரு சொல்லையும் எடுத்துக் கூறினார். “பகைவருக்கும் அருள்வாய் நன் நெஞ்சே என்பதைப் போல வாழ்பவர்கள் இலங்கை தமிழர்கள்” என்று முதல்வர் கூறியதை, சுமந்திரன் தன் ட்விட்டர் பதிவில் எடுத்துக்காட்டினார்..

இதற்குப் பிறகாவது சுமந்திரன் மற்ற ஈழ அமைப்புகளோடும், தலைவர்களோடும், நம்பிக்கை தரக்கூடிய நட்போடு பழகுவார் என்று நம்புவோம்.

முதல்வரின் இந்த எண்ணமும், நம்பிக்கையும், ஈழத் தமிழ்த் தலைவர்களின் மனதைத் தொடட்டும். இவர்கள் இனிமேலாவது தங்களின் சொந்த விருப்பு-வெறுப்புகளை உதறிவிட்டு, சுயநலனையே மையமாக்கி அரசியல் நடத்தாமல், பொதுஜனத்துக்காக பாடுபட முன்வருவார்கள் என்று எதிர்பார்ப்போம். இந்த மாறுதலைக் கொண்டுவர அவர்களால் முடியுமா, நடக்குமா என்பது எனக்கு சந்தேகமே. போர் முடிந்து 12 வருடத்துக்கு மேலாகக் கிடைத்த வாய்ப்புகளையும் அவர்கள் எந்த

## தமிழர்களுக்கு புதிய விடியலுக்கான ஒரு நல்ல மாற்றம்

வழியில் கையாண்டார்கள் என்று பார்க்கும்போது, எனக்கு ஏனோ அந்த நம்பிக்கை வரவில்லை. ஆனால் மக்கள், எல்லா தரப்பு மக்களும், முக்கியமாக இளைஞர்கள், இவர்களின் எதிர்கால செயல்பாடுகளை பூதக்கண்ணாடிக்குக் கீழ் உன்னிப்பாக கவனித்துக் கொண்டு, தவறுகளைத் தட்டிக்கேட்டு, சிறப்பான நடவடிக்கைகளைப் போற்றி, கவனமாக இருந்தால் எதிர்காலம் சிறப்பாக மாறலாம்.

மறுபடியும் இக்கட்டான பொருளாதார - அரசியல்-சமூகப் பிரச்னைகள் நாட்டைத் தாக்காமல் தடுத்துக் கொள்ளலாம். நாம் யாரிடமும் கையேந்தத் தேவை இருக்காது. மாறாக, நாம் மற்றவர்களுக்கு அவர்களின் துன்பங்களிலிருந்து வெளிவர அன்புக்கரம் நீட்டுவோம். முதல்வர் ஸ்டாலின் சொன்னதுபோல, ஈழத் தமிழ் மக்கள் இலங்கையில் வாழும் எல்லோரும் கஷ்டத்துக்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து, ஆட்சி முறையை சுத்தம் செய்து, புதிய விடியலில் தமிழர்களுக்கும் பங்கு தரப்படுகிற ஒரு நல்ல மாற்றத்துக்காகப் பங்கெடுத்துக்கொள்ளும் நிலை வரும் என்று நம்புகிறேன். முன்பே நான் சொன்னதுபோல், மாற்றத்துக்கான இந்த முயற்சிகளிலிருந்து நீங்கள் உங்களையே தனிமைப் படுத்திக்கொள்ளும்போது, வரப்போகிற மாற்றத்தின் பலன்களை அனுபவிக்கும் உரிமையையும் நீங்கள் இழக்கிறீர்கள். புரட்சியும் போராட்டமும் என்று நான் சொன்னால் அது ஆயுதம் ஏந்துவது என்றோ, வன்முறையில் ஈடுபடுவது என்றோ அர்த்தமில்லை.அதுபோன்ற வன்முறைமிக்க போராட்டங்கள் நாட்டையும் சமுதாயத்தையும் பெரும் அளவில் பாதிக்கும். மக்களுக்கு அவை எந்த நன்மையையும் தரா.

123 கோடி இந்திய ரூபாய் (16 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) மதிப்புள்ள உணவு மற்றும் மருந்துகளை இலங்கைக்கு அனுப்புவதற்கான தமிழ்நாட்டின் உணர்வுபூர்வமான கோரிக்கைக்கு பிரதமர் மோடியும் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்ஷங்கரும் எவ்வளவு விரைவில் பதில் அளிப்பார்கள் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். அதே நேரம், டெல்லி. இன்னொரு பெரிய செயல்பாட்டிலும் தன்னை இணைத்துக்கொண்டிருக்கிறது. சர்வதேச நிதியம் (IMF) மற்றும் பிற சர்வதேச அமைப்புகளோடு இணைந்து இலங்கையின் பொருளாதர சிக்கல்களுக்கான ஒரு நீண்டகாலத் தீர்வை உருவாக்கும் அந்தப் பணியையும் இந்தியா தொய்வின்றி நடத்திக்கொண்டிருக்கிறது.

இதுபோன்ற செயல்பாடுகளின் பின்னணியில் வேறொரு முக்கியமான அம்சமும் இருக்கிறது., மதிநுட்பம் நிறைந்த இராஜதந்திர செயல்பாட்டின் மூலம் இந்தியாவின் அரசியல் நோக்கங்களைப் பாதுகாப்பதில், பெய்ஜிங்கை விட டெல்லிக்கு நெருக்கமாகவே இலங்கையை வைத்துக்கொள்வதும் பிராந்திய பாதுகாப்புக்கு அவசியமானது. இதையெல்லாம் டெல்லி எப்படி நிறைவேற்றப்போகிறது என்பதையும் பொறுத்திருந்து பார்க்கலாம்.

மீண்டும் சந்திப்போம், வணக்கம்.

ஈழநாடு



# நிலை குலைக்கப்படும் தெற்காசியா!

- பாஸ்கர் செல்வராஜ்



(கடந்த வாரத் தொடர்ச்சி)

உக்ரைன் போரை அடுத்து ரஷ்யாவின் மீது ஏவப்பட்ட பொருளாதாரத்தடை எனும் நிதிய - அணு ஆயுத ஏவுகணை ஐரோப்பா, ஆசியா, ஆப்பிரிக்க என எல்லா கண்டத்தினரையும் பாதித்துக் கொண்டிருக்கிறது. ரஷ்யாவின் கோதுமை, எரிபொருள், உரங்கள், உலோகங்கள் உலக வர்த்தகத்தில் இருந்து நீக்கப் பட்டால் அது உற்பத்தியை பாதித்து உணவுப்பற்றாக்குறை மற்றும் விலைவாசி உயர்வைக் கொண்டுவரும் என்பதை நடைமுறையில் பார்த்துக் கொண்டிருக்கிறோம். இது ஏற்கனவே எரிந்துகொண்டிருந்த அமெரிக்காவின் மிகைடாலர் அச்சடிப்பால் ஏற்பட்ட விலைவாசி உயர்வு பிரச்சினைக்கு எண்ணெய் ஊற்றியதைப்போல தீவிரமாக்கி, கொழுந்துவிட்டு எரியவிட்டிருக்கிறது. இருப்பினும் உக்ரைனிய பிரச்சினையில் ஐரோப்பிய நாடுகள், அமெரிக்க சார்பெடுக்கவும் மற்றவர்கள் நடுநிலை வகிக்கவும் காரணம், வெறும் பொருளாதார காரணங்கள் மட்டுமல்ல அந்தந்த நாட்டு மக்களின் இனவாத அரசியல் உணர்வுகளும் இதில் பங்காற்றுகின்றன. மத்திய கிழக்கு, இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளின் நடுநிலை அரசியல் ஒற்றுமை ரஷ்யாவை தனிமைப்படுத்தி ஒடுக்கும் அமெரிக்காவின் நோக்கத்தை முறியடித்திருக்கிறது.

### உடையும் வர்த்தகம்... பெருகும் பிரச்சினைகள்!

அமெரிக்காவின் டாலர் வர்த்தகத்தை ஆயுதமாக்கும் நடவடிக்கையும் அதற்கு எதிரான ரஷ்ய - சீன நாடுகளின் சொந்த நாணய வர்த்தக மாற்று முன்னெடுப்பும் இதுவரையிலான உலக வர்த்தகக் கட்டமைப்பை உலுக்கி உடைக்க ஆரம்பித்திருக்கிறது. இவை எல்லாம் சேர்ந்து உலகம் முழுக்க விலைவாசி உயர்வு, டாலர் கடன் கொடுப்பனவுப் பற்றாக்குறை பிரச்சினைகளை ஏற்படுத்தி உள்நாட்டுக் குழப்பங்கள், போராட்டங்களை நோக்கி நகர்த்தி வருகிறது. இலங்கையின் அரசியல் சூழல் மற்ற நாடுகளில் இனிவரப் போகும் சூழலை முன்னறிவிக்கும் ஒரு தொடக்கம். கடனை அடைக்க மேலும் கடன் கொடுப்பது என்பது ஐஎம்எஃப் செய்யாதது அல்ல. இலங்கை இந்த சூழலை அடைவது அவர்களுக்குத் தெரியாததும் அல்ல. இதைக் கொண்டு முக்கிய வர்த்தகக் கடல்வழித் தடத்தில் இருக்கும் இலங்கையை வழிக்குக் கொண்டுவர நினைக்கிறார்கள். இந்திய, சீன நாடுகளை ஐஎம்எஃப்புக்கு எதிராக நிறுத்தியும், மாறிவரும் வர்த்தகச் சூழலை சாதகமாகப் பயன்படுத்தியும் இலங்கை இந்த அழுத்தத்தில் இருந்து தன்னை விடுவித்துக்கொள்ளும் திசையில் காய்களை நகர்த்துகிறது. சிங்கள - தமிழ் எதிர்க்கட்சிகள் ஒற்றுமையாக இந்தச் சூழலை பயன்படுத்தி ராஜபக்சே சகோதரர்களின் குடும்ப ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவரப் பார்க்கிறார்கள்.

### பாகிஸ்தானின் அரசியல் பொருளாதாரம்!

இதற்கு நேர்மாறாக பாகிஸ்தானில் எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒன்றுகூடி பிரதமர் இம்ரான் கானை பதவியில் இருந்து நீக்கி ஷரிப் குடும்ப ஆட்சியை மீண்டும் கொண்டு வந்திருக்கிறார்கள். எந்த ஒளிவுமறைவுமின்றி அமெரிக்கா அங்கே ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது. அங்கிருக்கும் எதிர்க்கட்சிகள் எல்லாம் இதற்கு உடன்பட்டு இருக்கின்றன. இந்த ஆட்சி மாற்றத்தைச் செய்ய வேண்டியதற்கான காரணத்தையும் இதைச் செய்ய ஏதுவாக நிலவும் மலிவான அரசியல் சூழலையும் பாகிஸ்தானின் அரசியல் பொருளாதாரத்தின் வழி புரிந்துகொள்ள முயற்சி செய்யலாம். இந்தியாவைப் போலவே பாகிஸ்தானும் பல்வேறு இனக்குழு சமூகங்களால் ஆனது. இந்திய சுதந்திரம் முதன் மூவர்ணத்தின் விடுதலையாக இருந்ததைப்போல அங்கு வலுவான பஞ்சாப் பகுதி நிலவுடைமையாளர்களின் விடுதலை கோரிக்கையாகவே அது இருந்தது. அதன்பிறகு பஞ்சாப், சிந்து பகுதியைச் சேர்ந்த நிலவு டைமை ஆதிக்க பெருமுதலைகளான ஷரிப், பூட்டோ குடும்பத்தினரே அங்கே அரசியல் ஆதிக்கம் செய்து வந்தனர்.

இவர்களைத் தவிர்த்து அந்நாட்டு ராணுவம் மற்றுமோர் அரசியல் சக்தியாக இருந்து வந்திருக்கிறது. இந்த இரு குடும்பங்களும் தங்களின் பொருளாதார சொந்த சமூக வலுவுடன் அரசியல் ஆதிக்கம் செய்தன என்றால், ராணுவம் தனது ஆயுத வலுவுடன் அரசியல் செய்து பொருளாதாரப் பலன்களை அடைந்து வந்தது. பனிப் போர் காலத்தில் அமெரிக்க சார்பெடுத்து அவர்களுக்கு நெருக்கமான அரேபிய நாடுகளின் உதவியுடன் மக்களை இஸ்லாமிய அடிப்படை வாதத்தில் மூழ்கடித்து இவர்கள் ஆட்சி செய்து வந்தார்கள். ஆப்கானிஸ்தானில் உள் நாட்டுப் போரை ஏற்படுத்தி அந்தப் பகுதியை உருக்குலைக்கும் மேற்கின் திட்டத்தின் பங்காளியாகவும் பிராந்திய அடியாளாகவும் இருந்து வந்தார்கள். பாகிஸ்தானில் அந்நியப் படைகளை நிறுத்த அனுமதித்து அந்த மண்ணின் இறையாண்மை கிலோ எவ்வளவு என்று கேட்கும் நிலைக்குக்கொண்டு சென்றார்கள்.






### மாறிய பாகிஸ்தானின் பாதை!

2008-க்குப் பிறகு அமெரிக்க - அரேபிய நாடுகளின் பொருளாதார வலு குறைய ஆரம்பித்தது. இந்தியப் பெருங் கடல் பகுதி வர்த்தகப் பகுதியை சுற்றிவளைத்து தனிமைப்படுத்தும் அமெரிக்காவின் முயற் சியை முறியடிக்க சீனா, பாகிஸ்தான் வழியாக நில வழியை ஏற்படுத்தி அரபிக் கடலை அடைய எடுத்த முடிவு, பாகிஸ்தானுக்கு புதிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. இந்தப் பாதையை நிலத்தால் சூழப்பட்ட ஆப்கானிஸ்தானுக்கும் மற்ற மத்திய ஆசிய நாடுகளுக்கும் அங்கிருந்து துருக்கிக்கும் பின்பு ஐரோப்பாவுக்கும் இதை விரிவு படுத்தும் போது இந்தப் பகுதிகளில் குவிந்து கிடக்கும் இயற்கை வளங்கள் சந்தைக்கு வரும். ஆசிய - ஐரோப்பிய கண்டங்களுக்கு இடையிலான வர்த்தகம் வேக மெடுக்கும். அது பாகிஸ்தானை இந்த வர்த்தகத்தின் இதயமாக மாற்றும் வாய்ப்பை வழங்கும். இவை எல் லாம் நடக்க முக்கிய நிபந்தனை, ஆப்கானிஸ்தானின் அமெரிக்க ஆக்கிரமிப்பு போரை முடிவுக்கு வந்து அங்கு ஒரு நிலையான ஆட்சி அமைய வேண்டும்.

அமெரிக்க - அரேபிய சார்பு என்பதை தளர்த்தி சீனாவுடனும் பாகிஸ்தான் நெருங்கியது. 'சிபெக்' (CPEC) திட்டம் நடைமுறைக்கு வந்தது. பாகிஸ்தானில் மற்ற சமூகங்களும் தங்கள் அரசியல் நலனை முன்னிறுத்திய அரசியல் பங்களிப்பின் அதிகரிப்பும் இரு குடும்ப ஆட்சியுடன் ராணுவத் துக்கு ஏற்பட்ட பிணக்கும் பஷ்டூன் இனத்தைச் சேர்ந்த இம்ரான்கானை ஆட்சியில் அமர்த்தியது. அவரது ஆட்சியின் வெளியுறவுக் கொள்கை, பிராந்திய நாடுகளுடனான நெருக்கத்தைக் கூட்டியது. ஆப்கானிஸ்தானில் சொந்த நலனை முன்னி றுத்திய நகர்வுகளை செய்தது. இறுதியில் பாகிஸ்தான் உளவுப் பிரிவின் துணையுடன் தாலிபான்கள் மின்னல் வேகத்தில் முன்னேறி காபூலை அடைய அமெரிக்கப் படைகள் அவசர அவசரமாக, அவமானகரமான தோல்வியுடன் வெளியேற நேரிட்டது.

பாகிஸ்தான், சீனா, ரஷ்யா, இரான் நாடுகள் இணைந்துகொண்டு ஆப்கானிஸ்தானில் குறைந்தபட்ச அமெரிக்க ராணுவ இருப்பை தக்கவைக்கும் முயற்சியையும் முறியடித்து விட்டன. பாகிஸ்தானில் ராணுவ நிலையை வைத்துக் கொள்ள அமெரிக்கா விடுத்த கோரிக்கையையும் இம்ரான்கான் அரசு நிராகரித்துவிட்டது. இதைத் தொடர்ந்து சிபெக் திட்டத்தை ஆப்கானிஸ்தானுக்கு விரிவுபடுத்துவது, மத்திய ஆசியாவுக்கும் துருக்கிக்கும் பாதையமைத்தல் எனப் பல திட்டங்களுக்குப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தானது.



### அமெரிக்காவால் தூக்கி எறியப்பட்ட இம்ரான்கான்!

பாகிஸ்தானுக்கு ஐஎம்எஃப் கொடுத்து வந்த கடனை அரசின் செயலின்மை, சீர்திருத்தங்களை முன்னெடுக்காமை உள்ளிட்ட காரணங்களைக் காட்டி முன்பே நிறுத்திவிட்டிருந்தது. அந்நாட்டின் டாலர் கையிருப்பு சில பில்லியன் டாலருக்கு சரிந்து கொண்டிருந்தது. ஐஎம்எஃப்பின் நிபந்தனைகளான எரிபொருள், மின்சாரம் உள்ளிட்டவற்றுக்கு வழங்கி வரும் மானியத்தை வெட்டினால் அது இம்ரானின் முடியப்போகும் ஆட்சிக்கு எதிரான மனநிலையை உருவாக்கி அவரை ஆட்சியில் இருந்து அகற்றும். ஆதலால் அவர் அதை ஏற்காமல் இருந்தார். ஏற்கனவே எண்ணெய் விலை உச்சத்தில் இருந்த நிலையில் வந்த உக்ரைன் போர் அவரை மேலும் நெருக்கடிக்குத் தள்ளும் சூழலில் அவர் ரஷ்யாவுக்குப் பயணம் செய்ய கிளம்பினார். அமெரிக்கா அதற்கு எதிர்ப்பு தெரிவித்தது. அதைப் புறம்தள்ளி இந்தியாவைப் போலவே இரு நாட்டு நாணயத்தில் 30 விழுக்காடு தள்ளுபடியில் எரிபொருள் மற்றும் கோதுமையை இறக்குமதி செய்ய ஒப்பந்தம் செய்கிறார்.

(அடுத்த வாரமும் வரும்)

# உயிர் காக்கும் உன்னத சேவை தொழிலே

**பஞ்சாட்சரம் ஜோன் டிலக்ஷன்**
*(சமூகவியல் மற்றும் மானிடவியல் சிறப்புக்கலை கிழக்குப் பல்கலைக்கழகம்)*




மே மாதம் முதலாம் திகதி என்றாலே எமக்கு முதலில் ஞாபகம் வருவது தொழிலாளர்களின் மகத்துவத்தை உலகிற்கு எடுத்துக் கூறும் தொழிலாளர் தினமாகும். தொழிலாளர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும், உண்டு, உடுத்து, சந்தோசமாக வாழ வேண்டும் என்ற நியாயமான சிந்தனையின் தாக்கத்தால் தமக்குரிய உரிமைகளைப் போராடியாவது பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்ட தொழிலாளர்களின் போராட்டத்தால் ஏற்பட்ட மறக்க இயலாத நினைவு நாளாக இத்தினம் காணப் படுகின்றது. முதலில் அமெரிக்காவில் நிகழ்ந்த போராட்டத்தால் பலர் தங்களது உயிர்களையும் இழந்தனர். இந் நிகழ்வானது தொழிலாளர்களின் தியாகத் திருநாளாக அமைகின்றது குறிப்பிடத்தக்க விடயமாகும். உலகில் வாழுகின்ற ஒவ்வொருவரினதும் உயிரைக் காப்பாற்றும் உன்னத சேவையினை வழங்கும் தொழிலாளர்களை போற்றுகின்ற தினம்தான் மே தினம் எனலாம்.

நாம் ஒவ்வொருவரும் செய்கின்ற தொழிலே நமக்கு தெய்வம் என்று கூறலாம். நாம் எந்த தொழில் செய்கின்றோம் என்பது முக்கியமல்ல நாம் செய்கின்ற தொழிலினை எவ்வாறு செய்கின்றோம் என்பதே மிக முக்கியமாகும். எந்தத் தொழிலினையும் எடுத்துக் கொண் டால் அந்த தொழிலில் எவ்விதமான பாரபட்சமும் பார்க்கக் கூடாது. குறிப்பாகச் சொல்லப்போனால் நாம் செய்கின்ற தொழிலில் உயர்வு, தாழ்வு என எந்த விதமான பேதமும் இல்லை. உலகத்தில் காணப்படுகின்ற அனைத்துத் தொழிலும் போற்றப்பட வேண்டியதாகும். நாம் செய்கின்ற தொழிலிலே நம் உயிர் மட்டுமல்லாது பல உயிர்களைக் காக்கும் மகத்தான வேவையைச் செய்கின்றது. ஆகவே நாம் செய்கின்ற தொழிலினை தெய்வமாக மதித்து அர்ப்பணிப்போடு செய்ய வேண்டும்.

நமது நாட்டினை எடுத்துக் கொண்டால் தொழி லினை பிரதானமாக நான்கு விதமாக பிரிக்கலாம். அரசதுறை சார் தொழில், தனியார்துறை சார்ந்த தொழில், பெருந்தோட்டத் தொழில், மற்றும் சுயதொழில், விவசாயம், மீன்பிடி, கூலிவேலை என்பவையே ஆகும். இவ்வாறு நாம் அன்றாடம் செய்கின்ற தொழிலே நமது வாழ்க்கையை வாழ்வதற்கு காரணமாய் அமைகின்றது. ஒரு நாட்டி னுடைய முன்னேற்றத்திற்கு காரண மாய் அமைபவர்கள் தொழிலாளர்களே. எந்த ஒரு நாட்டினையும் எடுத்துக்கொண்டால் அதன் அபி விருத்திற்கு மூலவேர்களாய் அமைபவர்கள் தொழி லாளர்களே ஆவர்

உதாரணமாக பார்க்கும் போது பெருந்தோட்ட தொழிலில் ஒன்றாகக் காணப்படுவது தேயிலை செய்கை யாகும். எமது நாடு உலகளாவிய ரீதியில் தேயிலை உற்பத்தியில் தனக் கான ஒரு இடத்தினை பிடித்திருப்ப தற்கு காரணமாய் அமைபவர்கள் பெருந்தோட்டத் தொழிலாளர்களே. இவர்களினுடைய கடின உழைப்பினாலே எமது நாடு தேயிலை உற்பத்தியில் சர்வதேச மட்டத்தில் முதன்மை யான இடத்தினைப் பெற்றுள்ளது. அந்தளவிற்கு தொழிலாளர்கள் ஒரு நாட்டினுடைய முன்னேற்றத்திற்கு காரணமாய் அமைகின்றனர்.

இன்றைய சமூதாயத்தில் வாழு கின்ற நாம் ஒவ்வொருவரும் எந்த தொழிலினையும் செய்ய தயாராக இருக்க வேண்டும். நாம் எந்தவொரு தொழிலிலும் உயர்வு, தாழ்வு பார்க்கக் கூடாது. உழைப்பால் உயர்ந்த செல்வந்தர்களின் வாழ்க்கை சரித்திரத்தை நாம் புரட்டி பார்க்கும் போது அவர்கள் எந்த தொழிலினையும் அந்தஸ்து குறைச்சல் என்று கருதவில்லை. அவ்வாறு கருதியிருந்தால் வாழ்க்கையில் முன்னேற்றமடைந்திருக்க மாட்டார்கள். ஆகவே இன்றைய உலகில் வாழுகின்ற நாம் எந்த தொழிலினையும் செய்வதற்கு தயாராக இருக்க வேண்டும் என்பதோடு அந்த தொழிலினை தெய்வமாக கருத வேண்டும்.

**ஒவ்வொருவரும் செய்கின்ற தொழிலே நமக்கு தெய்வம் என்று கூறலாம். நாம் எந்த தொழில் செய்கின்றோம் என்பது முக்கியமல்ல நாம் செய்கின்ற தொழி லினை எவ்வாறு செய்கின்றோம் என்பதே மிக முக்கியமாகும். எந்தத் தொழிலினையும் எடுத்துக் கொண்டால் அந்த தொழிலில் எவ்விதமான பாரபட்சமும் பார்க்கக் கூடாது. குறிப்பாகச் சொல்லப்போனால் நாம் செய்கின்ற தொழிலில் உயர்வு, தாழ்வு என எந்த விதமான பேதமும் இல்லை.**

தொழிலின் மகத்தவத்தையும், தொழிலாளர்களின் உழைப்பை மதித்துப் போற்றாத சமூகம் ஒரு போதுமே எழுச்சிபெற முடியாது. அபிவிருத்தி அடைந்த நாடுகளை பார்க்கும் போது எந்த தொழிலினையும் சமமாகக் கருதும் மனப் பான்மை காணப்பட்டதாலேயே தொழிற்துறையில் முன்னேற்றமடைந்து உயர்ந்து திகழ்கின்றனர். நம்மில் பலரை எடுத்துக்கொண்டால் மேசையில் அமர்ந்து செய்கின்ற தொழிலையே விரும்புகின்றனர். வயலில் இறங்கி வேலை செய்வதை விரும்புவதில்லை. அரச தொழிலினையே பெரும்பாலானோர் விரும்புகின்றனர். செய்யும் தொழிலை தெய்வமாக மதித்து எந்த தொழிலும் இழிவானதல்ல என்று கருதி எந்த தொழில்வந்தாலும் செய்வோம் என்ற மனநிலையில் நாம் காணப்பட வேண்டும்.

இன்றைய நவீன உலகில் சில நாடுகள் ஏனைய நாடுகளுக்கு வழிகாட்டும் நிலையிலுள்ளது. காரணம் அவர்களின் கடின உழைப்பே ஆகும். அந்நாட்டு மக்களின் அயராத உழைப்பும், தொழில் சமத்துவமும் அந்த நாடுகளின் முன்னேற்றத்திற்கு மூல காரணம் எனலாம். நாம் உழைக்கும் வர்க்கத்தினை உயர்வாக மதிக்க வேண்டும். உழைப்பாளர்களின் கடின உழைப்பே நம் ஒவ்வொருவரையும் வாழ வைக்கின்றது. உழவன் சேற்றிலே கால்களை வைத்ததால்தான் நாம் சோற்றிலே கைவைக்க முடியும். இராப் பகலாய் பாடுபட்டு உழைக்கின்ற ஒவ்வொரு உழவுத் தொழிலாளரையும் நாம் மதிக்க வேண்டும். எத்தொழில் செய்பவராயினும் அவர்களும் மனிதர் களே என்ற எண்ணம் நம் மனதில் இருக்க வேண்டும்.

தொழிலாளராகிய எம்மவர்கள் எம்மை யாரும் மதிக்கவில்லையே என வருத்தப்படவேண்டிய அவசியமில்லை. நாம் செய்கின்ற தொழிலாலே பலர் வாழ்கின்றனர் என்று கருதவேண்டும். நாம் சமூகத்தில் கூலிவேலை செய்கின்றோமே எம்மை யாரும் மதிக்கவில்லையே என்று கருதும் நிலைக்கு எந்த ஒரு தொழிலாளரையும் ஆளாக்கக்கூடாது. எந்த தொழில் செய்வோராய் இருந்தாலும் அவர்களையும் நம்மவர்களில் ஒருவ ராக கருதும் மனப்பான்மை எமக்கு காணப்பட வேண்டும். அவர்களின் தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியமாகும்.

இன்றைய காலகட்டத்தில் வெறு மனே அரச மற்றும் தனியார் தொழில் செய்தால் மட்டும் போதும் என்ற எண்ணத்தினை நாம் கைவிட வேண்டும். அவற்றுக்கு மேலதி கமாக சிறு சிறு கைத்தொழில் களையும் முன்னெடுக்க வேண்டும். அன்றாடம் கூலிவேலை செய்த தமது வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கும் உழைக்கும் வர்க்கத்தினர் செய்கின்ற தொழிலை செய்து பார்க்கும்போதுதான் அதனுடைய சிரமம் எமக்குத் தெரியும். அவர்கள் எவ்வளவோ பிரயாசப்படுகின்றார்கள் என்பது எமக்குப் புரியும்.

எனவே தொழிலாளர்களின் உயிர்காக்கும் சேவையினை மதிப்பது எமது மிக முக்கிய கடமையாகும். தொழிலாளர் களின் நலனை கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும். அவர்களுக்கு வேண்டிய அனைத்துவிதமான தேவைகளையும் நிறைவேற்றிக் கொடுப்பதற்கான முயற்சியினை முன்னெப்பதோடு சிறு சிறு தொழிலாளர்களின் தொழில் முன்னேற்ற வளர்ச்சிக்கு உதவுதவதற்கு நாம் முன்வர வேண்டும். இன்றைய காலத்தில் உலகத் தினை குலுக்கிக் கொண்டிருக்கும் கொரோனா என்ற கொடிய நோயினால் அனைத்து தொழிலாளர்களும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக அன்றா டம் கூலித்தொழில் செய்கின்ற தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இவர்களின் அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். ஆகவே தொழிலாளர்களின் பெருமையைக் கூறும் இந்த மே தினத்தில் ஒவ்வொரு தொழிலாளர்களையும் போற்ற வேண்டும். எந்த தொழிலினையும் குறைவாக மதிப்பிடாமல் சமமாக, அதாவது உயிர்காக்கும் ஒவ்வொரு தொழிலையும் தெய்வத்திற்கு சமமாக மதித்து செயற்படுவது எம் ஒவ்வொருவரினதும் மிக முக்கிய கடமையாகும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

**அனைத்து உள்ளங்களுக்கும் தொழிலாளர் தின வாழ்த்துக்கள்.**



# சனத் ஜயசூரியாவின் ரமழான் இப்தார்!

இஸ்லாமிய மக்கள் உலகளாவிய ரீதியில் தற்போது ரமழான் நோன்பு நாட்களை பக்தி பூர்வமாக அனுஷ்டித்து வருகின்றனர். ரமழான் நோன்பு இஸ்லாமிய மத நம்பிக்கையில் உடம்பை மட்டுமல்ல. மனதையும் தூய்மைப்படுத்தி இறை சிந்தனையோடு இருப்பதையே குறிப்பதாக இருக்கின்றது.

அத்துடன், ஒருவர் தன்னை பரிசுத்தப் படுத்துவதோடு மட்மல்லாது, தனது உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரையும் அரவணைத்து இறைவனின் கருணையை வேண்டி நிற்பதையும் ரமழான் நோன்பு குறித்து நிற்கின்றது.

இலங்கையின் பிரபல கிரிக்கெட் வீரரும் இலங்கை அணியை 1996ஆம் ஆண்டு கிரிக்கெட் உலகக்கிண்ணத்தை வெல்ல வைப்பதில் பெரும் பங்களித்தவருமான அதிரடி துடுப்பாட்ட வீரர் சனத் ஜயசூரிய இஸ்லாமியர்களின் ரமழான் நோன்புக்கு மதிப்பளித்து நோன்பு திறக்கும் மாலைவேளையில் தமது நண்பர்களுக்கு உணவளித்து தமது மத நல்லிணக்கத்தையும், சகோதரத்துவத்தையும் வெளிப்படுத்தியுள்ளார்.



சனத் ஜயசூரிய ஒரு பௌத்தர். இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவராகவுமிருந்த சனத் ஜயசூரியவுக்கும் ரமழான் நோன்புக்கும் இருக்கின்ற தொடர்பு என்ன என்பதை அறியும் போதே அவர் ஒரு சிறந்த கிக்கெட் வீரர் மட்டுமல்ல. நன்றி உணர்வுமிக்க தாம் கடந்து வந்த வாழ்க்கையை மறந்துவிடாத ஒரு மனிதர் என்பதையும் அறிய முடியும்.

இத்தடவை ரமழான் நோன்பு திறக்கும் இப்தார் வேளையில் தமது நண்பர்களுக்கு உணவளித்து அப்புனித விரதத்தின் மகத்துவத்தை சனத் ஜயசூரிய வெளிப்படுத்தியுள்ளார்.

இத்தடவை மட்டுமல்ல. கொழும்பில் தாம் காலூன்றிய காலம் முதல் ரமழான் நோன்பினை இஸ்லாமியர்களைப்போல முழு அளவில் அனுஷ்டிக்காவிட்டாலும் அந்த நாட்களில் முடியுமானவரை அப்புனித விரதத்தை தாம் அனுஷ்டிப்பதாக சனத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இதற்குரிய காரணம் என்னவெனில் சனத் ஜயசூரிய ஒரு கிரிக்கெட் வீரராக கொழும்பை வந்தடைந்த போது அவருக்கு கொழும்பு-கல்கிஸையில் தங்குவதற்கு வதிவிடத்தை வழங்கி உபசரித்த இஸ்லாமிய அன்பர் ஒருவரின் சகோதரத்துவ உணர்வே காரணமாகும்.

**களஞ்சியம்**

**(அனந்த பாலகிட்ணர்)**

மாத்தறையைப் பிறப்பிடமாக கொண்ட சனத் ஜயசூரிய மாத்தறை சென். சேவியர் கல்லூரியின் பழைய மாணவனாவார். அக்கல்லூரியின் கிரிக் கெட் அணியில் சனத் சிறந்து விளங்கினார். பாடசாலை படிப்பை முடித்துக்கொண்டபின்னர் கிரிக்கெட்டில் ஊறித்திளைத்த சனத் ஜயசூரிய கொழும்புக்கு தமது தாயார் சகிதம் வந்து தமது தனிப்பட்ட வாழ்க்கையையோடு தனது கிரிக்கெட் விளையாட்டையும் விரிவாக்கும் விதத்தில் கொழும்பு கல்கிஸையில் உள்ள இஸ்லாமிய அன்பர் ஒருவரது வீட்டிலேயே வாடகைக்கு குடிபுகுந்தார்.

அங்கிருந்த போதே கொழும்பில் பல பிரபல பாடசாலைகளிலிருந்து வந்த வசதிபடைத்த கிரிக்கெட் வீரர்கள் மத்தியில் மாத்தறையில் ஒரு நடுத்தர குடும்ப பின்னணியிலிருந்து வந்திருந்த சனத் ஜயசூரிய தமது கிரிக்கெட் விளையாட்டு துறை சார்ந்த வாழ்க்கையை பலத்த சவால்களுக்கு மத்தியில் கட்டியெழுப்பியிருந்தார். நாளடைவில் தமது அபாரமான ஆட்டத் திறமையின் மூலம் 1996ஆம் ஆண்டு அர்ஜுன ரணதுங்க தலைமையிலான கிரிக்கெட் உலகக் கிண்ணத்தை இலங்கை வெல்வதற்கும் மூலகாரணமாக சனத் ஜயசூரிய விளங்கினார்.

எனவே, கொழும்பில் தமது வாழ்க்கையை ஆரம்பித்த காலப் பகுதியில் அவர் தங்கியிருந்த இஸ்லாமிய அன்பரின் வீட்டில் ஆண்டு தோறும் ரமழான் நோன்பு அனுஷ்டிக்கப்படுவதாகவும் அப்போது தாமும் பலதடவைகள் அவர்களோடு சேர்ந்து ரமழான் விரதமிருந்ததாகவும் சனத் குறிப்பிட்டிருந்தார்.

சனத் ஜயசூரிய நோன்பிருந்த காலங்களில் சூரிய அஸ்தமனத்துக்குப்பின்னர் இஸ்லாமிய அன்பர்கள் ரமழான் இப்தார் உணவருந்துவது வழக்கமாகும். நோன்பு திறக்கும் இப்தார் வேளையில் தற்போது தமது உறவினர்களை மட்டுமல்ல. நண்பர்கள் அயலவர்களையும் அழைத்து உணவளிக்கும் பண்பு இஸ்லாமியரிடையே காணப்படுகின்றது.

எனவே, இப்தார் உணவளிக்கும் வழக்கத்தை கருத்தில் கொண்டே சனத் ஜயசூரிய கொழும்பில் தமது ஆடம்பரமான பிரத்தியேக இல்லத்தில் நோன்பு திறக்கும் மாலை வேளையில் இன்றுங்கூட தமது நண்பர்களுக்கு ரமழான்-இப்தார் உணவளித்து வருகின்றார்.

இதன்மூலம் கிரிக்கெட் குறுகிய வட்டங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு கனவான்களின் விளையாட்டு என்பதையும் அவர் நிரூபித்துள்ளார். (Cricket is a Getlemen's Game).

---




# Go Home Gota போராட்டம்: தமிழர்கள் தூரவிலகி நிற்பதால் சாதிக்கப்போவது எதுவுமில்லை!

**- வீரகத்தி தனபாலசிங்கம்**

தென்னிலங்கையில் இன்று நடைபெறுகின்ற போராட்டங்கள் பொருளாதார இடர்பாடுகளின் விளைவாக மூண்டவை. முன்னரைப் போலன்றி மிகவும் இளையவர்களும் படித்தவர்களும் பெருமளவில் பங்கேற்கிறார்கள். ஆனால், பொருளாதார நிவாரணம் கேட்டு சாதாரண மக்கள் வீதிகளில் இறங்கியிருப்பதை செவிசாய்க்காமல் ஜனாதிபதியும் அரசாங்கமும் அலட்சியம் செய்வதால் நாளடைவில் அவை அரசியல் கோரிக்கைகளை முன்வைக்கும் போராட்டங்களாக முனைப்படைந்து இன்று உலகின் கவனத்தை ஈர்த்திருக்கின்றன.

பௌத்த சிங்கள பேரினவாத போதையை ஊட்டி தங்களை பிழையாக வழிநடத்திய ராஜபக்ஷக்கள் நாட்டை வங்கரோத்து அடையச் செய்துவிட்டார்கள் என்ற புரிதல் சிங்கள சமுதாயத்தின் கணிசமான பிரிவினர் மத்தியில் வந்திருக்கிறது. அதற்காக அவர்கள் தமிழர்களின் அபிலாசைகள் எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்பவர்களாக மாறிவிட்டார்கள் என்றோ, மாறுவார்கள் என்றோ நான் கூறவில்லை. ஆனால், அந்தப் புரிதல் மேலும் அவர்கள் மத்தியில் விரிவடையக்கூடியதான ஒரு தந்திரோபாயத்தையே தமிழர் அரசியல் சக்திகள் கையாளவேண்டும்.

அதை விடுத்து நாம் கஷ்டப்பட்டபோது நீங்கள் குரல் கொடுக்கவில்லை. அதனால் நீங்கள் கஷ்டப்படும் போது நாம் ஒருமைப்பாட்டைக் காட்ட மாட்டோம் என்று விதண்டாவாதமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தக்கூடாது. காலமாற்றத்துக் கேற்ப நாம் சிந்திக்கவேண்டும்.

தமிழர்கள் நெடுகவும் கடந்த காலத்தில் வாழக் கூடாது. கடந்தகால அனுபவங்களில் இருந்து படிப்பினைகளைப் பெற்று புதிய பாதையை வகுக்க வேண்டும். மாறிவரும் உலகில் புதிய வாய்ப்புக்களை நாம் தவறவிடவும் கூடாது. இன்று ராஜபக்ஷக்களுக்கு எதிராக கிளர்ந்தெழுந்து அவர்களை வீட்டுக்குப் போகுமாறு கேட்பவர்கள் தென்னிலங்கையின் புதிய தலைமுறையினர்.

தற்போதைய போராட்டங்களில் அவர்கள் முன்வைக்கும் கோரிக்கைகளைப் பொறுத்தவரை, அவர்களும் நாங்களும் சந்திக்கக்கூடிய பல புள்ளிகள் இருக்கின் றன. அதை பயன்படுத்துவதன் மூலம் வரும் காலத்தில் புதியதொரு அரசியல் கலாசாரத்துக்கு வழியை சிறிது சிறிதாக திறக்க வாய்ப்புக்கள் வரலாம். அது ஒரு நீண்டகால செயன்முறை.

**காலங்காலமாக இனவாத அரசியலுக்குள் மூழ்கியிருந்த ஒரு சிங்கள சமுதாயத்தின் இன்றைய தலைமுறையினர் லிமுகத்திடலில் வெளிப்படுத்துகிற கோசங்களின் ஆரோக்கியமான அம்சங்களை நாம் அடையாளம் காணவேண்டும்.**

காலங்காலமாக இனவாத அரசியலுக்குள் மூழ்கியிருந்த ஒரு சிங்கள சமுதாயத்தின் இன்றைய தலைமுறையினர் காலிமுகத்திடலில் வெளிப்படுத்துகிற கோசங்களின் ஆரோக்கியமான அம்சங்களை நாம் அடையாளம் காணவேண்டும். மூன்று தசாப்தகால போரின்போதான பொருளாதார இடர்பாடுகளை எதிர்கொண்டு சமாளித்தவர்கள் நாம், தற்போதைய நெருக்கடியையும் கடந்து செல்வோம் என்று கூட சிலர் பொருந்தாத்தன்மையாக பேசுவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது.

அதைவிடுத்து எம்மையும் அவலத்துக்குளளாக்குகிற பொருளாதார இடர்பாடுகளை முடிவுக்கு கொண்டுவரக் கோரியும் அந்த இடர்பாடுகளுக்கு காரணமான ஆட்சியாளர்களை விரட்ட வேண்டியும் நடைபெறுகின்ற போராட்டங்களில் இருந்து எம்மைத் தூரவிலக்குவதன் மூலம் நாம் சாதிக்கப் போவது எதுவும் இல்லை.

# இலங்கையின் இனவுறவு சிதைப்பின் பின்னணி

**த.மனோகரன்**
(அகில இலங்கை இந்துமாமன்ற துணைத்தலைவர்)



இலங்கைத் தீவிலே பௌத்தர்களுக்கும், இந்துக்களுக்குமிடையே இன உறவைப் பலப்படுத்துவதற்காக இருந்து வந்த உறவின் சிதைவிற்கான ஏதுகளையும் கண்டறிய தேவையுள்ளது. நோயைக் குணப்படுத்த முன் நோயாளிக்கு நோய் ஏற்பட்டதற்கான ஏதுக்கள் எவை என்பதைக் கண்டறிந்தே வைத்தியம் செய்யப்படுகின்றது. அதுவே முறைமை. அதேபோல் இனங்களுக்கிடையே பிளவுகள், பகைமை, சந்தேகம் போன்றவை ஏற்பட வழிவகுத்த நிகழ்வுகளைத் தெளிவுப்பட தெரிந்துகொண்டால் மட்டுமே உறவுப் பாலத்தை உறுதியாக அமைக்க வழி கிட்டும்.

வரலாற்று ரீதியாக நோக்குமிடத்து கி.மு.543 இல் விஜயன் இலங்கையில் காலடி வைத்ததாகவும், அதன் பின்பே இலங்கையின் வரலாறும், சிங்களவரின் வரலாறும் தொடங்குகின்றன என்றும் கூறப்படுகின்றது. விஜயன் வருகைக்கு பின் மூன்று நூற்றாண்டுகளுக்கு பின்பே தேவநம்பியதீஸன் காலதத்தில் பௌத்த சமயம் இலங்கைக்குள் ஊடுறுவியதாகவும் கூறப்படுகின்றது. இந்நிலையில் விஜயனுடன் வந்த உபதிஸ்ஸன் என்ற பிராமணன் தீவின் நாலாப்பக்கங்களிலுமிருந்த ஐந்து சிவாலயங் களைச் சென்று தரிசித்ததாகவும் கூறப்பட்டுள்ளது. அதாவது புத்த சமயம் இத்தீவில் புகுவதற்கு முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னரே நகுலேஸ்வரம், கேதீஸ்வரம், கோணேஸ்வரம், முன்னேஸ்வரம், தொண்டீஸ்வரம், ஆகிய பஞ்சேஸ்வரங்கள் என்ற ஐந்து சிவாலயங்கள் இருந்தமை கூறப்பட்டுள்ளது. இதன் மூலம் உலகிலே புத்த பெருமானும், நபிபெருமானும் அவதரிப்பதற்கு முன்பே இலங்கைத் தீவில் சிவபெருமானுக்குரிய வழிபாட்டுத் தலங்கள் இருந்தன என்பது வெளிப்படுவதுடன் இலங்கையில் இந்து சமயம் புகுந்ததோ அன்றி புகுத்தப்பட்டதோ அல்ல என்பதும் வரலாற்றுக் காலத்திற்கு முந்தியே இருந்ததென்பதும் ஆதாரப்படுத்தப்படுகின்றது.

இந்த உண்மையை முதலில் சகல தரப்பினரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இது உறவுப் பாலத்திற்கான அடிப்படையாகவும் அமையும். துண்டுதுண்டாகப் பல நாடுகளாகப் பிரிவுப்பட்டு ஆளப்பட்ட இலங்கைத் தீவினைக் கைப்பற்றி ஆண்ட ஐரோப்பியர் ஒரே நாடாக உருவாக்கி சுதந்திரம் என்ற பெயரில் சுதேசப் பெரும்பான்மையினத்தவர்களிடம் ஒப்படைத்துச் சென்றனர்.

வரலாற்று பாடமென்பது நடந்த நிகழ்வுகளை பக்கச் சார்பற்று வெளிப்படுத்தும் ஒன்றென்று கூறப்படுகின்றது. உண்மையை மறைக்காது வெளிப்படையாகக் கூறுவதே வரலாறு. இருந்தபோதிலும் நமது நாட்டில் பாடசாலைகளில் கற்கும் பிள்ளைகளுக்கான வரலாற்றுப் பாடத்தில் யாழ்ப்பாணத் தமிழரசு பற்றியோ, வன்னித் தமிழரசு பற்றியோ, கிழக்கின் மண்முனை தமிழரசு பற்றியோ எந்தவொரு குறிப்பும் இல்லை. இதன் மூலம் இந்நாட்டின் இந்துக்களின், தமிழர்களின் பண்டைய இருப்பு, ஆட்சி போன்றவை மறைக்கப்பட்டு நாட்டின் அந்நியராகக் காட்டப்படகின்றது. இது ஒரு வரலாற்று மோசடி மட்டுமல்ல, இன உறவின் சிதைவுக்கான வழிகாட்டலாகவும் உள்ளது.

சுதந்திர இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட இந்திய வம்சாவளி தமிழ் மக்களின் குடியுரிமை, வாக்குரிமைகளைப் பறித்து நாட்டின் அந்நியராக, நாடற்றவர்களாக ஆக்கிய சட்டம் இலங்கையில் இனங்களுக்கிடையே பிரிவினை வாதத்தை ஏற்படுத்திய முதலாவது ஆவணமாகக் கொள்ளப்பட வேண்டியதாகும். நாட்டின் குடிமக்களில் ஒருசாராரின் அடிப்படை உரிமைகளைப் பறித்து, பிரித்துப் பார்த்த பிரிவினைவாததத்திற்கு வித்திட்ட கொடுமை அன்றைய டீ.எஸ்.சேனாநாயக்க தலைமையிலான அரசையே சார்ந்தது.

அடுத்து மூன்றாவது பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட தமிழர்களின் அடிப்படை உரிமையான மொழியுரிமையைப் பறித்த சட்டம் நாட்டின் இரண்டாவது பிரிவினைவாதச் சட்டமாகும். அதன் மூலம் தமிழர்களின் ஒரு தொகுதியினரது குடியுரிமை, வாக்குரிமை முதலில் பறித்து அடுத்து ஒட்டுமொத்த தமிழ் மக்களதும் மொழியுரிமையைப் பறித்து நாட்டில் இனங்களுக்கிடையே பிரிவினைவாதத்தை வலுப்பெற வழி செய்யப்பட்டது. அந்தப் பழி எஸ்.டபிள்யூ.ஆர்.டீ.பண்டாரநாயக்க அரசாங்கத்தின் தலையிலேயே விழுந்தது.

**உலகிலே புத்த பெருமானும், நபிபெருமானும் அவதரிப்பதற்கு முன்பே இலங்கைத் தீவில் சிவபெருமானுக்குரிய வழிபாட்டுத் தலங்கள் இருந்தன என்பது வெளிப்படுவதுடன் இலங்கையில் இந்து சமயம் புகுந்ததோ அன்றி புகுத்தப்பட்டதோ அல்ல என்பதும் வரலாற்றுக் காலத்திற்கு முந்தியே இருந்ததென்பதும் ஆதாரப்படுத்தப்படுகின்றது. இந்த உண்மையை முதலில் சகல தரப்பினரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.**

இந்த நாட்டில் பிறந்த இலட்சக்கணக்கான தமிழர்களை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யும் ஒப்பந்தமான “ஸ்ரீமாசாஸ்திரி” ஒப்பந்தம் கொண்டுவரப்பட்டது. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலத்தில் நாகரீக உலகம் வெட்கப்பட வேண்டிய கேவலமான மனித ஏற்றுமதி, இறக்குமதி ஒப்பந்தம் ஒரு பிரிவினைவாத இனவாத சிந்தனையின் பிரதிபலிப்பே ஆகும். சிங்கள மொழியில் தகைமை பெறாத தமிழ் அரச அலுவலர்கள் எவ்வித நட்ட ஈடுமின்றி வெளியேற்றப்பட்டமை, தரப்படுத்தல் என்ற போர்வையில் தமிழ்ப் பிள்ளைகளின் கல்வியில் பாகுபாடு ஏற்படுத்தியமை போன்றவையும் இனவெறிப் பயங்கரவாதப் பிரிவினைவாதமே என்பதை மறுதலிக்க முடியாது.

பல நூற்றாண்டுகளாக இந்துக்களின் புனிதத் தலமாக போற்றப்பட்டு வந்த கதிர்காமத் திருத்தல முகப்பிலிருந்த ‘ஓம்’ என்ற எழுத்துக்கள், சின்னம் அகற்றப்பட்டமை ஒரு இன ரீதியான, மொழி ரீதியான, மத ரீதியான பிரிவினைவாத சிந்தனையின் வெளிப்பாடே என்பதை ஏற்கவே வேண்டும்.

கதிர்காமக் கந்தனை தரிசிக்க வந்த அடியவர்களுக்கு எதுவித பாகுபாடுமின்றி உணவளித்து, தங்குமிட வசதி தந்து வந்த இராமகிருக்ஷ்ணா மடத்தை அது இந்துக்களுக்குரியது என்பதால் பறித்தெடுத்தமை ஆட்சியாளரின் அடிமனத்திலிருந்த இந்து மத வெறுப்புடன் கூடிய பிரிவினைவாதமேயன்றி வேறல்ல.

நாட்டில் இன நல்லுறவுக்கெதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட இனவெறிப் பயங்கரவாதச் செயல்களும், பிரிவினைவாதத்தின் காரணிகளாயின. 1956, 1958, 1977, 1981, 1983 என்று வரலாற்றில் பதியப்பட்ட தமிழருக்கெதிரான வன்முறைகளால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் அநேகர் உயிர் இழப்புக்கள், உறுப்பு, உறவினர், இருப்பிடம், சொத்து சுகங்கள், கல்வி, தொழில் என்று பலவற்றை இழந்து, நிம்மதியையும் இழந்து தமிழர்களை அல்லல்படுத்திய செயற்பாட்டின் உரித்தாளிகள் இந்நாட்டில் இனங்களுக்கிடையேயான பிரிவினைவாதத்திற்கு வித்திட்டனர். இவ்வாறான பிரிவினை வாதத்திற்கு உந்துதல் தந்த குற்றச் செயல்கள் மறைக்கப்பட்டுவிட்ட முழுமையற்ற வரலாறே இந்நாட்டில் காணப்படுகின்றது.

அரசியலமைப்பில் தமிழ்மொழிக்கு நிர்வாக மொழியுரிமை உள்ளதென எழுதிவைத்துவிட்டு அதை நடைமுறைப்படுத்தாது புறந்தள்ளியிருப்பதும் இனப் பிளவுக்கான கால்வாயாகவே காணப்படுகின்றது. இவையெல்லாம் நாட்டின் பயங்கரவாத யுத்தம் நடைபெற்றதாகக் கூறப்படும் முப்பது ஆண்டுகளுக்கு முற்பட்டவை.

இலங்கையில் விஜயன் வருவதற்கு முன்னரே சிவாலயங்கள் இருந்தன. இதிலொன்று முன்னேஸ்வரம். அந்த முன்னேஸ்வர திருக்கோவில் வளவில் சந்திரவட்டக் கல் ஒன்று இருந்ததென்பதற்காக அது புத்த கோவிலாக இருந்ததென்று எல்லாம் வல்ல மெத்தப்படித்த தொல்பொருள் சக்கரவர்த்தியெனப்படும் ஒரு புத்த குருவானவர் கூறியது இனவாத பிரிவினைவாதம் அல்ல என்று கருதமுடியுமா? சந்திரவட்டக் கற்கள் யாவும் புத்த சமய வழிபாட்டிடங்களுக்கு உரியதெனும் கருத்து ஏற்கப்படுமானால் உலகிலுள்ள தலையை முழுமை யாக மழித்தவர்கள் யாவரும் குறிப்பிட்ட சமயத் துறவிகளென்று எதிர்காலத்தில் கூறப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

நாட்டில் அமைதி நிலவ, நிம்மதி பேணப்பட, வளம் சேர நாட்டிலுள்ள சகல மக்களும் பேதமற்று வாழும் வழி இருத்தல் வேண்டும். அது தவறின் நாடு ஆச்சரியமான முறையில் அதல பாதாளத்தில் விழுந்து, சிதைந்து, அழிந்துவிடும். நாட்டிலே மிஞ்சக்கூடியது வேதனை மட்டுமே.

இன்னும் பல்லாயிரம் தமிழ் மக்கள் தமது பாரம்பரிய சொந்த வாழ்விடங்களிலிருந்து வெளியேறி அகதிகளாக, அநாதைகளாக, தொழிலின்றி, குடியிருக்க வீடின்றி, பிள்ளைகளுக்கான கல்வி வசதியின்றி அச்சத்துடன் வாழ்கின்றமை பதிவேறியுள்ளது. இவ்வாறு அவதியுறு பவர்களில் பெரும்பாலானவர்கள், அல்லது யாவரும் விஜயன் வருகைக்கு முன் இந்நாட்டில் வாழ்ந்த இந்துக்களின் வழித்தோன்றல்களே என்பது சகிக்க முடியாத உண்மை.

வீடற்றவர்களுக்குத் தொடர்மாடி வீடுகள் கட்டி வழங்கப்படுவதாகக் கூறப் படும் இந்நாட்களில் பாரம்பரியமாக சொந்த நிலத்தில் வீடு வாசல்களுடன் வசதியாக வாழ்ந்தவர்களுக்குத் தமது சொந்த காணியில் கல்பதிக்க முடியாது தடுக்கப்படும் இனவாதம், பிரிவினைவாதமாகவும் கருதப்பட வழியுள்ளது.

பிறப்பால் இந்துவான புத்தரின் போதனைகள் இந்து சமயத்தின் கோட்பாடுகளை விஞ்சியவை அல்ல. அதேபோல் தமிழருக்கும் புத்த சமயம் உட்பட எந்தவொரு சமயமும் அந்நியமானதல்ல. அதனால்தான் உலகிலுள்ள முக்கிய சமயங்களின் தத்துவங்களை வரிந்தேற்று இலக்கியமாக வெளிப்படுத்தி நிற்கின்றது நம் தமிழ்மொழி.

நாட்டிலுள்ள பௌத்த வழிபாட்டிடங்களில் இந்து தெய்வத்திருவுருவங்கள் வழிபாட்டிலுள்ளன. பௌத்த, சிங்கள மக்கள் தமது வழிபாட்டிடங்களில் இந்து தெய்வங்களை வழிபடுவது மட்டுமன்றி இந்து ஆலயங்களுக்கும் சென்று பக்தியுடன் வழிபடுகின்றனர். சாதாரண மக்களின் மத்தியிலே பௌத்த, இந்து பிரிவினை இல்லை. அரசியல் ஆதாயத்திற்காக அரசியல்வாதிகளே பிரிவினைக்கு தூபமிடுகின்றனர்.

இவ்வாறு உண்மை நிலையுள்ள போது நாட்டின் எதிரகால நலன் கருதி தமிழ் மக்களின், இந்துக்களின் அடிப்படை வாழ்வுரிமையை, பெறப்பட வேண்டிய உரிமைகளை வழங்கி பௌத்தர்களும், இந்துக்களும் மட்டுமல்ல ஏனையோரும் சமத்துவமாக வாழ வழிகாட்டும் நற்பணியிலே ஈடுபடுவதே இன்று பொறுப்பு வாய்ந்தோரின் கடமை, அதுவே சிறப்பும்கூட.

வெறுமனே ஒருவர் வழிபாட்டிடங்களுக்கு மற்றவர் சென்று வழிபட்டால் சமூக உறவு ஏற்படுமென்றோ நாட்டில் பிரிவினைவாதத்திற்கு வித்திட்ட செயற்பாடுகள் மறுக்கப்படுமென்றோ எண்ணுவது தப்பாகும். உலகிலே வாழும் உரிமையை உறுதிபடுத்தும் செயற்பாடுகளை மேற்கொள்வோர் பாராட்டப்படுவர். அன்றில் ‘ஏனென்று கேட்பாரை இகழும் நீரார் இட்டதுதான் சட்டமென எண்ணும் சாரார். தானென்ற அகந்தையினைத் தன்னுள் கொண்டோர் தாழ்ந்திடுவர் வரலாறு சாற்றும் சான்று’ என்ற கூற்று மெய்ப்பிக்கப்படுவது மட்டும் உறுதி.

# மகேஷ் பாபுவின் உத்தி!

தெலுங்கு நடிகர் மகேஷ் பாபு நடித்துள்ள படம் சர்காரு வாரி பாட்டா. கீர்த்தி சுரேஷ் நாயகியாக நடித்துள்ளார். கீதா கோவிந்தம் படத்தை இயக்கிய பரசுராம் இயக்கியுள்ளார். இந்தப் படத்தை மகேஷ் பாபு தயாரித்துள்ளார்.

இந்தப் படம் வருகிற மே 12ஆம் திகதி வெளிவருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தெலுங்கு நடிகர்களான பிரபாஸ், அல்லு அர்ஜுன், ராம் சரண், ஜூனியர் என். டி. ஆர். போன்றோர் தமிழில் ஒரு வியாபார சந்தையை உருவாக்கியிருப்பதை போன்று மகேஷ் பாபுவும் அந்த முயற்சியில் இறங்கி உள்ளார்.

அதனால் சர்காரு வாரி பாட்டாவை தமிழில் மொழியாக்கம் செய்து வெளியிட இருக்கிறார். இதற்கு முன்னர் ஏ. ஆர். முருகதாஸ் இயக்கத்தில் மகேஷ் பாபு நடித்த ஸ்பைடர் திரைப்படம் தமிழில் வெளியானது. ஆனால் அந்த படம் தோல்வியை தழுவியமை குறிப்பிடத்தக்கது.



# இணைய தொடர் விஜய்சேதுபதி!

சமந்தா நடித்த பேமிலி மேன் தொடரை இயக்கிய ராஜ் மற்றும் டிகே அடுத்து இயக்கும் புதிய இணைய தொடர் பர்ஜி. இந்த தொடரில் பொலிவுட் நடிகர் ஷாகித் கபூர் பொலிஸ் அதிகாரியாகவும், விஜய் சேதுபதி முக்கிய பாத்திரத்திலும் நடிக்கிறார்கள். இவர்கள் தவிர ராஷி கண்ணா, ரெஜினா, கே. கே. மேனன், அமோல் பலேகர், உள்பட பலர் நடிக்கின்றனர். இந்த தொடர் விரைவில் வெளியாகவுள்ளது.




இது ஒரு திருடன் பொலிஸ் கதை என்று கூறப்படுகிறது. புகழ் பெற்ற ஒரு திருடனுக்கும், திறமையான ஒரு பொலிஸ் அதிகாரிக்கும் இடையில் நடக்கும் சதுரங்க ஆட்டம் தான் கதை என்கிறார்கள்.

# கவர்ச்சிக்கு எல்லை உண்டு

முன்னணி நடிகைகள் பலர் கவர்ச்சிக்கு மாறி உள்ளனர். ஒரு பாடலுக்கு அரைகுறை உடையில், கவர்ச்சியாக குத்தாட்டம் ஆடவும் கதாநாயகிகள் சம்மதிக்கின்றனர்.

இந்நிலையில், குடும்ப பாங்கான கதாபாத்திரங்களில் மட்டுமே நடித்து வரும் கீர்த்தி சுரேஸிடம் கவர்ச்சியாக நடிப்பீர்களா? குத்தாட்டம் ஆடுவீர்களா? என்று கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதில் அளித்த கீர்த்தி சுரேஷ், "நான் சினிமாவுக்கு வந்த ஆரம்பத்தில் இருந்து இப்போது வரை, நடிப்புக்கு முக்கியத்துவம் இருக்கும் கதாபாத்திரங்களின் மீது மட்டுமே கவனம் செலுத்தி வருகிறேன். கவர்ச்சியாக நடிக்கும் விஷயத்தில் எனக்கென்று சில எல்லைகளை வைத்து இருக்கிறேன். எந்த நிலையிலும் அதை மீற மாட்டேன்." என்று கூறியுள்ளார்.



# நிர்வாணமாக நடிக்க வற்புறுத்து!



"பிசாசு 2 படத்தில் 15 நிமிட காட்சியில் நிர்வாணமாக நடிக்க வற்புறுத்தினர்"என நடிகை அண்ட்ரியா கூறிய தகவல் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மிஷ்கின் இயக்கத்தில் கதை நாயகியாக அண்ட்ரியா நடித்துள்ள பிசாசு 2 படத்தின் முன்னோட்டம் வெளியானது. இப்படத்தில் அண்ட்ரியா நிர்வாணமாக நடித்திருப்பது படம் மீதான எதிர்பார்ப்பை அதிகரித்துள்ளது.

இந்த நிலையிலேயே அவரின் குற்றச்சாட்டு வெளியாகியுள்ளது. "பிசாசு 2 கதையில், 15 நிமிட காட்சியில் நிர்வாணமாக நடிக்க வேண்டும் என்றனர். இதனால் நடிக்க மறுத்தேன். நான் மறுத்த போதும், என்னை கட்டாயப்படுத்தினர். பின்னர் கதை தரமானதாக இருந்ததால் அந்த காட்சியில் நடிக்க சம்மதித்தேன்" என்று கூறியுள்ளார்.

# சூர்யாவை இயக்குவது யார்?



இயக்குநர் பாலா படத்தில் தீவிரமாக இருக்கும் சூர்யா, அடுத்து யார் படத்தில் நடிக்கப்போகிறார் என்பதுதான் பலருடைய கேள்வியாக இருக்கிறது. தற்போது சூரியை வைத்து 'விடுதலை' படத்தை இயக்கும் வெற்றி மாறன் 'வாடிவாசல்' படத்தில் சூர்யாவைக் களமிறக்க ஒளிப்பட சோதனை வரை முடித்துவிட்டார். இன்னொரு பக்கம் 'சிறுத்தை' சிவாவும் சூர்யா திகதிக்காகக் காத்திருக்கிறார். இயக்குநர் சுதா கொங்கராவும் சூர்யாவுக்காக காத்திருக்கிறார் மூவரில் யாருக்கு சூர்யா முதலில் சம்மதம் தெரிவிக்கப் போகிறார் என்பதுதான் தெரியவில்லை.







**திரைப்படம் - காத்துவாக்குல ரெண்டு காதல்**
**இயக்கம் - விக்னேஷ் சிவன்**
**இசை - அநிருத்**
**நடிப்பு - விஜய் சேதுபதி, நயன்தாரா, சமந்தா**

ஒரு காதலன், ஒரு காதலி என நிறைய படங்களில் பார்த்தாகிவிட்டது என இயக்குநர் விக்னேஷ் சிவன் யோசித்திருப்பார் போலிருக்கிறது. ஒரு காதலன், இரண்டு காதலி என வைத்து கலகலப்பாக ஒரு காதல் கதையைச் சொல்லலாம் என இந்தப் படத்தைக் கொடுத்திருக்கிறார்.

கலகலப்பு கொஞ்சமாக இருந்தாலும் காதல் இரட்டிப்பாகவே இருக்கிறது. பகலில் ஒரு காதலி, இரவில் இன்னொரு காதலி என காதலிக்கும் ஒரு காதலனின் கதை. கொஞ்சம் தடுக்கயிருந்தாலும் ஏமாற்றுக்காரன் என சொல்ல வைக்கும் ஒரு கதையாக இருந்திருக்கும். ஆனால், சமநிலையாக திரைக்கதை அமைத்து அதில் கொஞ்சம் பாசம், உணர்ச்சி என்று கலந்து முடிவில்லாத காதலைக் கொடுத்திருக்கிறார் விக்னேஷ் சிவன்.

சிறு வயதிலிருந்தே அதிர்ஷ்டம் இல்லாத துரதிர்ஷ்டக்காரன் விஜய் சேதுபதி. மழை பொழியும் போது அவர் போய் மழையில் நின்றால் மழை நின்று விடும். அவர் கேட்டது, ஆசைப்பட்டது எதுவுமே கிடைத்ததில்லை. பகலில் கார் ஓட்டுபவராகவும், இரவில் கிளப்பில் காவலாளியாகவும் வேலை பார்ப்பவர். ஒரு விநாயகர் சதுர்த்தி நாளில் பகலில் நயன்தாராவை சந்திக்கிறார், இரவில் சமந்தாவை சந்திக்கிறார். இருவருடனும் காதல் வருகிறது. ஒரு சந்தர்ப்பத்தில் அவரின் "ரெண்டு" காதல் விவகாரம் இரு காதலிகளுக்கும் தெரிய வருகிறது. அதன்பின் என்ன நடக்கிறது என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

காதலைக்கூட சாதாரணமாக செய்கிறார் விஜய் சேதுபதி. அவர் பெரியளவில் பொருந்தவில்லை. ஆனால், அவர் ஒரே நேரத்தில் இருவரைக் காதலிக்கிறார் என்பதை நம்ப முடிகிறது. சிறு வயதிலிருந்தே எதுவுமே கிடைக்காதவரின் வாழ்க்கையில் ஒரே நேரத்தில் இரண்டு காதலிகள் வந்தால் வேண்டாமென்று மறுக்காமல் இருவரையும் காதலித்துத் தள்ளுகிறார்.

நயன்தாராவிடம் புத்துணர்ச்சியை காணவில்லை. நடிப்பிலும் அவ்வளவு ஈர்க்கவில்லை. அதேசமயம் காட்சிக்கு காட்சி வரவேற்பை பெறுகிறார் சமந்தா. இருவருக்கும் சமமான இடம் வழங்கப்பட்டுள்ளது.

படத்தில் மற்ற கதாபாத்திரங்களில் பிரபு, நடன இயக்குநர் கலா, மாறன், கிங்ஸ்லி, முன்னாள் கிரிக்கெட் வீரர் ஸ்ரீசாந்த் ஒரு சில காட்சிகளில் மட்டுமே வந்து போகிறார்கள்.

அநிருத் இசையில் "நான் பிழை..." பாடல் மென்மையாக ரசிக்க வைக்க "டூ டூ டூ" பாடல் ஆட்டம் போட வைக்கிறது. கதிர், விஜய் கார்த்திக் கண்ணன் ஒளிப்பதிவு செய்திருக்கிறார்கள். இரவு நேர சென்னைக் காட்சிகள் புதிதாய் தெரிகிறது.

படத்தில் பிரச்னை, முக்கிய திருப்பம், பரபரப்பு என எதுவுமில்லை. போகிற போக்கில் படம் போய்க் கொண்டே இருக்கிறது. அழுத்தமான காட்சிகளோ ஆச்சரியப்பட வைக்கும் காட்சிகளோ இல்லை. ஒருவரே தங்கள் இருவரையும் காதலிக்கிறார் எனத் தெரிந்தும் நயன்தாரா, சமந்தா ஆகியோருக்கு பெரிய அதிர்ச்சி எதுவுமே வரவில்லை...!



## காயம், புறக்கணிப்பு, ஏமாற்றம்!

# குல்தீப் யாதவ் மீண்டெழுந்தது எப்படி?

குல்தீப் யாதவ் இளம் வீரராக இருந்தாலும் மிகக் குறுகிய கால கட்டத்திலேயே வயதுக்கு மீறிய அனுபவத்தை பெற்றவர் எனக் கூறலாம். முற்றிலுமாக நம்பிக்கையளிக்கப்பட்டு "இனி நீங்கள்தான் எல்லாமே" என குல்தீபை பார்த்துக் கூறிவர்கள் எல்லாருமே அவரை கைவிட்டிருக்கிறார்கள்.

கொல்கத்தா அணியில் பிரதான சுழல் பந்துவீச்சாளராக இருந்தார். 2020 தொடருக்கு முன்பு வரை கொல்கத்தா ஆடும் பெரும்பாலான போட்டிகளில் ஆடி வந்தார். நன்றாக விளையாடவும் செய்தார். 2019 தொடரில் மட்டும் கொஞ்சம் சுமாராக பந்து வீசியிருந்தார். இந்நிலையில்தான் 2020 தொடரில் கொல்கத்தா அணிக்குள் வருண் சக்கரவர்த்தி வருகிறார். மர்ம சுழல்பந்து வீச்சாளர் என்கிற அடையாளத்துடன் அணிக்குள் வந்த ஒன்றிரண்டு போட்டிகளிலேயே மிகச்சிறப்பாக செயல்பட்டு அனைவரின் கவனத்தையும் ஈர்த்துவிடு கிறார். அணியின் முதல் தெரிவாக வருண் மாறினார். குல்தீப் இரண்டாம் பட்சமானார். தொடர்ந்து காத்திருக்க வைக்கப்பட்டார்.

அந்த 2020 தொடரில் வெறும் 4 போட்டிகளில் மட்டுமே ஆடியிருந்தார். அடுத்து 2021 தொடர் தொடங்குகிறது. இந்த தொடரில் நிலைமை இன்னும் மோசமானது. முதல் பாதி ஐ.பி.எல்லில் ஒரு போட்டியில்கூட குல்தீப்பிற்கு விளையாடும் பதினொருவரில் வாய்ப்புக் கிடைக்கவில்லை. இரண்டாம் பாதி தொடங்குவதற்கு முன் காலில் காயம் ஏற்பட்டதால் அந்தத் தொடரிலிருந்தே குல்தீப் ஒதுங்கினார்.

ஒரு பக்கம் ஐ.பி.எல் இப்படி ஏமாற்றம் கொடுக்க, இன்னொரு பக்கம் இந்திய அணியிலும் குல்தீப் யாதவ் சரிவை சந்திக்கத் தொடங்கினார். அத்தனை ஊடகவியலாளர்களும் கூடியிருந்த பத்திரிகையாளர் சந்திப்பில்,



இந்திய அணியின் ஆடும் பதினொருவர் அணியில் ஒரு சுழல் பந்துவீச்சாளருக்கு மட்டும்தான் இடம் உண் டெனில், அந்த ஒரு சுழல் பந்துவீச்சாளர் குல்தீப் யாதவாகத்தான் இருப்பார் என்று பயிற்றுவிப்பாளர் ரவிசாஸ்திரி, அஸ்வின் குறித்து எழுப்பப்பட்ட கேள் விக்கு குல்தீப்பற்றி இப்படிப் பெருமிதம் பொங்கப் பேசியிருப்பார்.

400 விக்கெட்டுக்கு மேல் வீழ்த்தியிருந்த ஒரு மூத்த சுழல்பந்து வீச்சாளருக்கு மேலாக குல்தீப் யாதவ் மதிப்பிடப்பட் டார். ஆனால், அந்த நம்பிக்கைக்கான பலனை குல்தீப் யாதவ் முழுமையாக அனுபவிக்கவே இல்லை. ரவிசாஸ் திரி இப்படி பேசியதற்கு பிறகு விரல் விட்டு எண்ணும் வகையிலான போட்டிகளில் மட்டுமே குல்தீப் ஆடியிருந்தார். அனைத்து வகை போட்டியிலும் அஸ்வின் மீண்டும் வந்தார். வருண் சக்கரவர்த்தி, ராகுல் சஹார், வாஷிங்டன் சுந்தர் போன்றவர்களுக்கு பிரதானமான வாய்ப்புகள் வழங்கப்பட்டன. குல்தீப் யாதவ் ஓரங்கட்டப்பட்டார்.

கடந்த இரண்டு ஆண்டுகளுமே இப்படிப் புறக்கணிப்புகள் நிரம்பிய வேதனைமிக்க நாள்களாகவே குல்தீப்புக்கு இருந்தன. இந்நிலையில்தான் ஐ.பி.எல் பெரும் ஏலத்தில் குல்தீப் யாதவை 2 கோடி கொடுத்து டில்லி கப்பிட்டல்ஸ் வாங்கியது. கொல்கத்தா அணி குல்தீப் யாதவை சரியாக பயன்படுத்திக் கொள்ளவில்லை என நினைக்கிறோம். நாங்கள் அந்தக் குறையை போக்குவோம் என்று டில்லி கப்பிட்டல்ஸ் நிர்வாகம் குல்தீப்பை டெல்லி வாங்கியது. சொன்னதைப் போலவே மிகச்சரியாக குல்தீப்பை பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. அத்தனை போட்டியிலும் நீ ஆடப்போகிறாய் எனும் உறுதியை குல்தீப்புக்கு றிக்கி பொண்டிங் கொடுத்தார். மும்பைக்கு எதிரான முதல் போட்டியிலேயே 4 ஓவர்களை வீசி வெறும் 18 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து ரோஹித் சர்மா, பொலார்ட், அன்மோல் ப்ரீத் என முக்கியமான மூன்று விக்கெட்டுகளை வீழ்த்தியிருந்தார்.

அந்தப் போட்டியிலேயே குல்தீப்புக்குத்தான் ஆட்டநாயகன் விருதும் வழங்கப்பட்டது. அங்கிருந்து டில்லி வென்ற அத்தனை போட்டிகளிலுமே குல்தீப் தான் ஆட்டநாயகன். கொல்கத்தாவுக்கு எதிராக டில்லி இரண்டு போட்டிகளில் ஆடி முடித்திருக்கிறது. இந்த இரண்டு போட்டிகளில் மட்டும் குல்தீப் 8 விக்கெட்களை வீழ்த்தியிருக்கிறார். அணித் தலைவர் ஸ்ரேயாஸ் ஐயரை இரண்டு போட்டியிலுமே முக்கியமான கட்டத்தில் வீழ்த்தி ஆட்டத்தையே மாற்றிக் கொடுத்திருந்தார்.

கொல்கத்தாவுக்கு எதிராகக் கடைசியாக ஆடிய போட்டியில் 3 ஓவர்களை மட்டுமே வீசி 14 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்களை வீழ்த்தியிருப்பார். இன்னும் ஓர் ஓவரை வீசியிருந்தால் இந்தத் தொடரில் மிகச்சிறந்த பெறுதியைப் பெற்ற வீரர் என்ற பெருமை அவருக்குக் கிடைத்திருக்கும்.

### குல்தீப் திடீரென இப்படி விஸ்வரூபம் எடுத்தது எப்படி?

இதற்கான விடையை குல்தீப்பின் இளமைகால பயிற்றுநரே கூறியிருக்கிறார். கடந்த ஐ. பி. எல். தொடரில் ஆட முடியாமல் காயம் காரணமாக குல்தீப் ஒதுங்கிய சமயத்தில் கான்பூருக்கு சென்றிருக்கிறார். அங்கே தன்னுடைய பயிற்றுநரோடு தனது பந்துவீச்சின் பல வீனங்களை கண்டறியும் முயற்சியில் இறங்கியிருக்கிறார். இதில் ஒரு விஷயம் புலப்படுகிறது. குல்தீப் கொஞ்சம் மெதுவாக வீசுவதுதான் பிரச்னை என்பதைக் கண்டடைகின்றனர். வழக்கத்தை விட 5 கி.மீ வேகத்தை கூட்டுவதற்கான பயிற்சியில் குல்தீப் இறங்கினார். இந்த வேக மாற்றம் கைக்குள் சிக்கியவுடன் இதே வேகத்தோடு நீளமாக - சீராக வீசும் வித்தையை பயில்வதில் இறங்கினார்.

இதுபோக இன்னும் சில நுணுக்கமான மாற்றங்களை தனது பந்துவீச்சில் ஏற்படுத்திக் கொண்டார். இந்த மாற்றங்களோடு உள்ளூருக்குள் நடக்கும் போட்டிகளில் ஆடி பழக்கப்பட்டுக் கொண்டார். ஐ. பி. எல். வந்தது. டில்லி குல்தீப்பை சொல்லித் தூக்கியது. மீதி நடந்தவை எல்லாவற்றையும் எல்லோரும் பார்த்து விட்டோம். •

# முன்னிலையில் மன்செஸ்டர் சிற்றி!



எடிஹாட் ஸ்டேடியத்தில் நடந்த மன்செஸ்டர் சிற்றி, ரியல் மட்ரிட் அணிகள் மோதிய சம்பியன்ஸ் லீக் அரையிறுதிப் போட்டியில் மொத்தம் 7 கோல்கள் அடிக்கப்பட்டன. தொடர்ந்து அதிரடியில் ஈடுபட்டுக்கொண்டே இருந்த மன்செஸ்டர் சிற்றி இந்த முதல் பகுதி போட்டியை 4-3 என்று வென்றிருக்கிறது.

அத்லெடிகோ மட்ரிட் அணிக்கெதிரான காலிறுதியின் 2 சுற்றுகளில் சேர்ந்தே மன்செஸ்டர் சிற்றியால் ஒரு கோல்தான் அடிக்க முடிந்திருந்தது. ஆனால், ரியல் மட்ரிட் அணிக்கெதிராக 90 நொடிகளிலேயே முதல் கோலை அடித்தது அந்த அணி. இந்த கோலையும் அத்லெடிகோவுக்கு எதிராகக் கோலடித்த கெவின் டு புருய்னா தான் அடித்தார். வலது விங்கில் இருந்து மாரெஸ் கொடுத்த பந்தை தலையால் இடித்து கோலாக்கினார் டி புருய்னா.

போட்டியின் தொடக்கத்திலேயே கோல் வாங்கிய அதிர்ச்சியில் ரியல் மட்ரிட் வீரர்கள் இருக்க, உடனடியாக இரண்டாவது கோலையும் அடித்து பேரதிர்ச்சி கொடுத்தது மன்செஸ்டர் சிற்றி. 11ஆவது நிமிடத்தில், இடது விங்கிற்கு டி புருய்னா கொடுத்த பந்தை சரியாக டேவிட் அலாபா சரியாக பயன்படுத்தவில்லை. இதைப் பயன் படுத்தி ஆட்டத்தின் இரண்டாவது கோலை அடித்தார் கேப்ரியல் ஜீசுஸ்.

இந்த கோல்களுக்குப் பிறகும் மன்செஸ்டர் சிற்றி தொடர்ந்து அதிரடி காட்டியது. 26ஆவது நிமிடத்தில் அந்த அணிக்கு மூன்றாவது கோலடிக்கும் வாய்ப்பு கிடைத்தது.

மன்செஸ்டர் சிற்றி தொடர்ந்து ஆட்டத்தில் ஆதிக்கம் செலுத்தியிருந்தாலும், 33ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் ஒரு கோல் அடித்தது. இதனால், முதல் பாதியில் 2-1 என்ற முன்னிலை பெற்றது மன்செஸ்டர் சிற்றி.

கடந்த வாரம் நடந்த லா லிகா போட்டியில் காயமடைந்திருந்ததால், அலாபாவால் சிறப்பாக விளையாட முடியவில்லை. மன்செஸ்டர் சிற்றியின் இரண்டாவது கோலுக்கு காரணமாக அமைந்த அவர், தொடர்ந்து இந்தப் போட்டியில் தடுமாறினார். அதனால், இரண்டாவது பாதியில் அவருக்குப் பதில் நாசோ களமிறங்கினார்.

மன்செஸ்டர் அணி மூன்றாவது கோல் அடிக்கப்பட்ட மறுநிமிடமே கோலடித்தது ரியல் மட்ரிட். போட்டியின் 74ஆவது நிமிடத்தில் மன்செஸ்டர் சிற்றி நான்காவது கோலை அடித்தது. இறுதியில், 4-2 என முன்னிலை பெற்றது மன்செஸ்டர் சிற்றி.

மீண்டும் சில நிமிடங்களிலேயே ரியல் மட்ரிட் பதில் கோல் திருப்பியது 80ஆவது நிமிடத்தில். இதன் பிறகு வேறு கோல்கள் விழாததால் போட்டி 4-3 என முடிந்தது. இந்த அரையிறுதியின் இரண்டாவது சுற்று ஆட்டம் எதிர்வரும் 4ஆம் திகதி நடக்கவுள்ளது.

புலம்பெயர் மடல்

# வலிகள் இல்லாத வார்த்தைகளின் சொந்தக்காரன் நிலப்பாவணன் கோமகன்

**என்.கே.துரைசிங்கம்**

புகலிட இலக்கியத்தில் புகழ்பூத்த படைப்பாளிகள், எழுதாளர்கள் காலத்துக்கு காலம் தோன்றி தமிழ் இலக்கிய பயணத்திற்கு வழிகாட்டிகளாக இருந்துள்ளனர்.இந்த பட்டியலில் ஒருவராக பிரான்ஸிலிருந்து வெளியாகும் “நடு” மின்னிதழ் இலக்கிய சஞ்சிகையின் ஆசிரியர் கோமகன் மிளிர்ந்தார். அவரது இலக்கிய பாதை அகலமானது. புகலிடம், தாயகம், இந்தியா என உலகெங்கும் வசிக்கும் படைப்பாளர்கள், ஓவியர்கள், இலக்கியவாதிகள் அனைவருடனும் நெருங்கிய உறவை பேணியவர். சித்திரை 20 (2022) தாயகம் சென்று திரும்பும் வழியில் மாரடைப்பால் அகாலமானார். அவரது பிரிவு பலரை சோக கடலில் மூழ்கச்செய்தது. முகநூல் உட்பட சமூக வலைத்தளங்கள் அவரது மறைவை பேசின. கடந்த 23 (சித்திரை 2022) நடு நிலப்பாவணன் கோமகன் என்னும் தலைப்பில் இணைய வழியில் (மெய்நிகர்) நினைவு ஆற்றுகை நிகழ்த்தப்பட்டது. இந்நிகழ்வில் அவரது நட்பை, இலக்கிய வானில் சிறகடித்து பறந்த நினைவுகளை அனைவரும் பகிர்ந்து கொண்டனர். கண்ணீர் மல்க சோகத்தை,கவலையை, பிரிவுத்துயரை பிழிந்தனர். ஒரு யாதார்த்த மனிதனை இழந்து விட்டோமே என்று சோக கீதம் பாடினர். பகைமையில்லாத முரண்களுடன் வாழ்ந்தவர் அதனால் எல்லோரையும் நேசித்தவர். தன்னை போல பிறரையும் நேசித்தவர். பல உயர் பண்புகளை கொண்டவர். இளைய தலைமுறை எழுத்தாளர் ப.தெய்வீகன் முதல் மூத்த எழுத்தாளர் லெ.முருகபூபதி வரை இலக்கிய படைப்பாளர்களை ஈர்த்த ஒரு மனிதன் கோமகன்.

தெய்வீகன் கங்காரு நாட்டிலிருந்து இந்த நினைவாற்றுகையை நெறிப்படுத்தினார். ஆறு ஆண்டுகள் அவருக்கும் தனக்கும் இடையில் இருந்த நட்பை குரல் கரகரக்க எடுத்தியம்பினார். அவரது எழுத்து, நகைச்சுவை, பண்புகள் என மனம் திறந்து பேசினார்.

பிரபல எழுத்தாளர் கருணாகரன் தனது நினைவு குளத்தில் நீச்சலடிக்கும் கோமகன் நினைவுகளை பகிர்ந்தார்.

## இணைய வெளியில் ஒரு நினைவாற்றுகை!




“மற்றவர்களை மகிழ்வித்தவர். எல்லோருடனும் அன்பை பேணியவர். பலருடைய மனதிலும் ஆளமாக பதிந்தவர். பலரையும் இணைத்து இலக்கியத்தை வளர்த்தவர். இதழாளர், இலக்கிய முயற்சியாளர். வெளிப்படைத்தன்மையை பேணியவர்.” என அவர் வாழ்ந்த காலங்களை பதிவு செய்தார். தாயகம் செல்லும் ஒவ்வொரு வேளையும் கருணாகரனை சந்தித்து விட்டுத்தான் பிரான்ஸ் திரும்புவார். அண்மையிலும் அவரது இல்லத்திற்கு சென்ற கோமகன் வழமையான கலகலப்பை இழந்து காணப்பட்டார். களைப்படைந்திருந்தார். ஒரு சில நாட்களில் அவரை பறிகொடுத்து விட்டோம் என சோக கதையை கருணாகரன் கூறினார்.

கவிஞர் தர்மினி, அவரது அயலாள் பிரான்ஸில் கருத்தரித்த “ஆட்காட்டி” இலக்கிய இதழில் கோமகனோடு சேர்ந்து பணியாற்றியவர்.“எப்பொழுதும் பரபரப்பாக காணப்படுவார். அதிர்ச்சி செய்திகளை கூறுபவர்” என அவரது நினைவு சுமந்த நாட்களை பகிர்ந்தார்.

கோமகனின் தனிக்கதை என அவரது சிறுகதை தொகுதிக்கு பெயரிட்டவர் பிரபல எழுத்தாளர் சோபாசக்தி. அவர் தனக்கும் கோமகனுக்கும் உள்ள நட்பை கூறினார்.

“அரசியல், இலக்கியம் இரண்டு வழிகளில் நாமிருவரும் எதிர்எதிர் துருவம் ஆனாலும் நட்பு தொடர்புகள் தொடர்ந்தன” என்றார்.

தமிழ்கவி, வன்னியில் இருந்து இலக்கியம் படைப்பவர். அவருடன் அக்கை என உறவு கொண்டாடி உயர்வாக நேசிப்பவர் கோமகன். அவரது “நரையன்” என்ற நூலை தனது நடு பதிப்பகத்தின் மூலம் வெளிக் கொணர்ந்தவர். அவர் நா தழு தழுக்க சோக உணர்வுகளை பகிர்ந்தார்.

“இணைய வழியாகத்தான் அறிமுகமானார். ஒரு வேடிக்கையான மனிதர். பழகுவதற்கு இனியவர். அருமையான மனிதர். கோமகன் போய் சேர்ந்திட்டார் என்ற செய்தி கிடைத்தபோது அவர் பிரான்ஸ் போய்விட்டார் என்று தான் உணர்ந் தேன். இவ்வுலகை விட்டு போய்விட் டார் என்பதை நம்ப முடியவில்லை. சுறுகாய் எல்லாவற்றையும் செய்து போட்டு சுறுக்கர் சுறுக்காய் போய் சேர்ந்திட்டார்.” என தனது சோகத்தை பகிர்ந்தார் தமிழ்கவி அக்கா.

சுறுக்கர், ஐம்மிச்சம்பிள்ளை போன்ற அங்கத பெயர்களை கொண்ட அவருக்கு கோமகன் என்பதும் புனை பெயர் தான். அவரது இயற்பெயர் ராஜராஜன் தியாகராசா.அவர் தொடர்பான காணொளி இடைவேளை நேரத்தில் காண்பிக்கப்பட்டது.

கோமகனின் தனிக்கதை நூல் 2014 இல் பாரிஸ் நகரில் அறிமுகம் செய்யப்பட்டபோது பிரித்தானியாவிலிருந்து வந்து விழாவிற்கு தலைமைதாங்கியவர் படைப்பாளி நிவேதா அவர் தனது பிரிவுத்துயரை கண்ணீருடன் பகிர்ந்து கொண்டார்.

“2012 யாழ்.இணையம் மூலம் தொடர்பு வந்தது. உற்சாகப்படுத்துவார். வாரம் இருதடவைகள் தொலைபேசியில் கதைப்பார். அவரது மனைவியும் என்னோடு தொடர்பில் இருப்பார்”என கோமகன் நினைவுகளை அடுக்கிகொண்டே போனார்.

தில்லை என்ற படைப்பாளியின் கவிதாஞ்சாலி நெறியாளர் தெய்வீகன் அவர்களால் வாசிக்கப்பட்டது. மூத்த எழுத்தாளர் லெ.முருகபூபதி அவுஸ்திரேலிய மெல்போர்ன் நகரிலிருந்து பிரிவுத்துயரை வெளிப்படுத்தினார்.

---



# வியுக்தியார் பதில்கள்

**சிவா. கதிர், நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.**

**கேள்வி:**

இன்று தேனீர் கடை ஒன்றில் காலை தேனீர் அருந்த போயிருந்தேன். கடைக்காரரர் பால் வேண்டுமா தேனீர் ( வுநய) வேண்டுமா என்று கேட்டார். நான் பால் என்றால் தனி பசு பாலா என்றுகேட்டேன். அவர் அதற்கு பெரிய விளக்கம் எல்லாம் தந்து தனி பால் தான் என்றார். நான் தனி பாலுக்கு கொஞ்சம் தேயிலை சாயம் விட்டு தாருங்கள் என்றேன். அவர் தேனீர் தான் தந்தார். ஆனால் அது பால்தான் என்று என்னிடம் காசை பிடுங்கி விட்டார். எப்படி எல்லாம் நம்மவர்கள் கொள்ளையடிக்க பழகிவிட்டார்கள் பார்த்தீர்களா?

**வியுக்தியார்:**

அது அவரின் பிழை என்று நீர் எப்படி திடமாகச் சொல்கிறீர். அவர் பாலில் தான் சாயம் கலந்து தந்திருப்பார். பாவம் அவர் வாங்கிய பாலில் தண்ணீர் கலந்துதான் பால்காரர் கொடுத்த விடயம் இவருக்கு எப்படித் தெரிந்திருக்கும். தண்ணிர் கலந்த பாலில் சாயத்தை விட்டால் அது தேனீர் போலத்தானே இருக்கும்?

---

**அ.கமலநாதன்,வெள்ளவத்தை, கொழும்பு**

**கேள்வி:**

நமது நாட்டில் என்ன தான் நடக்கிறது என்று ஒன்றும் புரியவில்லையே. உங்களுக்காவது புரிகின்றதா?

**வியுக்தியார்:**

உங்களைப் போன்ற ஒரு சிலராவது நாட்டைப்பற்றி சிந்திக்கின்றீர்களே என்ற நின்மதிப்பெருமூச்சுத்தான் விட முடிகின்றது. இந்த அரசாங்கம் வீட்டுக்கு அனுப்பப்பட வேண்டியது என்பதில் யாருக்கும் கருத்து வேறு பாடு இருக்கும் என்று நினைக்கவில்லை. ஆனால், அப்படி வீட்டுக்கு போகவேண்டும் என்று சொல்பவர்கள் எல்லோரதும் குறி ஒன்றுதான். அதாவது இந்த அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்பவிட்டு அவர்கள் உட்காந்திருக்கும் கதிரைகளில் தாங்கள் உட்கார வேண்டும் என்பது மட்டும்தான். அவர்கள் (அந்த அரசை வீட்டுக்கு போகச் சொல்கின்றவர்கள்) எவருக்கும் இந்த நாட்டைப்பற்றிய அக்கறை துளிகூட இருப்பதாகத் தெரியவில்லை.

---

**சிறிதரன் நிதர்சன்,கரவெட்டி கிழக்கு, வடமராட்சி**

**கேள்வி:**

சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்க ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்துவிட்டாரே அப்படியெனில் இடைக்கால அரசு அமைவதில் இனி சிக்கல் இருக்காதுதானே?

**வியுக்தியார்:**

அவர் சர்வகட்சி அரசு அமைக்கத் தானே சம்மதம் தெரிவித்திருக்கிறார். சர்வகட்சி என்றால் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளை எல்லாம் அடக்கியதாகவே இருக்கவேண்டும். ஆனால் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி அதில் தாங்கள் சேரமாட்டோம் என்றுவிட்டது. ஜேவிபியும் அதேநிலைதான். தமிழர்கட்சிகளும் நிச்சயம் இடம்பெறாது. அப்படியெனில் சர்வகட்சி இடைக்கால அரசு அமைவதற்கு சந்தர்ப்பமே இல்லை என்பதை தெரிந்து கொண்டுதான் ஜனாதிபதி சொல்லியிருக்கிறார் போல்தான் தெரிகின்றது. எந்த அரசு அமைந்தாலும் அதற்கு பாராளுமன்றில் 113 உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்கவேண்டுமே?

---

**கே. கீர்த்தனன், மீசாலை வடக்கு, மீசாலை.**

**கேள்வி:**

எதிர்க்கட்சிகளின் “சட்டமா அதிபர்“ என்று வர்ணிக்கப்படும் நமது எம்.பி. சுமந்திரன், ஜனாதிபதிக்கு எதிராக பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வந்திருக்கிறாரே. அதனால், ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்ப முடியாது என்றாலும் ஜனாதிபதி மீது பாராளுமன்றமும் நம்பிக்கை இழந்துவிட்டது என்பதை உலகறியச் செய்யலாம் என்பதற்காகவே அதனைக் கொண்டுவருகிறாராம். எங்கள் தலைவரின் “கெத்து“ இப்போதாவது சிங்கள மக்களுக்கு புரிந்திருக்கும்தானே?

**வியுக்தியார்:**

அவரது “கெத்து“ ஏற்கனவே தெரிந்ததுதானே. ஆனால் பாராளுமன்றத்தில் மகிந்தவுக்கு எதிராகவே பலரும் திரண்டிருக்கின்றனர். அரசிலிருந்து வெளியேறி சுயாதீனமாக இயங்கும் 11 கட்சிகளின் 39 உறுப்பினர்களும் பிரதமர் பதவி விலகவேண்டும் என்றுதான் கேட்கின்றனர். அவர்கள் ஜனாதிபதியை வீட்டுக்கு போகச் சொல்லவில்லை. அதாவது அவர்கள் அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிப்பார்கள். ஆனால் சுமந்திரனின் பிரேரணையை ஆதரிக்க மாட்டார்கள். அப்படியெனில் அந்தப் பிரேரணை நிச்சயம் தோல்வியே அடையும். பிரதமருக்கு எதிரான பிரேரணையை வெல்ல வைக்க முடியும். ஆனால் வெல்லக்கூடிய அந்தப் பிரேரணையை ஆதரிக்க மாட்டோம் என்று சொல்கின்ற சுமந்திரன் ஐயா, தோற்கப்போகின்ற பிரேரணையை கொண்டு வருகின்றார் என்றால், அதன் அர்த்தம் என்ன என்பது இன்னுமா உங்களுக்கு புரியவில்லை. ஜனாதிபதி மீது பாராளுமன்றத்திற்கு நம்பிக்கை இருக்கின்றது என்பதை நிரூபிக்கப்போகிறாரோ?

**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈநழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com



# மௌனமே பேசு!

- மாலினி அரவிந்தன் -

யன்னல் காட்சிகள் ரசிப்பதற்கு மிகவும் அழகானவை என்பதை எங்க புதிய வீட்டு யன்னலை முதல் நாள் திறந்து பார்த்த போதுதான் எனக்குத் தெரிந்தது. வீட்டை விட்டு வெளியே செல்லாமல் இயற்கையை தினமும் ரசிக்க வேண்டும் என்றால், யன்னல்கள் காட்சிகள் அற்புதமானவை. வெளி உலகைப் பார்ப்பதற்கு எப்பொழுதும், முக்கியமாக எங்களைப் போன்ற பெண்களுக்கு உதவியாக இந்த யன்னல்கள்தான் இருந்திருக்கின்றன.

பள்ளிப்படிப்பு காரணமாக பள்ளிக்குக் கிட்டவாக புதிதாக ஒரு காணி வாங்கி ஆசையாசையாய் நாங்கள் ஒரு கல்வீடு கட்டிக் குடிபுகுந்தோம். எனது அறை யன்னலுக்குள்ளால் அப்படித்தான் பள்ளிப்பருவத்தில் அதிகாலை நேரத்தில் செவ்வானத்தையும்,

ஒன்றை ஒன்று துரத்திப் பிடித்து ஒன்றாகக் கலக்கும் கருமேகக் கூட்டங்களையும், அணிலாடும் முன்றல்களையும் பார்த்து மகிழ்ந்திருக்கின்றேன்.

அடுத்த வீட்டு மாமரமும் அதில் குலைகுலையாய் காய்த்துத் தொங்கும் மாங்காய்களும், அவற்றை ருசி பார்க்கக் கொப்புகள் தாவும் அணில்களும், குருவிகளும் அவ்வப்போது யன்னலுக்கால் கண்ணில் பட்டுத் தெறிப்பதுண்டு. இந்தக் காட்சியைப் பார்க்கும் போதெல்லாம், ‘மரம் பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி இரந்தழைப்பார் யாவரும் அங்கில்லை’ என்ற ஔவையாரின் பாடல் அடிக்கடி ஞாபகம் வரும். சுதந்திரமாய்க் கீச்சுக்குரலிசைக்கும் பறவைகளின் இருப்பிடமாய் அந்த மாமரம் இருந்தது.

இதைவிட பக்கத்து வீட்டுக் காணியில் மாமரத்திற்குச் சற்றுத் தள்ளி உள்ள குடிசையில் ஒரு குடும்பம் குடியிருப்பதையும் இந்த யன்னலுக்குள்ளால்தான் முதன் முதலில் பார்த்தேன். இயற்கையை ரசித்த எனக்கு அங்கு தினமும் பார்க்கும் காட்சிகள் வித்தியாசமாக இருந்தன. நடுத்தர வயதுடைய கணவன், மனைவி மற்றும் மூன்று பெண் பிள்ளைகள், அவர்களின் உருவத்தை வைத்து வயது எட்டு, பத்து, பன்னிரண்டாய் இருக்கலாம் என்று மனசு கணக்குப் போட்டது.

அவர்கள் அனேகமாக மாமரநிழலில் இருந்துதான் படிப்பார்கள், தங்களுக்குள் கதை சொல்லி விளையாடுவார்கள். பெரியக்கா, சின்னக்கா என்று சின்னப்பெண் இவர்களை அழைப்பதைக் கேட்டிருக்கின்றேன். கணவன் குடிகாரனாக இருக்கலாம், காலையில் எழுந்து கணவனும், மனைவியும் வேலைக்குப் போக, பிள்ளைகள் பள்ளிக்கு நடந்து போவார்கள். மாலை நேரங்களில் அவன் வேலையால் வந்ததும் பெரிதாகச் சத்தம் போடுவதும் பின் அடங்கிப் போவதுமாய் இருக்கும். அந்தச் சத்தம்தான் சில நேரங்களில் என்னை யன்னலுக்கால் எட்டிப் பார்க்க வைப்பதுண்டு.

ஒருநாள் யன்னலுக்கால் நான் அடுத்த வீட்டைப் பார்ப்பதைக் கண்ட அம்மாவிடம் நான் ஏச்சு வாங்க வேண்டி வந்தது.

‘அவன் குடிகாரன், கண்டான் என்றால் கூடாத பாஷையில திட்டுவான். உனக்கென்ன அங்க விடுப்பு பாக்கக்கிடக்கு’ என்று கண்டிப்பாகச் சொன்ன அம்மா யன்னல் திரையை இழுத்து மூடிவிட்டுச் சென்றாள்.

அவர்கள் படித்த பாடசாலையில்தான் நான் உயர் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். சைக்கிள் இருந்ததால் அதில்தான் நான் அருகே இருந்த பாடசாலைக்குச் செல்வேன். பாடசாலையால் திரும்பி வரும்போது சினேகிதிகளுடன் கதைத்துக் கொண்டு வருவதால் நானும் சயிக்கிளைத் தள்ளிக் கொண்டு அவர்களுடன் நடந்து வருவேன்.

சில சமயங்களில் இவர்களும் எங்களுடனேயே நடந்து வருவார்கள். பெரியக்கா முகத்தில் ஒருநாளும் நான் சிரிப்பைக் கண்டதில்லை. சின்னக்கா கலகலப்பாகச் சிரித்துப் பேசுவாள்.

‘நீங்க கேம்ஸ் ஒன்றும் விளையாடுறதில்லையா?’ என்று கேட்டேன்.

‘ஆசைதானக்கா, ஆனால் லேட்டாய் போனால் மாமி ஏசுவா’ என்றாள் சின்னக்கா.

‘மாமியா, யாரைச் சொல்றாய்?’ என்றேன்.

‘எங்க வீட்ல இருக்கிற மாமியைத்தான் சொல்றன்’

‘நீங்க மாமியோடவா இருக்கிறீங்க, அவங்க உங்க அப்பா, அம்மா இல்லையா?’

‘இல்லயே, அவங்க எங்கட மாமா, மாமிதான்.’

‘மாமா என்றால்.. அம்மாவோட தம்பியா?’

‘ஓமக்க, அவர் அம்மாவோட தம்பிதான், எங்களைப் படிப்பிக்கிறன் என்று சொல்லி இங்கை கூட்டிக் கொண்டு வந்து வெச்சிருக்கிறார், ஆனால் எனக்கு இங்கை இருக்கப் பிடிக்கவே இல்லை.’ என்றாள் சின்னக்கா.

‘ஏன்?’ நான் கேட்ட கேள்விக்கு அவள் பதில் சொல்லாமல் சட்டென்று கதையை மாற்றினாள்.

‘உங்களுக்கு மாங்காய் சாப்பிடப் பிடிக்குமாக்கா?’ என்றாள்.

‘சாப்பிடுவேன், அனால் புளிக்குமே’

‘இருங்க நான் கொண்டு வர்றேன், உப்பும் மிளகும் சேர்த்து அரைத்து, தொட்டுச் சாப்பிட்டால் புளிக்காது” என்று சொன்னவள் படலையைத் தள்ளிக் கொண்டு உள்ளே ஓடினாள், அவளைத் தொடர்ந்து சின்னவளும் உள்ளே ஓடினாள். பெரியக்கா மட்டும் என்னோட அவங்க வீட்டு வாசல்ல நின்றாள். நான் சயிக்களைப் பிடித்தபடி நின்றேன். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவளுக்குக் கதை கொடுத்துப் பார்த்தேன்.

‘என்ன சுஜா, பேசாமல் நிக்கிறீங்க?’ என்றேன்.

‘ஒன்றுமில்லை..!’ என்று தலையை மட்டும் ஆட்டினாள்.

‘கதைக்க மாட்டீங்களா?’ என்று கேட்ட என்னை நிமிர்ந்து பார்த்தாள்.

‘எனக்குக் கதைக்க விருப்பமில்லையக்கா’ என்று சலித்துக் கொண்டாள்.

‘என்னோடயா?’ என்றேன்.

‘இல்லையக்கா, யார்கூடவும்’ என்றாள்.

‘அதுதான் ஏன் என்று கேட்கிறேன்?’

‘நான் என்ன சொன்னாலும் யாரும் கேட்கப் போறதில்லை, எங்க அம்மாவே என்னைத் திட்றா, ஏசுறா, மனசில இருக்கிறதை நான் யாரிட்ட போய்ச்சொல்றது..!’ என்றவள் விம்மினாள்.

‘பரவாயில்லை, நான் கேட்கிறேன் சொல்லு’ என்று அவளது கையைப்பற்றி ஆசுவாசப் படுத்தினேன்.

‘சாப்பாட்டுகடை குசினிலைதான் மாமி வேலை செய்யிறா, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மாமி வேலைக்கு போயிடுவா, மாமா மதியம் சாப்பிட வருவார், நான்தான் அவருக்கு சாப்பாடு போட்டுக் கொடுப்பன், ஒரு நாள் குடிச்சிட்டு வந்தார், சாப்பிடேக்கை என்னைய ஒரு மாதிரிப் பார்த்தார், அப்புறம் சாப்பிட்ட கோப்பையை நான் எடுக்கப்போக என்னை இழுத்துக் கட்டிப்புடிச்சு.. கொஞ்சப் பார்த்தார்’ அவள் மேலே சொல்ல முடியாமல் விம்மினாள்.

அவள் சொன்னதைக் கேட்டதும் எனக்கு அதிர்ச்சியாகவும், நம்பமுடியாமலும் இருந்தது. ஆனாலும் மனசில இருக்கிறதைக் கொட்டட்டும் என்று நான் பேசாமல் இருந்தேன்.

‘நான் அவரைப் பிடிச்சுத் தள்ளீட்டு வெளியே ஓடி வந்திட்டன். அதுக்கு அப்புறம் அவர் தனிய இருந்தால் குடிசைக்க போகவே பயமாயிருக்கக்கா’

‘இதைப்பற்றி நீ மாமீட்ட சொன்னியா?’

“மாமீட்டயா..? எப்படியக்கா சொல்றது, மாமா சரியில்லை என்று சொன்னா நம்புவாங்களா? என்னைக் கட்டிவெச்சு அடிக்கமாட்டாங்க..?”

அவள் சொல்வதும் சரிதான், எப்படியும் ஒருவரும் நம்பமாட்டார்கள். அவளைத்தான் ஏசுவார்கள்.

“போனகிழமை நான் படிக்கணும் என்று சொல்லிச் சுஜியைத்தான் சாப்பாடு போட்டுக் குடுக்கச் சொன்னேன். அவள்தான் சாப்பாடு போட்டுக் கொடுத்தாள்.’

இந்த நேரம் பார்த்து சுஜி மாங்காயும், உப்புத் தூளும் கொண்டு அங்கே வந்தாள். பெரியக்கா சொன்னது அவளுக்கும் கேட்டிருக்க வேண்டும்.

‘நான் இனிமேல் சாப்பாடு போடப் போகமாட்டன், மாமா குடிச்சிட்டு வந்திருக்கிறார் போல, வெறியில என்னைப் பிடிச்சிழுத்து ‘என்ர மருமகளே’ எண்டு சொல்லிக் கொஞ்சினாரக்கா, அம்மாடி வாய் நாத்தம் தாங்கமுடியலை, எனக்கு வாந்தி வர்றமாதிரி இருந்திச்சு.’ என்றாள்.

சுஜி சொன்னதைக் கேட்டதும் ஒரு கணம் ஆடிப் போனேன். வேலியே பயிரை மேயுமா? இப்பதான் பெரியக்கா முறையிட்டாள், அதற்குள் சின்னக்காவுமா? சுஜி அந்த விடயத்தைப் பெரிதாக எடுத்ததாகத் தெரியவில்லை.

அவருடைய தப்பான தொடுகையை அவளால் புரிந்து கொள்ள முடியாத வயதாயிருக்கலாம், மாமன் பாசத்தோடு அணைப்பதாக நினைத்திருக்கலாம், இத்தனைக்கும் மாமனுடைய வாய் நாற்றத்தைத்தான் அவள் கவனித்திருக்கிறாள்.

பெரியக்காவின் மௌனத்தின் காரணம் என்னவென்று எனக்குச் சட்டென்று புரிஞ்சு போச்சு. எல்லாமே எல்லை மீறிப் போவதைப் பெரியக்கா உணர்ந்திருக்க வேண்டும். அவள் கேட்டது போல, இதை யாரிட்ட போய்ச்சொல்ல?

‘சுஜா, உங்க ஊருக்குப் போகேக்க பயப்படாமல் அம்மாட்டை இதைச் சொல்லு’ என்றேன்.

‘மாமாவை குறை சொன்னால் அம்மா தோலை உரிச்சுப் போடுவா’ என்றாள்.

‘உண்மைதான் யாருமே நம்ப மாட்டார்கள். அந்தத் துணிவுதான் இப்படியானவர்களைத் தொடர்ந்தும் தப்புச் செய்ய வைக்கின்றது. நான்கூட முதல்ல நம்பலை, சுஜியும் சொன்னதற்கு அப்புறம்தான் நம்பினேன்.’

நான் அவளுக்கு ஏதாவது வழி சொல்வேன் என்று சுஜா எதிர்பார்த்து நிற்பது புரிந்தது.

‘சுஜா, உனக்கு இதெல்லாம் புரியக்கூடிய வயசு, ஆனால் சுஜியைப்பற்றி யோசித்துப் பார்த்தியா, ஏதாவது தப்பாய் நடந்தால் உன்னோட தங்கச்சியின்ர வாழ்க்கையே போச்சு, புரியுதா?’

சுஜா யோசித்தபடியே நின்று என்னைப் பார்த்தாள்.

‘என்னை என்ன செய்யச் சொல்றீங்கக்கா?’

‘பயப்படாமல் அம்மாகிட்ட சொல்லு, முதல்ல கத்திச் சத்தம் போட்டாலும் அம்மா புரிசுஞ்சுக்குவா, வேறவழியில்லை’ என்றேன்.

‘பயமாயிருக்கக்கா, இப்படி எல்லாம் நடந்தது என்று சொன்னா அம்மா நம்புவாவா?’

‘ஊருக்குப் போகும்வரையும் சமாளித்துக் கொள், எதையுமே காட்டிக் கொள்ளாதை. பயப்படாமல் அம்மாட்ட சொல்லு, நீங்க இரண்டு பேரும் சொன்னா அவா நம்புவா’ என்று சொல்லிவிட்டு நான் புறப்பட்டேன்.

அவர்கள் சொன்னதெல்லாம மனசை அரித்துக் கொண்டே இருந்தது. விடுமுறை முடிந்து பாடசாலை ஆரம்பமாகி இருந்தது. அந்த விடுமுறைக்குத் தாயிடம் சென்றவர்கள் ஏனோ திரும்பி வரவில்லை. என்ன காரணம் என்று எனக்குத் தெரியவில்லை.

ஒருவேளை அவர்களுடைய படிப்பை நான் குழப்பிவிட்டேனோ என்று மனச்சாட்சி எனக்குள் உறுத்திக் கொண்டே இருந்தது. ஆனாலும் எல்லாம் நன்மைக்கே என்று என்னை நானே சமாதானப்படுத்திக் கொண்டேன்.

# எரிபொருள் இன்றி தடுமாறும் யாழ்ப்பாணத்தின் மீன்பிடி துறை!

**என். குகராஜ்**

மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்ட யாழ்ப்பாணக் குடாநாட்டின் மிகமுக்கியமான தொழில்துறைகளில் ஒன்று மீன்பிடி. 24ஆயிரத்து 200 குடும்பங்களை (2019 புள்ளிவிவரத்தின்படி )சேர்ந்த ஒரு இலட்சத்து 4 ஆயிரத்து 500 பேர் மீன்பிடியையே சீவனோபாயத்துக்காக நம்பியுள்ளனர்.

போர் காலத்தில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மட்டுமின்றி வடக்கு - கிழக்கு மாகாணம் முழுவதும் மீன்பிடித் தொழில் பாதிக்கப்பட்டது. போரில் சிக்கி மீனவர்களும் உயிரிழந்தனர். 2002 சமாதான காலத்தில் வடக்கு, கிழக்கின் மீன்பிடித்துறை அபார வளர்ச்சி கண்டது. நவீன தொழில்நுட்பத்துடன் யாழ்ப்பாணத்தின் மீன்பிடியும் புதிய எழுச்சியடைந்தது. ஆனாலும், மீண்டும் தொடங்கிய போர் மீன்பிடித்துறையின் வளர்ச்சியைப் பாதித்திருந்தது.

எனினும், போர்க்காலம் முடிவுக்கு வந்த பின்னர் யாழ்ப்பாணத்தின் மீன்பிடி எழுச்சியடைய ஆரம்பித்தாலும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் அதிகரித்தன. இதனால், யாழ்ப்பாண - வடக்கு மீனவர்கள் தங்களின் பெறுமதியான உபகரணங்களை மட்டுமின்றி உயிர்களையும்கூட இழக்க ஆரம்பித்தார்கள். இது ஒருபுறமிருக்க தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறல்களும் உச்சம்பெற்றது. இந்த நடவடிக்கைகளால் போரால் நலிந்த மீனவ சமுதாயம் மேலும் பாதிப்புக்களை சுமந்தது - சுமந்துகொண்டிருக்கிறது.

இந்நிலையில், தற்போது நாட்டில் எழுந்துள்ள பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து எரிபொருள் தட்டுப்பாடு - விலையுயர்வு என்பவற்றால் ஒட்டுமொத்த மீனவர்களும் பாதிப்புக்களை சந்தித்தாலும் போர் - இந்திய, தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறல்கள் என்பவற்றால் பாதிக்கப்பட்ட வடக்கு - யாழ்ப்பாண மீனவர்கள் அதிகளவான பாதிப்புக்களை சுமந்து நிற்கின்றனர். குருநகரில் சுமார் 400 படகுகள் தொழிலுக்கு சென்ற நிலையில் தற்போது 100 படகுகளே தொழிலுக்காகக் கடலுக்குள் இறங்குகின்றன என்கிறார் அந்தப் பகுதியின் கடற்றொழில் அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் எஸ். சகாஜராஜா.

அதிகரித்துள்ள எரிபொருள்களின் விலையால் தொழிலையே கைவிடும் நிலையில் மீனவர்கள் உள்ளனர். தாங்கள் மீன்பிடி தொழிலை தொடர்வதற்கு எரிபொருள்கள் குறைக்கப்பட வேண்டும் என்பது அவர்களின் முக்கிய கோரிக்கையாக உள்ளது. அவ்வாறு குறைக்கப்படாத சந்தர்ப்பத்தில் மீனவர்களுக்கு மானியம் வழங்கப்பட வேண்டும் என்பது அவரின் பிரதான கோரிக்கையாக உள்ளது.

இது ஒருபுறமிருக்க, அண்மையில் நீள் வரிசையில் நின்று எரிபொருளைப் பெற்றதுடன் - எரிபொருளின் விலை அதிகரித்தபோதும் தமக்கான வருமானம் அதிகரிக்கவில்லை என்பது கடற்றொழிலாளர்கள் பிரதான குற்றச்சாட்டாக உள்ளது. 112 ரூபாய்க்கு விற்கப்பட்ட டீசல், தற்போது 289 ரூபாயாக உள்ளது. இதனால், நாளாந்த எரிபொருள் செலவினம் மட்டுமே 20 ஆயிரம் ரூபாயை கடந்து விடுகிறது என்கிறார்கள். அப்படியே தொழிலுக்கு சென்று திரும்பினாலும் தமக்கு அதற்கேற்ப வருமானம் கிட்டவில்லை என்கிறார்கள்.

பிடிக்கப்படும் மீன்களை உள்ளூர் சந்தைகள், வெளி நாட்டு ஏற்றுமதி மூலமாக கடற்றொழிலாளர்கள் இலாபமீட்டுகின்றனர். ஆனால், அண்மை நாட்களில் மீன்பிடிக்கான செலவு அதிகரித்தமைக்கு ஏற்ப உள்ளூர் சந்தைகளில் விலை அதிகரிப்பு ஏற்படவில்லை. வெளிநாடுகளுக்கான ஏற்றுமதி மூலமாகக் கிடைக்கும் இலாபம் உயர்ந்தபோதிலும், ஏற்றுமதியாகும் கடல் உணவு வகைகளுக்கான விலைகளை நிர்ணயிப்பதில் இழுத் தடிப்பு செய்கிறார்கள் முகவர்கள். இதனால், தமக்கு பாதிப்பு ஏற்படுகிறது என்கிறார் குருநகர் கடற்றொழில் அபிவிருத்தி சங்கத்தின் ஆலோசகர் மரிய நாயகம்.

தற்போதுள்ள எரிபொருள் பிரச்னைக்கு தீர்வாக பங்கீட்டு அட்டைக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படுகின்றது. இதன் மூலம் ஓரளவுக்கு அனைத்து மீனவர்களுக்கும் எரிபொருள் கிடைப்பனவு உறுதி செய்யப்பட்டபோதிலும் வழங்கப்படும் மண்ணெண்ணெய் போதாது என்பது மீனவர்களின் நிலைப்பாடாக இருக்கிறது. அத்துடன், இந்த எரிபொருள் வழங்கலில்கூட முறைகேடுகளும் - ஊழலும் - சார்பு நிலைகளும் காணப்படுகின்றன என்பது மீனவர்களின் பிரதான குற்றச்சாட்டுக்களாக உள்ளன. இவற்றுக்கு தீர்வு காண சம்பந்தப்பட்ட அதிகாரிகள்கூட தயாரில்லை என்றும் மீனவர்கள் கூறுகின்றனர்.

10 நாட்களுக்கு 30 - 40 லீற்றர் மண்ணெண்ணெய் ஒரு மீனவருக்கு வழங்கப்படுவதாகவும் இதுவே, சில பிரதேசங்களில் 15 நாட்களுக்கு ஒரு முறையும் வழங்கப்படுகின்றது என்கிறார் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அ. அன்னராசா. அத்துடன், எழுவைதீவில் 180 தொழிலாளர்களுக்கு 1,500 லீற்றர் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டாலும் அது அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்று சாடுகிறார் அவர். இதற்கு இணைந்து செயல்படும் முறைமை ஒன்று அவசியம் தேவை என்பது அவரின் கோரிக்கை.

இது ஒருபுறமிருக்க இந்தியாவில் தற்போது மீன்பிடி தடைக்காலம் நடைமுறையில் இருப்பதால் அவர்களின் அத்துமீறல்கள் தற்போது இல்லை. விரைவில், இந்தத் தடைக்காலம் நீங்கவுள்ளது. ஏற்கனவே எரிபொருள் விலையுயர்வு - எரிபொருள் தட்டுப்பாடு என்பவற்றாலும் பிடிக்கப்படும் மீன்களுக்கு உரிய விலை கிடைக்காமல் தள்ளாடும் யாழ்ப்பாணத்தின் மீன்பிடித் துறையை வளர்ப்பதற்கு அதிகாரிகள் - அரசியல்வாதிகள் - கடற்றொழில் அமைச்சர் - அரசாங்கம் என்ன செய்யப் போகின்றனர் என்பதே இப்போது மீனவர்களின் எதிர்பார்ப்பு...!

## ஏற்றுமதிக்கான விலையை அரசு நிர்ணயிக்கவேண்டும்!



**மரியநாயகம் இமானுவல்,**
*குருநகர் கடற்றொழில் அபிவிருத்தி சங்க ஆலோசகர்*

இரு வருடங்களுக்கு முன்னர் டீசலின் விலை 107 ரூபாய், பின்னர் 112 ரூபாய். இப்போது 289 ரூபாய். இதனை ஒப்பிடும் போது இரண்டு வருடங்களுக்கு முதல் இருந்த விலைக்கும் தற்போது இருக்கின்ற வெளியேற்றத்திற்கு 3வீத விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

தொழில் முயற்சிக்கு எரிபொருள் இல்லையென்று இருந்தாலோ அல்லது அதனுடைய விலையேற்றம் கட்டுப்படுத்த முடியாத நிலையில் காணப்படுமாக இருந்தால் தொழில் முயற்சி முழுமையாக முடங்கிப் போகும். இன்றைக்கு உள்ளூர் சந்தையில் விற்கக்கூடிய மீன் வகைகளையும் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய கடலுணவு வகைகளையும் எமது தொழில் மூலம் அறுவடை செய்து கொண்டுள்ளோம். உள்ளூர் சந்தையின் விலை ஏற்றம் இந்த காலத்தில் எதிர்பார்த்தளவுக்கு அதிகரிக்கவில்லை

ஆனால், ஏற்றுமதி பொருட்களை கொள்வனவு செய்யும் முகவர்கள் எங்களுடைய ஏற்றுமதியை விலை ஏற்றத்துக்கு ஏற்ப நிர்ணயிக்க இழுத்தடிப்பு செய்கின்றனர். கடற்றொழிலை தொடர்ச்சியாக மேற்கொள்வதற்கு இந்த அரசாங்கம் இரண்டு விடயங்களை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். ஒன்று கடல் உணவு வகை வெளிநாட்டு ஏற்றுமதி செய்யப்படும் கடலணவுகளுக்கு அல்லது உள்நாட்டில் விற்பனை செய்யப்படு கின்ற கடலுணவு பொருட்களுக்கு நியாயமான விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

இரண்டாவது தற்போது அதிகரிக்கப்பட்டுள்ள எரிபொருள் வெளியேற்றத்தை கொண்டு கடற்றொழிலை எக்காரணம் கொண்டும் தொடர்ந்து செய்ய முடியாது அரசாங்கம் மானிய அடிப்படையிலாவது எரிபொருளை வழங்க வேண்டும்.

## எரிபொருள் மானியம் வேண்டும்



**எஸ் சகாஜராஜா**
*குருநகர், கடற்றொழில் அபிவிருத்தி சங்கம்.*

கடந்த காலங்களில் எரிபொருள் விலை யுடன் தொழில் செலவை பார்த்தால் 10 ஆயிரம் ரூபாய் தொடங்கி 14 ஆயிரம் வரையே ஏற்பட்டது. இன்றைய நிலையில், 289 ரூபாய்க்கு டீசல் விலை அதிகரித்துள்ளது. இதனால், எங்களின் ஒரு நாள் எரிபொருள் செலவு 20 ஆயிரத்து 235 ரூபாய். இதைவிட 25ஆயிரம் ரூபாய் தொழிலுக்கு செலவு செய்கிறோம். இன்றைய நிலையில், 30 ஆயிரத்தில் இருந்து 40ஆயிரம் வரையே வருமானம் கிடைக்கிறது. 400 படகுகள் தொழில் செய்த இடத்தில் 100 படகுகளே இன்று தொழில் செய்கின்றன.

பெருமளவு மீனவர்கள் தொழில் செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். கடந்த ஒருவாரமாக தொழிலுக்கு நாங்கள் செல்லவில்லை. எரிபொருள் விலையேற்றம் மட்டுமல்ல மீன்பிடியில் கிடைக்கும் அறுவடையும் குறைவடைந்ததே இதற்குக் காரணம். இப்போது, பிடிக்கப்படும் இறாலின் வீதம் நாளாந்தம் 15 கிலோவால் குறைவடைந்துள்ளது. எனவே, அரசாங்கம் மானிய அடிப்படையில் எரிபொருளை எங்களுக்கு வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கினால் மட்டுமே மீனவர்களான நாம் தொழிலை முன்னெடுக்க முடியும்.

## இந்தியாவிடம் எரிபொருள் கோரிக்கை விடுத்துள்ளோம்



**அ. அன்னராசா**
*யாழ். மாவட்ட கடற்றொழில் சமாசங்களின் சம்மேளன தலைவர்*

யாழ்ப்பாணத்தில் தற்போது மண்ணெண்ணெய் பாரதூரமான பிரச்னையாக மீனவர் சமூகத்துக்கு மாறியுள்ளது. 10 நாட்களுக்கு ஒருமுறை 30 –40 லீற்றர் வரை மண்ணெண்ணெய் ஒரு மீனவருக்கு பங்கீட்டு அட்டைக்கு வழங்கப்படுகிறது. இது சில பிரதேசங்களில் 15 நாட்களுக்கு ஒருமுறை கூட வழங்கப்படவில்லை. குறிப்பாக, எழுவைதீவு, அனலைதீவு போன்ற பகுதிகளில் கடந்த மாதம் 13 ம் திகதி ஒரு மீனவனுக்கு 20 லீற்றர் எரிபொருள் வழங்கப்பட்டபோதும் இன்றுவரை எந்தவிதமான எரிபொருளும் வழங்கப்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் 6,250 ண்ணாடி இழைநார் படகுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த படகுகளுக்கு மாத்திரம் ஒரு நாளைக்கு அண்ணளவாக கடந்த நாடு சீரான நிலையில் காணப்பட்டபோது ஒரு லட்சத்து 87 ஆயிரத்து 500 லீற்றர் மண்ணெண்ணெய் தேவைப்பட்டது.

இதேபோல, டீசலில் பயன்படுத்தப்படுகின்ற ஒருநாள் படகுகள் 600 காணப்படுகிறன. அவற்றுக்கு 30 ஆயிரம் லீற்றர் டீசல் தேவைப்படுகிறது. பலநாள் கலங்களுக்கு ஒருநாளைக்கு சர்வசாதாரணமாக 2500 லீற்றர் எரிபொருள் தேவைப்படுகிறது. எரிபொருள் நெருக்கடியால் 50வீதமான படகுகள் தொழிலுக்கு செல்வதில்லை.

எமது மீனவர்களுக்கு ஒரு வாரத்துக்கு 30 லீற்றர் எரிபொருளை அரசாங்கம் வழங்கினால் அது பெரிய வரப்பிரசாதமாக அமையும்.

இது ஒருபுறமிருக்க, இந்திய மீனவர்களின் பிரச்னைகளையும் எமது சமூகம் எதிர்கொண்டு வருகின்றது. அங்கு இப்போது தடைக்காலம் இருப்பதால், தற்போது அவர்களின் பிரச்னை இல்லை. தடைக் காலம் முடிந்த பிறகு அவர்களின் எல்லை தாண்டிய வருகையாலும் எமது வாழ்வாதாரம் மிகவும் பாதிக்கப்படும்.

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள எங்கள் மீனவர்களை காக்க, இந்திய மீனவர்களின் அத்துமீறலை எவ்வாறு கையாளப் போகிறார்கள். என்பது தொடர்பில் நாம் கவனம் செலுத்துகிறோம். இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு அரசஅதிகாரிகள் யாழ். மற்றும் கொழும்பு இந்திய தூதரகங்களிடம் கோரிக்கை விடுக்கிறோம். இந்த விடயத்தில் தமிழ்நாட்டு முதலமைச்சர் மற்றும் இராமேஸ்வரம் மீனவர் சமூகத்தினரும் மனச்சாட்சியுடன் செயல்பட வேண்டும்.

மண்ணெண்ணெய்க்காக நாம் யாழ்ப்பாணம் இந்திய துணைத் தூதரகத்திடமும் கோரிக்கை வைத்துள்ளோம். வாரத்துக்கு 20ஆயிரம் லீற்றர் எரிபொருள் வழங்குமாறு. ஆனால், இது இன்றுவரை கைகூடவில்லை – எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. வடக்கு – யாழ்ப்பாண மீனவர்களுக்கு வாரத்தில் இரண்டு முறையாவது எரிபொருளை பெற்றுக்கொடுப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# புலமைச் சிகரம் | தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி


மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

1) C 2) E 3) F


24. மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி நாற்காலிகள் மூன்று உள்ளன. அங்கு காணப்படும் கால்களின் எண்ணிக்கை யாது?
1) 16 2) 15 3) 13

25. சத்தி, நிஷான், விஜய், அருண் ஆகிய நால்வரில் விஜயிலும் உயரம் குறைந்தோர் இருவர் மட்டுமே உள்ளனர். நிஷானிலும் உயரம் குறைந்தோர் ஒருவர் மட்டும் உள்ளார். சத்தி மாத்திரம் நிஷானிலும் உயரம் குறைந்தவர் ஆவார். நால்வரில் உயரம் கூடியவர் யார்?
1) விஜய் 2) நிஷான் 3) அருண்


26. ஒரு வரிசையில் கமலா முன்னாலிருந்து 7 ஆவதாகவும் விமலா பின்னாலிருந்து 4 ஆவதாகவும் உள்ளனர். அவர்கள் இருவருக்குமிடையில் இரண்டு பேர் உள்ளனர். அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?
1) 13 2) 14 3) 15

27. 
உருவில் உள்ள வடிவத்தைப் புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்
1) சதுரம் 2) செவ்வகம் 3) அரியம்

28. மகனை விட அப்பா உயரம் கூடியவர் என்பது
1) எப்பொழுதும் உண்மையானது
2) சில சமயம் உண்மையானது
3) எப்பொழுதும் பொய்யானது

29. 
இச் சிறிய முக்கோணத்தின் சுற்றளவு 9cm எனின்  இம்முக்கோணியின் சுற்றளவு யாது?
1) 12cm 2) 18cm 3) 36cm

30. படகு ஒன்றில் 30 பேர் பயணிக்கலாம் எனின் 100 பேர் பயணிப்பதற்கு எத்தனை படகுகள் தேவை?
1) 3 2) 2 3) 4


31. 


வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் யாது?
1) 14 2) 10 3) 12

32. அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.


| பூக்கள் | பழங்கள் | D |
|---|---|---|
| A | மாம்பழம் | கத்தரி |
| மல்லிகை | அன்னாசி | வெண்டி |
| செவ்வந்தி | C | தக்காளி |

அட்டவணையில் ACD ஆகியவற்றுக்குப் பொருத்தமான விடைகள் முறையே
1) நித்திய கல்யாணி, பலாப்பழம், காய்கறிகள்
2) முருங்கை, காய்கறிகள், வெண்டி
3) கீரை, பருப்பு, சோயா

33. 



நித்திய கல்யாணிப் பூவைக் குறிக்கும் எழுத்து
1) அ 2) ஆ 3) இ

❖ 34, 35 ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவைக் கொண்டு விடையளிக்குக.

34. 


பிள்ளை காலையில் தான் நிற்கும் இடத்திலிருந்து பாடசாலை நோக்கிச் செல்லும்போது எத்தனை தடவை தெற்கு பக்கமாகச் செல்ல வேண்டும்?
1) 2 தடவைகள் 2) 3 தடவைகள் 3) 4 தடவைகள்

35. இப் பிள்ளை காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது இவரது நிழல் எத்தனை தடவை முன்னால் விழுந்தது?
1) [illegible] தடவைகள் 2) 5 தடவைகள் 3) 4 தடவைகள்

36. 
இவ்வுருவில் $\frac{3}{8}$ நிறம் தீட்ட வேண்டும் எனின் மேலும் எத்தனை துண்டங்களுக்கு நிறம் தீட்ட வேண்டும்?
1) 2 2) 3 3) 4

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 24. 2 | 28. 2 | 32. 1 | 36. 1 |
| 25. 3 | 29. 2 | 33. 1 | |
| 26. 1 | 30. 3 | 34. 2 | |
| 27. 2 | 31. 1 | 35. 1 | |

---

கல்வி tv CHANNEL-1

**01.05.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

கல்வி tv CHANNEL - 2

**01.05.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# பங்கீட்டு அட்டை முறையில் மீனவர்கள் எரிபொருளை பெறுவதில் இடர் நிலை!

## யாழ்மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் தலைவர் அன்னராசா தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மே. 01

"யாழ். மாவட்டத்தில் எரிபொருள் பிரச்னை மீனவர் சமூகத்துக்கு பாரதூரமான பிரச்னையாக மாறியிருக்கின்றது. அண்ணளவாக மண்ணெண்ணெய் பத்து நாட்களுக்கு ஒரு தடவை ஒரு மீனவ ருக்கு 30 லீற்றர் தொடக்கம் 40 லீற்றர் வரை வழங் கப்படுகின்றது. சில பிரதேசங்களில் 15 நாட்க ளுக்கு ஒரு முறைகூட எரிபொருள் வழங்கப்படுவதில்லை."

- இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அன்னராசா.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடல் கடந்த தீவுகளான எழுவைதீவு, அனலை தீவு போன்ற பகுதிகளில் ஒரு கிழமைக்குகூட மீனவர்களுக்கு எரிபொருள் வழங்கப்படவில்லை. கடந்த மாதம் 13 ஆம் திகதி ஒரு மீனவருக்கு 20 லீற்றர் எரிபொருள் வழங்கப்பட்ட போதும் இன்றுவரை எந்தவிதமான எரிபொருளும் வழங்கப்படவில்லை.

யாழ்.மாவட்டத்தை பொறுத்தவரை 6250 கண்ணாடி இழைநார் படகுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அந்த படகுகளுக்கு ஒரு நாளைக்கு அண்ணளவாக நாடு சீரான நிலையில் காணப் பட்டபோது ஒரு லட்சத்து 87 ஆயிரத்து 500 லீற்றர் மண்ணெண்ணெய் தேவைப்பட்டது.

அதேபோல யாழ்.மாவட்டத்தைப் பொறுத்த வரை டீசலில் பயன்படுத்தப்படும் 600 ஒரு நாள் படகுகள் காணப்படுகின்றன. அவர்களுக்கு 30 ஆயிரம் லீற்றர் டீசல் தேவைப்படுகிறது.

அதேபோல 30 இற்கு உட்பட்ட பல நாள் கல படகுகள் காணப்படுகின்றன.அவையும் டீசல் எரிபொருளில் இயங்கும். அதேபோல குடாக்கடல் நீரேரியில் எம்.ரி.ஆர்.வி. என்ற படகு பயன்படுத்தப்படுகின்றது. அந்த மீனவர்க ளுக்கு ஒரு நாளைக்கு சர்வசாதாரணமாக 2500 லீற்றர் எரிபொருள் தேவைப்படுகிறது.

தற்போது உள்ள எரிபொருள் தட்டுப்பாட்டு நிலையின்படி ஒரு கிழமைக்கு 20-30 லீற்றர் எரி பொருள் வழங்கப்படுகிறது. இதன் காரணமாக 50 வீதமான தொழிலாளர்கள் கடற் தொழிலுக்கு செல்வதில்லை.

அத்தோடு தற்போது காற்று மற்றும் கடல் குழப்பம், எரிபொருள் பெறுவதில் உள்ள இடர் நிலை காரணமாக யாழ்ப்பாண மீனவர்கள் கடலுக்குச் செல்வதை தவிர்த்து வருகிறார்கள்.

அத்தோடு தற்போதைய நிலை எமது வாழ்வாதாரத்தை மிகவும் பாதிக்கிறது. யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்ணளவாக 23 ஆயிரம் குடும்பங்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றன.

ஆனால் சாதாரணமாக நாளொன்றுக்கு 10 ஆயிரம் மீனவர்கள் மாத்திரம் கடலுக்குச் தொழில் சென்று கடல் தொழிலில் ஈடுபடுகின் றார்கள். இதன் காரணமாக மீன் விலையும் அதிகரித்துள்ளது. தற்போது மீன் மீன்பிடி எண்ணிக்கையும் குறைந்துள்ளது

பாணின் விலை மற்றும் ஏனைய அத்தியாவ சியப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ள தன் காரணமாக பின்தங்கிய நிலையில் உள்ள சமூகங்கள் ஒரு நேர உணவைக்கூட தவிர்த்துள்ள நிலை காணப்படுகின்றது.

இதே நிலை மேலும் தொடருமாக இருந்தால் எமது வாழ்வாதாரம் தொடர்ச்சியாக அழிக்கப் பட்டு பட்டினியால் சாகக் கூடிய நிலை காணப்படுகின்றது. இந்த எரிபொருள் பிரச்னைக்கு இனியாவது அதிகாரிகள் தீர்வு பெற்றுக் கொடுக்க முன்வருவார்கள் ஆக இருந்தால் எமது நிலையை சற்று மாற்றி அமைக்க முடியும்- என்றார். (அ-03)



# ரயர் விற்பனை நிலையத்தில் தீ விபத்து!

கொழும்புஇ மே. 01

பிலியந்தலை பிரதேசத்தில் உள்ள ரயர் விற்பனை நிலையம் ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் பிலியந்தலை - போகுந்தர பகுதியில் உள்ள ரயர் விற்பனை நிலையமொன்றிலேயே இவ்வாறு தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதையடுத்து தீயை அணைக்க சம்பவ இடத்துக்கு 2 தீயணைப்பு வாகனங்கள் விரைந்தன.

தீ விபத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படாத நிலையில்இ தீயினால் பொருட் சேதம் ஏற்பட்டுள்ளபோதிலும் உயிர் சேதம் எதுவும் ஏற்படவில்லை என பிலியந்தலை பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மரண அறிவித்தல்



## சுப்பிரமணியம் சிவஞானம்

பிறப்பு 12 - 04 - 1945 | இறப்பு 27 - 04 - 2022

யாழ். தாவடி வடக்கு கொக்குவிலைப் பிறப்பிடமாகவும், இணுவில், கொழும்பு கந்தானை, சிங்கப்பூர், பிரான்ஸ் Comb-la-vile ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிவஞானம் கடந்த 27-04-2022 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சுப்பிரமணியம் – செல்லம்மா தம்பதி களின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி – யோகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், கோண்டாவிலைச் சேர்ந்த மகேஸ்வரி (ராஜலக்ஸ்மி) அவர்களின் அன்புக் கணவரும், தம்பிஜயா(செல்வம்), நவரட்ணராஜா(குஞ்சுமணி), காலஞ்சென்ற இராசலிங்கம்(ராசா), சந்திரகாந்தன்(சந்திரா), குகனேந்திரன்(சிவம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஞானமகேஸ்வரன்(வரன்), ஞானமகாலக்ஷ்மி(வாணி), ஞானமகேந்திரன்(கோபி), ஞான மனோகரன் (பேபி), ஞானமலர்(ராணி), ஞானறூபி(றூபி) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,காலஞ்சென்ற சிவநாதன்(சிவம்), பிரேமலதா, மெலின்தா, சிவஹரன் ஆகியோரின் அன்பு மாமனாரும்,காலஞ்சென்ற கைலேஸ் வரி, இந்திராணி, சசிகலா, காலஞ்சென்ற பத்மாவதி, அம்பிகாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும்,சுஜன், சுகின், றிசாந், அஜந், டிலன், ஜோஜியா ஆகியோரின் அன்பு அம்மப்பாவும்,திவினா, தவுட்சன், தெனித்தா, ஜெயா, தமியா, ஷரோன், நிலா, சஜி ஆகியோரின் தாத்தாவும் ஆவார்.

பார்வைக்கு :
Saturday, 30 Apr 2022 9:00 AM - 12:00 PM
Saturday, 30 Apr 2022 2:00 PM - 5:00 PM
Sunday, 01 May 2022 10:00 AM - 12:00 PM
Monday, 02 May 2022 2:00 PM - 5:30 PM
Tuesday, 03 May 2022 2:00 PM - 5:30 PM
Funérarium de Villeneuve-Saint-Georges Carrefour Jean Moulin, 94190 Villeneuve-Saint-Georges, France

கிரியை :
Wednesday, 04 May 2022 9:30 AM
Funérarium de Villeneuve-Saint-Georges Carrefour Jean Moulin, 94190 Villeneuve-Saint-Georges, France

தகனம் :
Wednesday, 04 May 2022 12:00 PM
Inter-communal cemetery Valenton 15 Av. de la Font Saint-Martin, 94460 Valenton, France

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**வரன் - மகன் Mobile : +33651513475**
**மனோ(பேபி) - மகன் Mobile : +33664114586**
**பாபு - பேறாமகன் Mobile : +33622671554**
**சுஜன் - பேரன் Mobile : +33650950578**

தகவல்:
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

பிறப்பு 14 - 02 - 1941



இறப்பு 25 - 04 - 2022

## சின்னப்பு கனகலிங்கம்

யாழ். நல்லூரைப் பிறப்பிடமாகவும், ஏழாலை, இந்தியா – திருச்சி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு கனகலிங்கம் கடந்த 25-04-2022 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சின்னப்பு – மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகனும், கனகமலர்(திருச்சி) அவர்களின் அன்புக் கணவரும்,சசிக்குமார்(சுவிஸ்), பிறதினி(ஜேர்மனி), லலிஜினி(கனடா), செந்தினி(கனடா), தீபன்(இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், யோகலிங்கம், துரைராஜா மற்றும் துரைசிங்கம், பாலசிங்கம், ஜெயராஜா, கமலாதேவி(சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,பங்கஜசெல்வி, பாலஸ்ரீ, மதனமோகன், உதயகுமார், கவிதா ஆகியோரின் அன்பு மாமனாரும்,

சிவமணி(கனடா), அருந்ததி, கௌரி, காந்தரூபி ஆகியோரின் அன்பு மைத்துனரும்,சஜிதா, சஜீபன், சாய்ராஜ், பிரவீன், பவிஷன், அதிஷன், லியாந், லவீன், மெலினா, நிதுஷா, சுபினா, அஸ்வின், அனோயன், அறிவுமதி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01-05-2022) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**சசிக்குமார் - மகன்**
**Mobile : +41782360110**
**பிறதி - மகள்**
**Mobile : +4915229199386**
**லலி - மகள்**
**Mobile : +16477392180**
**செந்தா - மகள்**
**Mobile : +12892009243**
**தீபன் - மகன்**
**Mobile : +917904833400**
**கமலாதேவி(பவா) - சகோதரி**
**Mobile : +41775001088**

தகவல்:
**குடும்பத்தினர்**

## பிரதமர்...

தேரர்கள் பங்கேற்றிருந்தனர்.

சங்க சம்மேளனத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை ரஜரட்டை பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி வண. ஒலகன்வத்தே சந்திரசிறி தேரர் வெளியிட்டார்.

"நாட்டில் அரசியல் ஸ்தீரத்தன்மையை ஏற்படுத்தி, பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கான யோசனைகள் முன்வைக்கப்பட்டு, அவற்றை செயற்படுத்தி மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கான அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டு, நாடாளுமன்றத்தை பலப்படுத்துவதற்கு தேவையான வகையில் அரசமைப்பு மறுசீரமைப்பு மேற்கொள்ளப்பட வேண்டும்.

மகாநாயக்க தேரர்களின் கோரிக்கையை ஏற்று, நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து கட்சிகளையும் உள்ளடக்கிய வகையில் சர்வக்கட்சி இடைக்கால அரசொன்றை அமைப்பதற்காக ,பிரதமர் உள்ளடங்கலான தற்போதைய அமைச்சரவை பதவி விலக வேண்டும்.

அவ்வாறு இல்லாவிட்டால் அனைத்து அரசியல் வாதிகளையும் நிராகரிக்கும் வகையில், மகாநாயக்க தேரர்களின் அனுமதியுடன் ஒன்றிணைந்த சங்க ஆணை பிறப்பிக்கப்படும்." - என்று கலாநிதி வண. ஒலகன்வத்தே சந்திரசிறி தேரர் குறிப்பிட்டார்.

அதேவேளை, பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கும், மகாசங்கத்தினருக்கும் இடையிலான சந்திப்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்றது. சர்வக்கட்சி இடைக்கால அரசமைப்பதற்கு கட்சிகளின் இணக்கப்பாட்டை பெறும் நோக்கிலேயே இக்கூட்டம் நடைபெற்றது. (அ)

## தமிழக பா.ஜ.க...

தலைவர் திருக்கேஸ் செல்லசாமி மற்றும் அரசியல் அமைப்பாளர்களான ரகு, கோபி ஆகியோர் தலைமையிலான குழுவினர் விமான நிலையத்தில் வரவேற்றனர்.

இன்று மலையகத்தில் நடைபெறும் இ.தொ.கவின் மே தின நிகழ்வில் பங்கேற்கும் அவர், வடக்கு மாகாணத்துக்கும் விஜயம் மேற்கொள்ளவுள்ளார். (அ)

## வடக்கு...

ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ்நாட்டு முதலமைச்சர், இலங்கையில் பொருளாதார நெருக்கடி நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்குவதற்காக பால்மா உணவு பொருட்கள் வழங்கும் செயற்பாட்டை நாங்கள் வரவேற்கின்றோம்.மேலும் அவர்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

அதேபோல தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களிற்கும் சட்ட சபை உறுப்பினர்களுக்கும் வடக்கு கடற்தொழிலாளர்கள் ஆகிய நாங்கள் ஒரு அன்பான வேண்டுகோளை விடுக்கின்றோம்.

தொப்புள் கொடி உறவாக இவ்வாறு நீங்கள் பாதிக்கப்பட்ட எங்களுக்கு உணவு பொருட்களை அனுப்ப முன் வந்து இருக்கிறீர்களோ அதே போலத்தான் எங்களது தொப்புள் கொடி உறவாகிய தமிழ்நாட்டு கடற்தொழிலாளர்கலாள் கடந்த பத்து வருடமாக நாங்கள் பாதிக்கப்பட்டு இருக்கின்றோம்.

அதனைத்தொடர்ந்து நாங்கள் இரண்டு இலட்சம் தொழிலாளர்கள் தமிழக இழுவை மடி தொழிலாளர்களால் பாதிக்கப்பட்டுள்ளோம்.

நாங்கள் கடந்த பத்து வருடங்களாக இழுவை மடி தொழிலை வடபகுதியில் நிறுத்துமாறு கோரி நாங்கள் போராட்டத்தில் ஈடுபட்டோம். பல்வேறு பேச்சு வார்த்தைகளை நடத்தி இருக்கிறோம் தமிழ்நாட்டு முதலமைச்சர் நமது தொப்புள்கொடி உறவுகளுக்கு நாங்கள் பகிரங்க மடல் கூட அனுப்பி இருந்தோம்.

நீங்கள் அது தொடர்பில் எந்தவிதமான ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கவில்லை அது மிகவும் கவலையளிக்கின்றது.நாங்கள் 50 ஆயிரம் குடும்பங்கள் இரண்டு லட்சம் மக்கள் இந்திய இழுவை மடி தொழிலால் பாதிக்கப்படுகின்றோம்.

எங்களுடைய தொழில் அழிக்கப்படுகின்றது வாழ்வாதாரம் அழிக்கப்படுகிறது சுற்றுச்சூழலுக்கு முரணான தொழில் முறையால் நாம் அழிக்கப்படுகின்றோம் அது பற்றி நீங்கள் பேசாமல் மௌனம் காத்து இருப்பது இந்த இரண்டு லட்சம் வடபகுதி தொழிலாளர்களுக்கு கவலை அளிக்கின்றது.

சட்டசபையில் உணவு பொருட்களை அனுப்புவதற்கு எடுத்த தீர்மானத்தை போல வடக்கு மீனவ தொழிலாளர்களுக்காக இழுவை மடி பிரச்னை தொடர்பில் நடவடிக்கை எடுக்கவேண்டும்-என்றார். (அ)

## இடைக்கால...

எம்மிடம் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் 113 இற்கும் மேற்பட்டோரின் ஆதரவு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசுக்கு இருக்கின்றபோது பிரதமர் பதவியை எப்படி இராஜிநாமா செய்ய முடியும் என்றும் பிரதமர் எம்மிடம் கேள்வி எழுப்பினார்.

பிரதமரின் இந்த நிலைப்பாட்டை நாம் வரவேற்கின்றோம். அவர் அரசமைப்பை மீறிச் செயற்படவில்லை. மக்கள் ஆணைக்கு மதிப்பளித்து அரசமைப்பின் பிரகாரமே அவர் செயற்படுகின்றார். குறுக்கு வழியில் பிரதமரைப் பதவியிலிருந்து விலக்கிவிட்டு ஆட்சியமைக்கத் துடிப்போர் இதைக் கவனத்தில்கொண்டு செயற்பட வேண்டும்-என்றார்.

எனினும், பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கி சர்வகட்சி அரசை அமைப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய அழைப்பு விடுத்துள்ளார்.

2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்குப் பின்னர் ஆளும் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்திய - தற்போது சுயாதீனமாகச் செயற்படும் கட்சித் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளுடன் நேற்று முற்பகல் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாட லின் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## தமிழக...

தமிழக சட்டப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதற்கு அனுமதி வழங்குமாறு இந்திய மத்திய அரசுக்கு தமிழக அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த நிலையில்வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோவிலில் சுவாமி தரிசனம் செய்தார்.

இதன்பின்னர் இந்திய ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது நாட்டில் நிலவக்கூடிய இந்த கஷ்ட காலத்தில் இந்திய மத்திய அரசு மூலமாக உதவி செய்ய முன்வந்த தமிழக முதல்வரை நேரில் சந்தித்து நன்றி தெரிவிப்பேன்.

இந்தியாவிடமிருந்து தற்போது மருத்துவ உதவிகள் கிடைத்துள்ளன. தொடர்ந்து எந்த மாதிரி நடவடிக்கைகள் தேவை என்பதை இலங்கை அரசு பரிசீலனை நடத்திவருகிறது.

தற்போதைய சூழலில் இலங்கை மக்களுக்கு இந்திய அரசு உணவுகளை தடையின்றி வழங்குவதே சிறந்த உதவியாக இருக்கும்.

இந்தியா தவிர்த்து மற்ற நாடுகளும் இலங்கை மக்களுக்கு உதவி செய்ய இலங்கை அரசு பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது - என்றார். (அ-03)

# எரிவாயு தட்டுப்பாடு மே வரை தொடரும்

கொழும்பு, மே. 01

தற்போதைய எரிவாயு தட்டுப்பாடு அடுத்த மாத இறுதிக்குள் சரி செய்யப்படுமென வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்திய கடன் திட்டத்தின் கீழ் லிற்றோ மற்றும் லாப்ஸ் நிறுவனங்களுக்குத் தேவையான நிதி வசதிகள் வழங்கப்படுமென அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இந்திய அரசாங்கத்தின் தலையீட்டுடன் மேலும் பல விநியோகஸ்தர்களை தெரிவு செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

உலக வங்கி எரிவாயு கொள்வனவுக்கு 90 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்கும். லிற்றோ மற்றும் லாப்ஸ் நிறுவனங்களின் சந்தை அளவுக்கேற்ப பணம் விநியோகிக்கப்படுமென அவர் தெரிவித்தார். (அ)

# விநியோகத்தில் இருந்து விலகும் தனியார் பவுசர் உரிமையாளர்கள்

கொழும்பு, மே. 01

நேற்று நள்ளிரவு முதல் எரிபொருள் விநியோக நடவடிக்கைகளில் இருந்து விலகுவதாக இலங்கை கனியவள தனியார் பவுசர் உரிமையாளர்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

எரிபொருள் விலை அதிகரிப்புக்கு இணையாக போக்குவரத்துக் கட்டண அதிகரிப்பு மேற்கொள்ளப்படாததன் காரணமாகவே இவ்வாறு எரிபொருள் விநியோகச் செயற்பாடுகளில் இருந்து விலகுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.நேற்று முன் தினம் இது தொடர்பில் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் கஞ்சன விஜேசேகரவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்தே குறித்த சங்கம் இதனைத் தெரிவித்தது.

# எரிபொருள் பௌசர் உரிமையாளர்களின் அனுமதியை ரத்துச் செய்யுமாறு உத்தரவு

கொழும்பு, மே. 01

தனியார் எரிபொருள் பௌசர் உரிமையாளர்களின் அனுமதியை ரத்துச் செய்யுமாறு அமைச்சர் கஞ்சன விஜேசேகர உத்தரவிட்டுள்ளார்.

தனியார் எரிபொருள் பௌசர் உரிமையாளர்கள் நேற்று நள்ளிரவு முதல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நிலையில் அமைச்சரின் உத்தரவு வெளியாகி உள்ளது.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தனியார் உரிமையாளர்களின் அனுமதியை ரத்து செய்து புதிய வழங்குனர்களுக்கு அனுமதி பத்திரம் வழங்குமாறு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ரயில்கள், அரசுக்கு சொந்தமான பௌசர்கள், எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு சொந்தமான பௌசர்கள் மற்றும் வேலை நிறுத்தத்தில் ஈடுபடாத தனியார் வாடகை பௌசர்கள் மூலம் சேவைகள் தொடரும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# 3ஆம் திகதி விழிப்புடன் இருக்கவும்!

## அனுரகுமார விடுத்துள்ள எச்சரிக்கை

கொழும்பு, மே. 01

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் மூன்றாம் திகதி இரகசிய ஆவணங்கள் சிலவற்றை வெளியிடப்போவதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.



ராஜபக்ஷ குடும்பம் மற்றும் அமைச்சர்களின் ஊழல் மோசடிகள் தொடர்பான கோப்புக்களை பொதுமக்களிடம் அவர் முன்வைக்கவுள்ளதாக அவர் இதற்கு முன்னர் அறிவித்திருந்தார்.

இந்த நிலையில் தற்போது சமூக வலைத்தளத்தில் இது குறித்த பதிவொன்றையும் அவர் இட்டுள்ளார்.

குறித்த பதிவில் "உரிமையாளர்களும் கோரியவர்களும் மே 03ஆம் திகதி விழிப்புடன் இருக்கவும்" என பதிவிட்டுள்ளார்.

தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் நெருக்கடி காரணமாக சமகால அரசாங்கத்தின் மீது பொதுமக்கள் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர்.

இந்த நிலையில், குறித்த ஆவணங்கள் ராஜபக்ஷ அரசாங்கத்தை கவிழ்க்கக் கூடிய ஆவணங்களாக இருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## மே தின...

பக்ஷவும், அவர் தலைமையிலான அரசும் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி நேற்று 5 ஆவது நாளாக தொடரும் பாத யாத்திரையில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அத்துடன், சர்வக்கட்சி இடைக்கால அரசில் ஐக்கிய மக்கள் சக்தி இணையாது என்பதையும் மீண்டும் திட்டவட்டமாக அறிவித்தார். (அ)

## லண்டன்...

குறித்த பகுதியில் இருந்து அரசுக்கு எதிராகவும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகக் கோரியும் பலர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (அ)

## கண்ணியத்துடன்...

எவ்வாறாயினும், அவர் தொடர்ந்தும் பதவியில் இருந்தால் நம்பிக்கை இல்லா பிரேரணையை தாக்கல் செய்ய வேண்டிவரும்.

நம்பிக்கையில்லா பிரேரணையின் ஊடாக மஹிந்த ராஜபக்ஷவை பதவியில் இருந்து நீக்குவது தமக்கு உகந்தது அல்ல. அதற்கு முன்னதாக அவர் பதவி விலக வேண்டும் என்று பணிவுடன் கோரிக்கை விடுத்து உள்ளோம்-என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

# ஜனாதிபதியின் முடிவை ஏற்றுக்கொள்ளத் தயார்!

## பிரதமர் மஹிந்த அறிவிப்பு



கொழும்பு, மே 01

பிரதமர் பதவி தொடர்பில் ஜனாதிபதி எடுக்கும் எந்த முடிவையும் ஏற்றுக் கொள்ள தயார் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயத்தை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன் தினம் ஆங்கில ஊடக மொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

அதன்படி, தனக்கு பதில் வேறொருவரை பிரதமராக நியமிப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்தால் அதனை ஏற்கத் தயார் எனவும் மஹிந்த குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ஜனாதிபதி எடுக்கும் தீர்மானங்களை மதிக்க வேண்டும் எனவும் மஹிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

புதிய பிரதமருடன் சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இணக்கம் தெரிவித்துள்ளதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் அறிவித்திருந்தார்.

அத்துடன் ஜனாதிபதி கோட்டாபயவுடன் இடம் பெற்ற பேச்சுவார்த்தை வெற்றியடைந்துள்ளதாகவும் அவர் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பொதுமக்கள் எதிர்பார்ப்பது அரசமைப்பு சீர்திருத்தமல்ல!

## வஜிர அபேவர்தன சுட்டிக்காட்டு

கொழும்பு, மே. 01

பொருளாதார நெருக்கடிக்கு அரசாங்கம் தீர்வு காணவேண்டும் என்று மாத்திரமே பொதுமக்கள் எதிர்பார்ப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள் ளது.

மாறாக இத்தருணத்தில் அரசியலமைப்புச் சீர்திருத் தங்களை மக்கள் எதிர்பார்க்கவில்லை என அந்தக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

மக்களுக்கு எரிவாயு, எரிபொருள், உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் சீராக வழங்கப்படாத நிலை தற்போதும் காணப்படுவதாக அவர் மேலும் கூறினார்.

இந்நிலையில் அரசியலமைப்பின் 19, 20 அல்லது 21 ஆவது திருத்தத்தை மக்கள் விரும்பவில்லை என வஜிர அபேவர்தன சுட்டிக்காட்டினார்.

மேலும் கடந்த அரசாங்கத்தில் அத்தியாவசியப் பொருட்களுக்கான விலையை ரணில் விக்கிரமசிங்க உறுதி செய்திருந்தார் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, பொதுமக்கள் போராட்டத்தில் சில அரசியல் கட்சிகள் தங்கள் தனிப்பட்ட நலன்களை அடைய முயற்சிப்பதற்காக வஜிர அபேவர்தன கடுமை யாக சாடினார். (அ)

# அக்கரைப்பற்று விபத்தில் இளைஞர்கள் இருவர் பலி!

அம்பாறை, மே 01

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று-பனங்காடு பாலத்திற்கு அருகில் நேற்றிரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர்கள் இருவர் உயிரிழந்தனர்.

இந்த விபத்தில் மேலும் ஒருவர் காயமடைந்த நிலை யில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் .

அம்பாறை மாவட்டம் திருக்கோவிலை சேர்ந்த இரு இளைஞர்களே இந்த விபத்து சம்பவத்தில் உயிரிழந்தனர் எனத் தெரியவந்துள்ளது.

விபத்தில் காயமடைந்தவர் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

# தாய்லாந்தில் இருந்து எரிவாயு கொள்வனவு!

கொழும்பு, மே 01

தாய்லாந்தில் இருந்து எரிவாயுவை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

புதிய ஒப்பந்தத்தின் கீழ் ஒரு மெற்றிக் தொன் எரி வாயு 95 டொலர் என தாய்லாந்தில் இருந்து வருடத் துக்கு 300,000 மெற்றிக் தொன் எரிவாயுவை வாங்குவ தாக நிறுவனம் கூறியுள்ளது.

முன்னர் ஓமானில் இருந்து கொள்வனவு செய்யப் பட்ட ஒரு மெற்றிக் தொன் எரிவாயுவுக்கு 105 டொலர் செலவானது என்றும் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதன்படி, தாய்லாந்தில் இருந்து எரிவாயுவை கொள்வனவு செய்வதன் மூலம் ஒரு மெற்றிக் தொன் ஒன்றுக்கு 10 டொலர் எனச் செலவை குறைக்க முடிந் துள்ளது என அந்த நிறுவனம் கூறியுள்ளது.

அதன்படி முன்பதிவு செய்யப்பட்ட எரிவாயுவின் முதல் தொகுதி தாய்லாந்தில் அடுத்த மாதம் இலங் கைக்கு வழங்கப்படும் என நிறுவனம் மேலும் கூறியுள் ளது. (அ)

# சீனாவில் மீண்டும் கொரோனா உச்சம்

## மார்ச் முதல் 500,000 பேர் பாதிப்பு - 337 பேர் பலி!

பீஜிங், மே 01

சீனாவின் ஷங்காய் நகரில் கடந்த மார்ச் மாதம் முதல் பரவி வரும் கொரோனா புதிய அலையால் இதுவரை 500,000 க்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள் ளனர். 337 பேர் பலியாகியுள்ளனர்.

இதேவேளை, பாதிக்கப்பட்டவர்களில் 10,000 பேர் 80 வயதுக்கு மேற்பட்டவர்கள் என ஷங்காய் நகர சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஷங்காய் நகரில் 5 வாரங்களுக்கு மேல் நீடிக்கும் பொது முடக்கம் காரணமாக முதியவர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

சீனாவில் கொரோனா தொற்றுக்குள்ளாகி பாதிக்கப் படுவோர் மற்றும் அவர்களுடன் நேரடித் தொடர்பு டையவர்கள் பிரத்தியேக இடங்களில் கட்டாய தனி மைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு கண்காணிக்கப் படுகின்றனர்.

இந்நிலையில் இவ்வாறான தனிமைப்படுத்தல் மையங் களுக்குச் செல்வோர் கடுமையான மன உளைச்சலுக்கு ஆளாவதாகவும் அடிப்படைத் தேவைகளுக்காக அவதிப்படுவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும் வயதானவர்கள் தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு செல்லும் போது உதவியாளர்கள் இன்றி கடுமையாக பாதிக்கப்படுகின்றனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சீனாவில் 20,000 க்கும் மேற்பட்டோருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

நாடு மோசமாக சுனாமி போன்ற ஒமிக்ரோன் பாதிப்பை எதிர்கொண்டு வருவதாக அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஷங்காய் நகரைத் தொடர்ந்து தலைநகர் பீஜிங்கில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட அபாயம் நிறைந்த பகுதிகள் அதிகரித்து வருவதால், அங்கு 2.1 கோடிக்கும் அதிகமான மக்களுக்கு கோவிட் பரி சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன், நேற்று சனிக்கிழமை முதல் பீஜிங்கில் கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட்டுள்ளன. பொது இடங்களுக்கு செல்ல வேண்டுமானால் அனைவரும் 48 மணி நேரத்திற்குள் எடுக்கப்பட்ட கொரோனா தொற் றில்லை என உறுதி செய்யப்பட்ட பரிசோதனை சான்றிதழை சமர்ப்பிக்கவேண்டும் என மாநகராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், பீய்ஜிங்கில் திருமணம் மற்றும் இறுதிச் சடங்குகளை நடத்த அரசு கடும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. பாடசாலைகளையும் மூட உத்தரவிடப் பட்டுள்ளது. (அ)

# வடக்கு - கிழக்கு கடற்பரப்பில் பயணிப்போருக்கு எச்சரிக்கை!

கொழும்பு, மே.01

வடக்கு மற்றும் கிழக்கு கடற்பரப்பில் காற்றின் வேகம் மணித்தியாலத் துக்கு 40 -60 கிலோ மீற்றர் வரை அதி கரித்து வீசக்கூடும் என்பதால், மீன்பிடி மற்றும் கடற் றொழில்களில் ஈடுபடு வர்கள் அவதானத்துடன் செயற் படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன்,

காங்கேசன்துறையிலிருந்து புத்தளம், கொழும்பு, காலி மற்றும் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரை யோரத்திற்கு அப்பாற்பட்ட ஆழமுள்ள மற்றும் ஆழம் குறைந்த கடற்பரப்பு களில் காற்றின் வேகம் இன்று மாலை முதல் அதிகரிக்கக்கூடும் எனவும்,

காலியில் இருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத் துவில் வரையிலான கடற் பரப்பில் ஆழமான மற்றும் ஆழம் குறைந்த கடற்பரப்பில் கடற்றொழி லாளர்கள் அவதானத்துடன் செயற்படு மாறும் வளிமண்டலவியல் திணைக் களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (அ)







# மோசடியாளர்கள் இடம்பெறாத இடைக்கால அரசே அவசியம்!

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, மே. 01

கடந்த காலங்களில் மோசடி அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளான நபர்களுடன் எதிர்காலத்தில் இடைக்கால அரசாங்கம் உருவாக்கப்பட்டால் அதற்கு தாம் எதிர்ப்பு வெளியிடுவோம் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர் களுக்கும் பகிரங்கக் கடிதம் ஒன்றை கையளித்துள்ளதாக அந்தச் சங்கத்தின் உறுப்பினர் வைத்தியர் சமில் விஜே சிங்க தெரிவித்தார்.

சர்வகட்சி அல்லது இடைக்கால அரசாங்கத்தை அமைக்கும்போது அரசாங்கம், பொதுமக்கள் மற்றும் நாட்டின் ஸ்திரத்தன்மையை நினைவில் கொள்ளவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

அந்தவகையில் நாடளாவிய ரீதியில் போராட்டம் நடத்தும் பொதுமக்களின் வேண்டுகோளுக்கு இணங் கவும் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும் தூய்மை யான அரசியலை மேற்கொள்ளவேண்டும் என அவர் மேலும் கூறினார். (அ)

# வவுனியா பாவற்குளம் வைத்தியசாலைக்கு 3.5 கோடி ரூபா செலவில் புதிய கட்டடம்!

வவுனியா, மே. 01

வவுனியா பாவற்குளம் வைத்தியசாலைக்கு 3.5 கோடி ரூபாய் பெறுமதியான தளபாடங்களுடன் கூடியதான விடுதி கட்டடத்துக்கான அடிக்கல் நேற்று நாட்டப்பட் டது.

இந்தக் கட்டடத்துக்கான அடிக்கல் கிராமிய பொரு ளாதாரப் பயிர்ச்செய்கை மற்றும் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் கே. கே. மஸ்தானால் நாட்டப்பட்டது.

பாவற்குளம் வைத்தியசாலை வைத்தியர் தலைமை யில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிராந்திய சுகாதாரசேவை பணிப்பாளர் மகேந்திரன், மற்றும் வைத்தியர்கள், தாதி யர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# நீரில் மூழ்கி சகோதரர்கள் உயிரிழப்பு!

கொழும்பு, மே. 01

வாரியபொல குருணவ பிரதேசத்தில் உள்ள வாவி யில் நேற்று முன்தினம் மாலை நீராடச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்கள் 43 மற்றும் 34 வய துடைய சகோதரர்கள் என தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் உயிரழந்தவர்களின் சடலங்கள் வாரிய பொல வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.05.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இலங்கை தினசரி
மற்றும் வாரந்த
பத்திரிகைகளை
உங்கள்
மொபைலில்
பெற்றுக்கொள்ள
எம்மோடு
இணையுங்கள்

Viber இல் இணைய
இங்கே CLICK
செய்யுங்கள்

Viber




இக் குழுமத்தில் இணைவதனால்
மற்றவர்கள் உங்கள்
தொலைபேசி இலக்கத்தை
பார்வையிட முடியாது

CLICK

